
கல்கி

KALKI 26.7.92 ரூ. 3.00

பொன்விழா ஆண்டு



வெற்றிக் களிப்பும்: தோல்வியின் துடிப்பும்!

இவர்கள் அனைவரும் உங்கள் இல்லத்திற்கு வந்தால்,
அவர்கள் பருக எதை வழங்குவீர்கள்...




ஒவ்வொரு சாகர் ஸ்கிம்ட் மில்க் பவுடர் பேக் உங்களுக்கு வளமான புரதச் சத்துள்ள $5^1/_4$ லிட்டர் பாலைத் தருகிறது ஆம்! இத்தனை எளிதாக இவ்வளவு பாலை நீங்கள் இதுவரை தயாரித்தது இல்லை. அபரிமிதமான பாலைப் பெற, இன்றே வாங்குங்கள் சாகர்.

குஜராத் கோ ஆபரேடிவ் மில்க் மார்க்கெட்டிங் பெடரேஷன் லிட்., ஆனந்த் 388 001.

ASP-SSMP-106/92 TAM





●● பெரிய பெரிய ஜாம்பவான்களே, கவர்ச்சியைத் தவிர்க்க முடியாத போது, பானுப்ரியா எம் மாத்திரம்? 'உப்புப் போடுறதாலே தானே உணவுப் பொருள் ருசியாகிறது. அந்த மாதிரி கேரக்டருக்கும் கதைக்கும் தகுந்த மாதிரி கொஞ்சம் கவர்ச்சி காட்டி நடிப்பதில் என்ன தவறு?' என்று சமரசத்திற்கு வந்திருக்கிறார், நவரசநாயகி.



●● ''ஒரு படத்தைத் திறனாய்வு செய்து விமர்சனம் எழுத எந்தப் பத்திரிகையாளருக்கும் தெரியவில்லை!'' என்கிறார் பாரதிராஜா. இனியாவது பத்திரிகையாளர்கள் கற்றுக் கொள்வார்களா?

●● 'எத்தனை முகங்கள், எத்தனை முகங்கள்! எங்கே போயின எங்கள் முகங்கள்?' என்று மற்ற நடிகைகளைப் போல் விளம்பரப் படத்தில் பாடிக் கொண்டிருக்கவில்லை சிதாரா. தமது முகத்தை முழு மூச்சுடன் ஆன்மீகத்தில் தேடிக் கொண்டிருக்கிறார். ஆமாம்; படப்பிடிப்பு இல்லாத சமயங்களில் காவி உடையுடன்தான் காட்சியளிக்கிறார் அவர்.

கவர்ச்சி படுத்தும் பாடு!

●● ''யதார்த்தமான படைப்புகளின் மூலம் மக்களைச் சந்திக்க வேண்டுமென்பதுதான் எனது விருப்பம். ஆனால், இப்போது திரையுலகம் இருக்கும் சூழ்நிலையில், பணம் போடும் தயாரிப்பாளர்களையும் கருத்தில் கொண்டுதான் படம் எடுக்க வேண்டியிருக்கிறது. அதனால் என்னை நானே மாற்றிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகிவிட்டது. இருந்தாலும் கூட என் கமர்ஷியல் படங்களிலும் கலை நயம் இருக்கும்!'' என்கிறார் பாலு மகேந்திரா.

இவரைப் போல் இலை மறை காய் மறையாகப் போகத் தயாராக இல்லை, ஸ்ரீதரும், கே. பாலசந்தரும், பாரதிராஜாவும். ஒரு படத்தின் வெற்றி விழாவில் கலந்து கொண்டு பேசிய இம் மூவருமே, ''இந்தக் காலத்தில் கவர்ச்சி கலந்த கமர்ஷியல் படங்களுக்குத்தான் வரவேற்பு அதிகம். இன்று கவர்ச்சிக்கு முன்னோடியாக இருப்பவர் குஷ்பு. எனவே, நாங்களும் அவரை வைத்துக் கமர்ஷியல் படங்களை எடுக்கப் போகிறோம்!' என்று பேசினார்கள். நாமெல்லாம் நம்பிக்கை வைத்திருக்கும் இவர்களே இப்படிக் கீழே இறங்கி வந்தால், மக்களின் ரசனை என்றைக்குத் தான் உயரப் போகிறதோ!

●● அந்தக் காலத்துச் சினிமா நகைச்சுவை என்பது மக்களைச் சிரிக்க வைத்ததோடு சிந்திக்கவும் வைத்தது. ஆனால் இன்றைக்கோ கொச்சை வசனங்களின் ஆதிக்கம் அதிகமாகி, நகைச்சுவையின் தரமே தாழ்ந்து போய் விட்டது! இப்படி ஆதங்கப் படுவது நாம் மட்டுமல்ல; ஆயிரம் படம் கண்ட ஆச்சியான மனோரமாவும்தான்.



– கலைத்தூதன்

சேலம் நகர ரவுண்ட்-அப் :

கல்லூரித் தேர்தலில் கூட கட்-அவுட் கலாசாரம்!

“பத்து, இருபது வருடங்களுக்கு முன்னால் சேலம் நகருக்கு வந்தவர்கள், மறுபடி இப்போது வந்தால் என்ன சொல்லுவார்கள் தெரியுமா? ஈரோடும், கோவையும் எவ்வளவோ மாறிவிட்டன. சேலம் மட்டும் பழையபடியேதான் இருக்கிறது! என்பார்கள். அது தான் வருந்தப்படக் கூடிய விஷயம்!'' என்றார் ஒரு நீண்ட நாள் சேலம்வாசி.

வாருங்களேன், ஊரை ஒரு சுற்றுச் சுற்றுவோம்!

* ஆமை வேகத்தில் பாதாள சாக்கடைத் திட்டம்.....



கோளாறு இயந்திரத்தில்தானா?

எல்லா அரசுப் பொது மருத்துவமனைகளுக்கும் உள்ள சாபக்கேடான குருப்பிஸம் இங்கேயும் உண்டு. இதில் மாட்டிக் கொண்டு தவிப்பவர்கள் சிகிச்சைக்கு வரும் நோயாளிகள்தாம். மூன்று டயாலிஸிஸ் இயந்திரங்கள் இருந்தாலும், ஒன்றுகூட இயங்காது. காரணம், நோயாளிகள் மீதுள்ள கருணைதான். அப்போதுதானே அவர்கள் தனியார் மருத்துவமனைகளில் போய்ச் சிரமச் சிகிச்சை பெற முடியும்? அவர்களும் 'பிழைக்க' வேண்டாமா? ''மருத்துவர்கள் கம்பவுண்டர்கள், நர்ஸ்கள், ஆயாக்கள் செய்யும் ஊழல் மிக அதிகம்'' என்கிறார் ஒரு பெண்மணி. ''பால், ரொட்டி, முட்டை எல்லாம் இங்கு பணியாற்றும் ஊழியர்கள் வீட்டுக் குழந்தைகளுக்குப் போய்விடும்; மருந்து, டானிக் எல்லாம் வீட்டு ஃப்ரிஜ்ஜுக்குப் போய், பிறகு விற்பனையாகி விடும்'' என்பது இவரது குற்றச் சாட்டு.

உயிரை வாங்கும் பாலம் :

மரவனேரி தாண்டி அணைமேடு பாலம் இருக்கிறதே, வேடிக்கையான பாலம். ஆத்தூர், விழுப்புரம் வழியாகச் சென்னை செல்லும் பஸ்கள் எல்லாம் இந்த வழியாகத்தான் போகின்றன. எதிரும் புதிருமாக இரண்டு பஸ்கள் வந்தால் போச்சு. உரசாமல் போய்ச் சேருவதற்குள் உன்பாடு என்பாடு என்றாகிவிடும். வாக்குவாதங்கள் வேறு. மழை வந்தால் அம்போ! தண்ணீரில் மிதக்கும் பாலம். இந்தப் புறம் ஏறிவந்தால் ரயில்வே கேட். பஸ் வருகிற சமயம் கேட் மூடிவிட்டால், பஸ்ஸில் மருத்துவமனை செல்லும் நோயாளிகள் பாடு திண்டாட்டம்தான். ஆனந்தா ஓட்டல் அருகேயும் இப்படியே ஒரு பாலம். ''உயிரை வாங்குதுங்க'' என்கிறார் அலுத்துப்போன ஒரு சேலம்வாசி சலிப்புடன்.



* மூக்கைப்பிடிக்க வைக்கும் மணிமுத்தாறு



● சேலம் ஜி.எச்.

பிட்ட நேரத்தில் விடுவது என்று நிர்ணயித்துவிட்டால் எங்களைப் போன்ற குடும்பத் தலைவிகளுக்கு எத்தனை உபகாரமாய் இருக்கும்!'' என்கிறார் திருமதி சந்தியா. மரவனேரிவாசி.

மூக்கைப் பிடிக்க வைக்கும் மூத்தாறு :

நகரைச் சுற்றி வரும் போது, பல முறை பிராணாயாமம் பண்ணுகிற மாதிரி மூக்கைப் பிடித்துக் கொண்டுதான் ஆக வேண்டும். முடிந்தால் கண்ணையும் மூடிக் கொள்ளலாம். திருமணிமுத்தாறு நாற்றமெடுத்து நம்மை மூச்சுத் திணற வைக்கிறது. பன்றிகள் உல்லாசமாக ஓடி ஆடி மகிழ்கின்றன. சேலத்தின் கரும்புள்ளி என்றால் இதுதான்! இப்படியொரு பெருமைக் காகத்தானோ என்னவோ நகரின் பாதாளச் சாக்கடைத் திட்டம் படு ஸ்லோவாக நடந்து கொண்டிருக்கிறது.



● சந்தியா

கல்லூரி வாசலில் கட்-அவுட் :

மரவனேரி தாண்டி இப்படி வாருங்கள். சேலம் அரசினர் கல்லூரி. கல்லூரி உருவான அந்தக் காலத்தில், கல்லூரி முதல்வர் கணித மேதை இராமசாமிக் கவுண்டர், மாலை நேரங்களில் தமது குடையை எடுத்துக் கொண்டு சேலம் நகரிலுள்ள செவ்வாய்ப் பேட்டை, குகை, அம்மாப் பேட்டை, குமாரசாமிப்பட்டி என்று நடந்தே போவாராம். அந்தந்தப் பகுதியில் உள்ள பெரியவர்களைச் சந்தித்து, ''உங்களுக்கு உள்ள மூன்று நான்கு பிள்ளைகளில் ஒருவரைக் கல்லூரிக்கு அனுப்புங்களேன்'' என்று உரிமையோடு சொல்லி, மாணவர்களைக் கொண்டு வந்து சேர்த்தாராம். அதெல்லாம் அந்தக் காலம்! இப்போதோ, வாசலில் கல்லூரித் தேர்தல் வாசகங்களுடன், சமீபத்திய அரசியல் நிலவரப்படி நிறுத்திவைக்கப்பட்டுள்ள கட்- அவுட் மாணவர்!

ஆலயம் வைத்தவுடன் ஆக்கிரமிப்பு :

சேலத்துக்காரர் ஒருவர் நொந்து போய்ச் சொன்னார்: ''இட ஆக்கிரமிப்பு சர்வ சகஜம் சார் இங்கே! ஜங்ஷனில் இருந்து வருகிற வழியில் பாருங்கள். ஒரு சின்னக் கோயில் கட்ட வேண்டியது. பக்கத்திலேயே ஒரு கடை அல்லது வீடு. இருக்க இடம்; வரும்படிக்கு வரும்படி!''

பஸ்கள் தொடாத சத்திரம் :

செவ்வாய்ப்பேட்டை ரயில் வே ஸ்டேஷனையொட்டி, அமைந்திருக்கும்,

● ஆட்கொல்லிப் பாலம்



தண்ணீர், தண்ணீர் :

''இரவு எத்தனை மணிக்குத் தண்ணீர் விடுவார்கள் என்று தெரியாது. காத்திருந்து காத்திருந்து கண் சொக்கிப் போகும். ஒரு குடிப்



● புதிய பஸ் நிலையம்.....

மேம்பாலத்தின் கீழ் இருக்கிற சத்திரம் பஸ் ஸ்டாப்பை பஸ்கள் கண்டு கொள்ளுவதே இல்லை. பயணிகள் செவ்வாய்ப்பேட்டையின் பிற பகுதிகளை அடைய, ஆட்டோவின் தயவை நாட வேண்டியதுதான். ''என்றைக்கு இதற்கு விமோசனம் பிறக்கும்?'' என்கிறார் ஓர் இளைஞர்.

பலே, பஸ்ஸ்டாண்ட்!

இடியாப்பச் சிக்கல் பார்த்திருக்கிறீர்களா? புது பஸ் ஸ்டாண்டுக்கும் இதற்கும் அதிக வித்தியாசமில்லை. சாலையை விட்டுச் சற்றே பள்ளத்தில் இருக்கும் படு குழப்பமான பஸ் ஸ்டாண்ட். மழை வந்தால் வாழ்க்கையே வெறுத்துவிடும், பஸ் ஸ்டாண்டிலிருந்து வெளியேறி வருவதற்குள்!

அதிரவைக்கும் ஆட்டோ கட்டணம் :

ஸ்டாண்டிலிருந்து கட்டணம் பேசினால், பல பயணிகளுக்குத் தலை சுற்றும். நமக்கே அப்படித்தான் இருந்தது ஊரில் வந்து இறங்கி, ஓட்டல் பெயரைச் சொன்னதும், ''என்னய்யா ஆட்டோவின் விலையையே சொல்லுகிறீர்?'' என்றோம் அதிர்ந்துபோய். ''காலங்காத்தால மண்டையக் காய வைக்காதீங்க சார்!'' என்றார் ஆட்டோ ஓட்டுனர் அன்பான கடுகடுப்புடன். (மீட்டர் என்ற ஒன்றை இம் மாதிரி இடங்களில் எதற்கு அநாவசியமாகப் பொருத்த வேண்டும்? கழற்றி எறிந்து விடலாமே?)

சங்கடமான சாலைப் போக்குவரத்து :

சாரதா கல்லூரிச் சாலையில் கல்லூரி மட்டுமல்ல; பள்ளிக் கூடங்களும் இருக்கின்றன. படுபயங்கரமாய் ஓடும் வாகனங்கள் பள்ளிச் சிறுவர் சிறுமியருக்கு ஆபத்தானவைதாம். சின்னக்கடைத் தெரு, பஜார் தெரு, தேரடி, முதல் அக்ரஹாரம் ஆகியவை என்றைக்குப் பாதசாரிகள் பத்திரமாகப் போய்வரப் பயன்படுமோ? சென்னை போல டிராஃபிக் வார்டன் முறையை இங்கேயும் கொண்டு வரலாமே!

'ஜெ' கண்ணில் படாதது ஏன்?

தமிழ்நாட்டின் முதல் உள்-விளையாட்டரங்கம் (அரசு சார்பான) சேலத்தில் தான் இருக்கிறது என்று பெருமையுடன் சொல்லிக் கொள்ளலாம். 1990 - ல் கலைஞரால் திறந்து வைக்கப்பட்டது. தரையே இன்னும் சரியாகப் போடவில்லையே? அவசரப்பட்டுத் திறந்துவிட்டார்களோ? கராத்தே வகுப்புகள் நடைபெறுகிறதாம்... அது சரி, அன்னை அஞ்சுகம் பெயர் வைக்கப்பட்டிருக்கிறதே, இந்த உள்-விளையாட்டரங்கத்துக்கு? 'ஜெ' கண்ணில் இன்னுமா படவில்லை?

திடுக்கிட வைக்கும் தியேட்டர்கள் :

இடை வேளையின் போது வீட்டோடு வீட்டாக இருந்தால் பிழைத்தீர்கள். தியேட்டர்களில் டாய்லெட்டுப் பக்கம் போனீர்களோ, மூக்கு போச்சு! கிட்டத்தட்ட எல்லா தியேட்டர்களிலும் இதே நிலைதான் - 'கீர்த்தனா' நீங்கலாக. 'பிளாக்'கில் டிக்கட் விற்பனை பல தியேட்டர்களில் அமோகமாக நடக்கிறது. ஏசி இருக்கிற தியேட்டரில் அதைப் போடுவதில்லை. ஏன் என்று கேட்டால், ஏசி விடுவார்கள் ஏசி. எதற்கு வம்பு என்று சேலத்து மக்கள் கைகட்டி வாய்பொத்தி இருக்கிறார்கள். இத்தனைக்கும் நகரவாசிகளுக்கு ஒரே பொழுது போக்கு சினிமாதான்!

- நமது நிருபர்கள்

வெற்றிக் களிப்பும்; தோல்வியின் துடிப்பும்!

- பொன். இளங்கோ விளக்குகிறார்....

விம்பிள்டன்-92, வெறும் டென்னிஸ் ஆட்டப் போட்டி மட்டும் அல்ல. விளையாட்டை மட்டுமே ரசிப்பவர்களுக்கு, அகஸ்ஸியும், ஸ்டெஃபி கிராஃபும், வீரரும், வீராங்கனையுமாகத் தெரிவார்கள். மெக்கன்ரோவும், செலஸ்ஸும் தோத்தாங்குளியாக மட்டுமே தெரிவார்கள். ஆனால் அதுவா உண்மை? அல்ல. ஆழமான செய்தி ஒன்றை இவை உணர்த்துகின்றன.

வெற்றிக் களிப்பில் தன் வசம் இழந்து குதிப்பதும், தோல்வித் துடிப்பில் துவண்டு போவதும் அந்தச் சமயத்தில் மட்டுமே.

ஒரு பெரிய போட்டியில் கூட வென்றிராத ஆந்த்ரே அகஸ்ஸியா விம்பிள்டனில் வெல்லப்போகிறார் என்றுதானே எல்லாருமே அலட்சியமாக நினைத்திருந்தார்கள்! ஆனால் தோல்விகளே அகஸ்ஸிக்கு வெற்றிக்குப் படிகளாயின.

''இந்த வெற்றியை என்னாலேயே நம்ப முடியவில்லை. நாளைக்கே நான் டென்னிஸ்ஸை விட்டு விட நேர்ந்தால் கூட, இதற்கு மேல் இனி எனக்கு ஒன்றுமே வேண்டாம்!'' என்று வெற்றி பெற்ற களிப்பில் தம்மை மறந்து சொல்லியிருக்கிறார் அகஸ்ஸி.

வெற்றி பெற்றவுடன் ஸ்டெஃபி கிராஃப் சொன்னார் : ''என் தன்னம்பிக்கைதான் என்னை ஆட வைத்தது. எனக்குத் தெரியும் - எனக்குள் அது நிறையவே இருந்தது!''

''என்னைவிட ஒருபடி நன்றாகவே ஆடினாள் ஸ்டெஃபி கிராஃப்!'' என்று தோற்றுப் போன மோனிகா செலஸ் சொன்னார். ஆனால் அடுத்த வருடம் ஆட்டக்களத்தில் அவர் மறுபடி தோன்றாமலா போகப் போகிறார்?

ஐந்து வெற்றிகளுக்குப் பிறகு, அகஸ்ஸியிடம் விம்பிள்டன் அரையிறுதியில் 6-4, 6-2, 6-3 என்று தோற்ற போது, ''ஐயோ எல்லாம் போச்சே!'' என்கிற மாதிரி ராக்கெட்டைக் கீழே போட்டுவிட்டுச் சரிந்தார் மெக்கன்ரோ.

ஆனால் டென்னிஸ் கோர்ட்டிலிருந்து, டிரஸ்ஸிங் ரூமுக்கு வந்தவர் என்ன சொன்னார் தெரியுமா?

''நான் ஆடுவேன் - அடுத்த வருடமும்!''

வெற்றிகள் எல்லாம் நிரந்தர வெற்றிகளல்ல.

தோல்விகளும் நிரந்தரத் தோல்விகள் அல்ல.

•

வருடா வருடம் விம்பிள்டன் சொல்லும் செய்தி இதுதான்.



சென்னை கீழ்ப்பாக்கம் பார்வதி சாலையில் நான் என் பெற்றோருடன் வசித்த போது, நடந்த நிகழ்ச்சி நினைவிற்கு வருகிறது.

அது மே மாதம். மாங்காய்ப் பருவம். வீட்டைச் சுற்றி நிறைய மாமரங்கள் இருந்தன. மதிய வேளை. உலர்ந்த துணிகளை எடுத்து வருவதற்காக மாடிக்குச் சென்றேன்.. தெருவில் ஒரு சிறுவன் சுற்று முற்றும் பார்த்துவிட்டு, தெரு ஓரமாக இருந்த மாங்காயைக் குறிவைத்துக் கல் எறிந்தான். மாங்காய் விழவில்லை. கல், மதில் சுவருக்கு உள்ளே விழுந்துவிட்டது. அந்தச் சிறுவனுக்கு வேறு கல் கிடைக்கவில்லை. சிறுவன் சுவரேறிக்குதித்து உள்ளே வந்தான். கையில் லேசான சிராய்ப்பு. அதை அவன் பொருட்படுத்தவில்லை. கல்லை எடுத்துச் சென்று மறுபடி எறிந்தான். குறி தவறியது. கல் உள்ளே விழுந்தது. மூன்று முறை

இப்படி நடந்தது. நான்காம் முறை மாங்காய் விழுந்தது. அதை எடுத்துச் சுவைக்கும் பொழுது அவன் முகம் மலர்ந்த மலர்ச்சி!

பொதுவாக முதல் முயற்சியிலேயே வெற்றி பெறுபவர்கள், பின்னர் நிறையவே தோல்விகளைச் சந்திக்கிறார்கள். முதலில் தோல்வி அடைந்து, பின்னர் வெற்றி அடைபவர்கள், நிறைய வெற்றிகளைச் சந்திக்கிறார்கள்.

இதற்குக் காரணம் என்ன?

முதல் முயற்சியிலேயே வெற்றி அடைபவர், அவருடைய குறைகள் என்ன என்பதை அறியும் வாய்ப்பை இழந்து விடுகிறார். அதனால் குறைகளைச் சரி செய்து கொள்ளும் வாய்ப்பே இல்லாமல் போய் விடுகிறது இவருக்கு. ஒரு நண்பர் முதலில் செஸ் ஆட அமர்ந்த போது, அவருக்கு எதிராக ஆடியவரே எப்படி ஆட வேண்டும் என்று அவருக்குச் சொல்லிக் கொடுத்தார். அந்த ஆட்டத்தில், முதல் ஆட்டத்தில், ஆடச் சொல்லிக் கொடுத்தவரையே வென்று அவரைப் பிரமிப்பில் ஆழ்த்தினார் நண்பர். ஆனால் அத்தோடு சரி! அப்புறம் நண்பருக்குத் தோல்விகளே.

ஆனால் முதல் சில முயற்சிகளிலே தோல்வி அடைபவர்கள், தம் குறைகளை ஆராய்ந்து சரி செய்து கொள்ள வாய்ப்புப் பெறுவதால், பின்னர் எப்பொழுதும் வெற்றி பெறுகிறார்கள். 1865 - ல் ஜே.என். டாட்டா தம்முடைய எல்லாச் சொத்துக்களையும் விற்றுக் கடனை அடைத்ததை நினைத்துப் பாருங்கள். தோல்விகள் வெற்றிக்குப் படியமைத்துத் தந்திருக்கின்றன என்பது புரியும்.

வெற்றிக் களிப்பில் துள்ளிக் குதித்தாரே அகஸ்ஸி? தோல்வியின் தாக்கத்தால் துவண்டு வீழ்ந்தாரே மெக்கன்ரோ?

மனவியல் துறையைச் சேர்ந்தவர்கள், இவற்றை அந்த நிமிடத்து உணர்ச்சி வெளிப்பாடு என்பார்கள். மனித இயல்பை நுணுக்கமாக அறிந்தவர்கள் இதை ஒப்புக் கொள்ளுவார்கள். ஆனால் அந்த நிமிட உணர்ச்சியை விட அதற்கு அடுத்த நிமிஷத்தில் என்ன நடந்தது என்பதுதான் முக்கியம். மறு நிமிடமே, "அவர் மாஸ்டர்! அவர் அருமையாகத்தான் ஆடினார்!" என்று மெக்கன் ரோவைப் பாராட்டவில்லையா அகஸ்ஸி? துவண்டு வீழ்ந்த மெக்கன்ரோ, "அடுத்த வருடமும் ஆட வருவேன்!" என்று அடுத்த நிமிடமே உறுதி சொல்லவில்லையா?

வேலை, சொந்தத் தொழில், வியாபாரம், பரீட்சை, காதல், விளையாட்டுப் போட்டிகள் - எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். வெற்றிக்கு வழி முறைகள் இதோ :



● நம்மால் வெற்றி பெற முடியும் என்று நம்புங்கள். முயற்சி செய்து தோல்வி அடைவது, முயற்சி செய்யாமல் இருப்பதைக் காட்டிலும் பல மடங்கு மேன்மையானது என்று உங்கள் மனத்திடம் சொல்லுங்கள்.

● தகுந்த முன் முயற்சி - பிரபரேஷன்ஸ் - செய்யுங்கள்.

● உங்கள் முழு ஆற்றலையும் ஒருமுகப்படுத்தி அச் செயலில் ஈடுபடுங்கள். கண்ணாடி வில்லையை உபயோகித்துச் சூரியக் கதிர்களை ஒன்றுபடுத்தினால் காகிதத்தை எரிக்க முடியும் என்பதை நினைத்துப் பாருங்கள்.

● வெற்றி பெறாவிட்டால் மனம் தளராதீர்கள். தோல்வி என்பது அந்தச் செயலில், அந்த முயற்சியில், தோல்வி என்று மட்டுமே பொருள். அனைத்துச் செயல்களிலும், அனைத்து முயற்சிகளிலும் தோல்வி என்று நாமாகக் கற்பனை செய்து கொள்ளலாகாது.

● உங்கள் முன்-முயற்சி, முழு ஆற்றல் இரண்டையும் செம்மைப் படுத்துங்கள். மறுபடி முயற்சி செய்யுங்கள். "மூன்று முறை முயன்று விட்டேன்!" என்று முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைக்காதீர்கள்.

● டாக்டர் யங் கூறியதை நினைவில் கொள்ளுங்கள் : "எந்த ஒரு மனித சாதனையையும் இன்னொரு மனிதனால் சாதிக்க முடியும்!"

அகஸ்ஸி, மெக்கன்ரோ : அட்டை வண்ணஓவியம் : ஸ்யாம்




மதுவாழ்விலிருந்து புது வாழ்வுக்கு...

சேலம் - திருச்சி மாவட்டங்களை ஒட்டிய கிராமத்தில் வசிப்பவர் சந்திரன். நான்கு அண்ணன் தம்பிகள் கொண்ட குடும்பம். சந்திரன் தான் மூத்தவர். ஒரு வருடத்துக்கு முன்னர், பக்கத்து டவுனுக்கு டிராக்டர் பாகம் ஒன்றை வாங்கப் போனவர், பழைய நண்பன் ஒருவனைச் சந்தித்தார். அவனோ குடிப் பழக்கம் உள்ளவன். சந்திரனை வற்புறுத்திக் குடிக்க வைக்க, பழக்கம் தொற்றிக் கொண்டது!

வாரத்துக்கு ஒரு தடவை என்று துவங்கி, பின்னர் தினமும் என்று மாறிவிட சந்திரனின் குடும்பச் சூழல் நரகமானது. மற்ற சகோதரர்கள் வீடு, டிராக்டர்கள் என்று வாழ்வாக வாழ, சந்திரனின் வருமானம் குடிப்பதிலேயே செலவழிந்தது.

• அப்துல் ஜப்பார்





இந்த நிலையைப் பார்த்த சந்திரனின் நண்பர் கணேசன், பல அறிவுரைகளைச் சொல்லி அவரைப் 'புதுவாழ்வு' ஆலோசனை மையத்துக்கு அழைத்து வந்தார். இப்போது குடிப் பழக்கத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக மீண்டு வருகிறார் சந்திரன். இவரைப் போலக் குடி, போதை மருந்துகள் பழக்கத்திற்கு அடிமையான நூற்றுக் கணக்கான நபர்களை மது வாழ்விலிருந்து விடுவித்துப் புதுவாழ்வுக்குக் கொண்டு வரும் நற்பணியைச் செய்து வருகிறது சேலத்தில் உள்ள புதுவாழ்வு ஆலோசனை மையம்.

இந்திய குற்றவியல் சங்கத்தால் தமிழ் நாட்டில் மூன்று மையங்கள் இதுபோல் நடத்தப்படுகின்றன. அதில் ஒன்றுதான் சேலம் மையம். மத்திய அரசின் நிதி உதவி இந்த மையத்திற்குக் கிடைத்து வருகிறது.

மனநல மருத்துவர், மனவியல் நிபுணர் மற்றும், முழு நேர சமூக நலப் பணியாளர்கள், மையத்தில் பணியாற்றுகிறார்கள்.

''ஒருவன் குடிப் பழக்கத்துக்கு ஆளாவது பெரும்பாலும் அதே பழக்கமுள்ள நண்பர்கள் மூலமாகத்தான். சந்தோஷம், துக்கம் இரண்டிற்கும் குடியை நாடுகிறார்கள். ஒருவன் எங்கள் மையத்திற்குச் சிகிச்சைக்கு வந்து விட்டாலே திருந்தி விடுவான் என்று சொல்ல முடியாது. அவனுக்கு மன வலிமை உண்டாக வேண்டும். குடும்பம் எப்படிப் பாதிக்கப்படுகிறது என்பதையும் சமூகத்தில் அவன் அவமானச் சின்னமாக விளங்குவது பற்றியும், புரியும்படி சொல்கிறோம். சிலர் பணக் கஷ்டம், கடன் தொல்லை, ஆபீஸில் பிரச்னை என்றெல்லாம் சொல்லுவார்கள். குடிப்பதினால், எந்தப் பிரச்னைக்கும் தீர்வு வராது என்பதையும் மாறாக, அதிகமாகும் என்பதையும் புரிய வைப்போம்.

''குடிப் பழக்கத்திற்கு ஆளானவதால் உடல் நிலை பாதிக்கப்பட்டிருப்பதைச் சொல்லுகிறோம். உடலுக்கு மருந்து கொடுக்கும் அதே வேளையில், மனத்தையும் வலிமைப்படுத்துகிறோம். எங்களிடம் சிகிச்சைக்கு வருபவர்கள் கல்யாணம் ஆகாதவர்களாக இருந்தால், அப்பாவுடனும், கல்யாணமானவர்களாக இருந்தால், மனைவியுடனும் வர வேண்டும். அப்போதுதான், குடிப்பழக்கத்துக்கு ஆளானவரின் முன்னேற்றம் எங்களுக்குச் சுலபமாகத் தெரிய வரும்!'' என்கிறார் மனநல மருத்துவர் டாக்டர் அப்துல் ஜப்பார்.

''குடித்துவிட்டு வந்து கொடுமைப் படுத்தும் கணவரிடமிருந்து தப்பிக்க சில பெண்கள், தங்கள் கணவரை, 'வீட்டிலேயே குடியுங்கள்!' என்று சொல்லித் தாங்களே ஊற்றிக் கொடுத்துத் தூங்க வைத்து விடுகிறார்கள். சிலர் குடும்ப மானத்திற்குப் பயந்து, கணவனின் குடிப்பழக்கத்தை மூடி மறைக்கிறார்கள். இவை மிகவும் தவறான போக்கு என்பதை அவர்கள் உணர வேண்டும். இப்படிப்பட்டவர்களுக்கு நேர்மாறாக ஒரு பெண்மணி புதுவாழ்வு மையத்திற்கு வந்து, 'ஏதாவது மருந்து கொடுத்து என் கணவரைக் கொன்று விடுங்கள்' என்று சொன்னார். எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டு இருந்தால் அப்படிச் சொல்லியிருப்பார் பாருங்கள்!'' என்கிறார் டாக்டர்.

மையத்தில் மாதம் ஒரு முறை, சிகிச்சை பெறுபவர்களின் கலந்துரையாடல் நடக்கிறது. முற்றிலும் திருந்தியவர்கள் தங்கள் அனுபவங்களை மற்றவர்களுக்கு விளக்குகிறார்கள். இதன் மூலம் சிகிச்சை பெறும் மற்றவர்களுக்கும் வாழ்க்கையின் வசந்தம் புரிகிறது.

''எங்களிடம் சிகிச்சைக்கு வருபவர்களில் திருந்திய சதவிகிதத்தைப் பார்த்தால் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ள எல்லோரும் மனம் தளர்ந்து விடுவோம். அந்த அளவுக்குத் திருந்துவோரின் சதவிகிதம் மிகவும் குறைவு; அதற்காக விட்டு விட முடியுமா? எங்கள் பணியைத் தொய்வில்லாமல் நாங்கள் செய்து கொண்டிருப்போம். ஆனால் இன்றுள்ள சமூகச் சூழலில் மக்கள் குடிப்பழக்கத்திற்குப் புதிதாக அடிமையாகும் போக்குத்தான் அதிகமாக இருக்கிறது!'' என்று வருந்துகிறார் அமைப்பாளர் ராஜேந்திரன்.

- ஆர். எஸ்.

மாதம் ஒரு நகரம்



தூத்துக்குடிக்கு வரப்போகிறோம்

'மாதம் ஒரு நகரம்' என்ற திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு நகரத்திற்குச் சென்று, அங்குள்ள குறை நிறைகளை - மக்கள் பிரச்னைகளை அலசிப் பார்த்து, ஆராய்ந்து கட்டுரைகள் வெளியிடுவதை அனைவரும் அறிவீர்கள்.

அதன்படி, தூத்துக்குடி நகரைப் பத்தாவது நகரமாகத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். நேரில் வந்து பார்த்து நகரின் எல்லா அம்சங்களையும் அலசப் போகிறோம்.


எனவே, தூத்துக்குடி நகரிலுள்ள அனைவரும் தங்கள் நகரத்திலுள்ள குறைகளையும் நிறைகளையும் பிரச்னைகளையும் எங்களுக்கு எழுதியனுப்ப வேண்டுகிறோம்.

கூடவே, குறைகளைக் களைவதற்காக அரசு மேற்கொண்டுள்ள திட்டங்கள் அல்லது மெத்தனத்தையும் எழுதுவதோடு, தனி மனிதச் சாதனைகள், இளைஞர் மற்றும் சமூக நல அமைப்புகளின் செயல்பாடுகளையும் சுருக்கமாக எழுதியனுப்புங்கள்.

தூத்துக்குடி நகரவாசிகளான உங்கள் கடிதங்கள் கல்கி அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசித் தேதி : 5.8.92

உடனடியாக எழுதியனுப்புங்கள். உறையின்மேல் 'மாதம் ஒரு நகரம் - தூத்துக்குடி' என்று மறக்காமல் குறிப்பிடுங்கள்.

- ஆசிரியர்



தாய்மார்களின் பேராதரவோடு
வெற்றிநடை போடுகிறது
சத்யம் 70MM A/c
உதயம் A/c
சங்கம் A/c
அகஸ்தியா
3 காட்சிகள்
பிருந்தா A/c
பகல் காட்சி
சரண்யா சினி கம்பைன்ஸ்
உங்கள்
பாக்யராஜின்
அம்மா
வந்தாச்சு
கதை-திரைக்கதை
வசனம்-டைரக்ஷன்
P.வாசு
தயாரிப்பு
பூர்ணிமா பாக்யராஜ்
இசை
தேவா
ஒளிப்பதிவு
M.C.சேகர்
Elegant



கல்கி



1992
ஜூலை 26
மலர் : 50
இதழ் : 52
ஆங்கீரச
ஆடி 11

நாளொரு கொலையும் பொழுதொரு கொள்ளையும்!

"தர்மமிகு சென்னை" என்று இந்த நகர் சிறப்பிக்கப்பட்ட காலம் ஒன்று இருந்தது. இன்று அதர்மமிகு சென்னையாகி விட்டது. காலை, மாலை செய்தித்தாள்களைப் பிரிக்கும் போது, "இன்று எங்கே கொலை விழுந்திருக்குமோ, யார் வீட்டில் கொள்ளை நடந்திருக்குமோ?" என்று மனம் "திக் திக்" என்று அடித்துக் கொள்ளத்தான் தலைப்புகளை நோட்டம் விட வேண்டியிருக்கிறது.

வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளியே போகத் தயக்கமாய் இருக்கிறது; வீட்டைப் பூட்டிக் கொண்டு உள்ளேயே இருக்கவும் பயமாய் இருக்கிறது! வெளியே போனால் கொள்ளை; போகாமல் உள்ளேயே இருந்தால், கொள்ளையோடு கொலை! பூட்டுக்களை என்ன, கதவுகளையே உடைக்க இந்தக் கொள்ளைக்காரர்கள் தயங்குவதில்லை.

"விடுதலைப் புலிகளை அடக்கி விட்டோம்" என்று தமிழக அரசு மார்தட்டிப் பயனில்லை. அமைதி காப்பதும், மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதும் எந்த அரசுக்கும் முதல் கடமை. கொள்ளை அடிக்கக் கொலை புரியும் இந்த ஓநாய்களை அரசு வளைத்துப் பிடிக்க வேண்டும்.

போலீஸாரைக் கேட்டால், "மக்கள் ஒத்துழைக்க வேண்டும்" என்ற பல்லவியைப் பாடுவார்கள். எப்படியெல்லாம் ஒத்துழைக்கலாம் என்று பட்டியல் தருவார்கள். மக்கள் கேட்பது பட்டியலை அல்ல; பாதுகாப்பை. ஒப்புநோக்க, விலை குறைவாக இருப்பதால், புறநகர்ப் பகுதிகளில்தான் அவர்கள் மனை வாங்கி வீடு கட்டிக் கொள்ள முடியும். அங்கே அவர்களுக்குப் பாதுகாப்புத் தருவது போலீஸாரின் தலையாய பணி. மேலும் இன்று அட்டகாசம் பண்ணும் கொள்ளையருக்குப் புறநகர் வீடு - மைய நகர் வீடு என்று வேற்றுமை இருப்பதாகவும் தெரியவில்லை. நகரின் எல்லாப் பேட்டைகளிலும் பாரபட்சமின்றித் தாக்குதல் நடக்கிறது!


இன்னும் கொஞ்சம் அழுத்திக் கேட்டால், "என்ன சார் பண்ணுவது, வி.ஐ.பி. செக்யூரிட்டிக்கே போலீஸ் படை போதவில்லை; பாதுகாப்பு டியூட்டிக்கு கான்ஸ்டபிள்களுக்கு எங்கே போக?" என்று ஒரு குரல் அழுகிறது போலீஸ் துறை. மக்கள் வேண்டுவது சால்ஜாப்புகளை அல்ல. அச்சமற்ற வாழ்க்கையை. அது வி.ஐ.பி.க்களுக்கு மட்டும் கிட்டினால் போதாது. ஏன், கறுப்புப் பூனைப் படைகளைக் கொஞ்சம் மக்கள் பாதுகாப்புக்கும்தான் கொடுங்களேன்!


"பத்திரிகைகள்தாம் அநியாயம் பண்ணுகின்றன; பரபரப்பான செய்திகள் போட்டு மக்களை அச்சுறுத்துகின்றன; முன்னேயெல்லாம் இப்படியா இருந்தது?" என்ற வாதமும் செல்லாக் காசே. முன்னெப்போதையும் விட இன்று கொலை - கொள்ளைகள் பன்மடங்கு பெருகி விட்டன. பத்திரிகைச் செய்திகள்தாம் மக்களை எச்சரித்து ஜாக்கிரதையாக இருக்கச் செய்கின்றன. "பத்திரிகையில் திடுக்கிடும் செய்தி வரா விட்டால் கொலை - கொள்ளை குறைந்து விடும்" என்று போலீஸாரால் உறுதி அளிக்க முடியுமானால் சொல்லட்டும்; பத்திரிகைகள் ஒத்துழைக்கும்!

போலீஸ் துறையை நவீனப்படுத்த அவசியம் இருக்கிறது. புதுமையான போர் முறைகளைப் போலீஸார் பயில வேண்டும்; லேட்டஸ்ட் ஆயுதங்களைப் பயன்படுத்தத் தெரிந்து கொள்ள வேண்டும். பெட்ரோல் குடிக்காத மாருதி போன்ற சிறிய கார்களில் வயர்லெஸ் செட்டுடன் இரண்டு இரண்டு பேர்களாக ரோந்து சுற்றி வர வேண்டும். முதல்வரின் ஆயிரம் கார் பவனியை விட இது ஆயிரம் மடங்கு அவசியமானது. இதையெல்லாம் அரசு சிந்தித்து ஆவன செய்ய வேண்டும்.

எல்லாவற்றையும் விட முக்கியம், தலைமையில் இருக்க வேண்டிய நேர்மை. அமைச்சர்களும், அதிகாரிகளும் கோணல் புத்தி காட்டிக் கொள்ளையடித்தால், அடிமட்ட மக்கள் சரீர பலத்தைக் காட்டி கொள்ளை அடிக்கத்தான் செய்வார்கள். "அதுவும் கொள்ளை, இதுவும் கொள்ளை; இதில் நான் செய்யும் காரியம் மட்டும்தான் தப்பா?" என்ற எண்ணம் துணிவைத் தரும்.

கொள்ளைக்காரர்களைப் பிடிப்பது என்பது ஒரு பணி. மக்கள் சிறிது சிறிதாகக் கொள்ளையராக மாறாமல் தடுப்பது மற்றொரு பணி. இதற்கு மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வது வழி. இரண்டு அம்சங்களிலும் அரசுக்குப் பொறுப்பு உண்டு.


பி.ஜே.பி. மற்றும் எதிர்க் கட்சிகள்
ஐயையா! நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டாந்துட்டேன்!
இ. காங்.
ஆஹா... வோட்டெடுப்புல ஜெயிச்சுட்டேன்!


இந்திய ஒலிம்பிக் அணி போகும் போது...
திரும்பி வரும் போது...?


ஆனாக்க, கோவில் கட்டிப்புட்டீங்க... ஆனாக்க, சுப்ரீம் கோர்ட் உத்தரவை மீறிட்டீங்க...
ஆனாக்க, பாபர் மசூதிக்கு சேதம் ஏற்படக் கூடாது... ஆனாக்க...
ஆனாக்க, கோவில் கட்ட அனுமதிக்-கிறோம்...
கல்யாண் சிங்

21%

AVAIL 21% INTEREST FOR FIXED DEPOSITS

PERIOD OF DEPOSIT	: ONE YEAR
AMOUNT OF DEPOSIT	: Rs. 5000 AND ABOVE
INTEREST PAYABLE	: MONTHLY

பாலு ஜுவல்லர்ஸ்

72 உஸ்மான் சாலை, தி. நகர், சென்னை 600017. போன்: 441812, 441741

“சேலத்து பிரச்னைகள் எனக்குத் தெரியும்!”

- எம். எல். ஏ. கூறுகிறார் :



சேலம் - 2-ல் சட்டமன்ற உறுப்பினர் அ. தி. மு. க. வைச் சேர்ந்த, எம். நடேசன். 1972-ல் இருந்தே கழகத்தில் இருப்பவர். ''சேலத்தின் பிரச்னைகள் என்னவென்று எனக்குத் தெரியும். புரட்சித் தலைவி ஆட்சியில் சேலம் கணிசமான முன்னேற்றம் அடையும்'' என்று நம்பிக்கையுடன் கூறுகிறார்.

மிகவும் பிஸியாக இருந்த நடேசனை சென்னை கிளம்பும் போது, சேலம் ஜங்ஷன் பிளாட்பாரத்தில்தான் சந்திக்க முடிந்தது. எந்தவித பந்தாவுமின்றி அமைதியாக ஒதுங்கி நின்று கொண்டிருந்த அவரை, பிளாட்பாரத்திலேயே பேட்டி கண்டோம்.

''கடந்த 25 வருடங்களில், சேலம் எவ்வளவோ வளர்ந்திருக்கலாம். மிகவும் செல்வாக்கான மந்திரிகளான இருவர், இந்தப் பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுச் சென்றவர்கள்தான். ஆனாலும் இன்னமும் பல அடிப்படைப் பிரச்னைகள் கூட தீர்க்கப்படவில்லை. கோவை, ஈரோடு நகரங்களைப் பாருங்கள். பிரம்மாண்ட வளர்ச்சி. அங்கு மக்கள் பிரதிநிதிகள் சும்மா இருந்தாலும், மக்கள் விட மாட்டார்கள். போராடி வசதிகளைப் பெறுவார்கள். சேலம் மக்களுக்கு இன்னமும் விழிப்புணர்ச்சி தேவை. சேலம் ஜங்ஷன் ஒரு way side ஜங்ஷனாக இருக்கிறதே தவிர, இங்கு வசதிகள் கிடையாது. எமர்ஜன்ஸி கோட்டா உட்பட, எல்லாமே ஒலவக்கோட் கண்ட்ரோல்தான்!'' என்று கூறி வருத்தப்படுகிறார் நடேசன்.

''தேர்தலின் போது நீங்கள் கொடுத்த வாக்குறுதிகள் என்ன?''

''நான் புதிதாக 'அதைச் செய்வேன் இதைச் செய்வேன்' என்று வாக்குறுதிகள் கொடுக்கவில்லை. ஏற்கெனவே நடந்து கொண்டிருக்கும் அல்லது பரிசீலனையில் இருக்கும் திட்டங்களை விரைவுபடுத்தி முடிப்பேன் என்று நான் கூறினேன். புதிய பஸ் நிலையம் விரைவில் கட்டி முடிக்கப்படும். மேட்டூர் - ஆத்தூர் குடிநீர்த் திட்ட வேலைகள் மும்முரமாக நடந்து வருகின்றன. பாதாளச் சாக்கடைத் திட்டம் முழு மூச்சாகப் பரிசீலனையில் இருக்கிறது. இந்தத் திட்டத்தில் சாக்கடைத் தண்ணீரை நகருக்கு வெளியே கொண்டு சென்றுவிட வேண்டும். அதற்குச் சரியான இடம் கிடைக்கவில்லை. இப்போது பனைமரத்துப்பட்டியில் இடம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். செவ்வாய்பேட்டையில் லாரி நிலையம் கட்டி முடிக்கப்பட்டு வருகிறது. மருத்துவக் கல்லூரி புதிய கட்டடத்தில் இயங்க இருக்கிறது'' என்கிறார் நடேசன்.

சேலம் ஒன்று சட்டமன்ற உறுப்பினர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் என்பதால், சேலத்தில் உள்ள 'கழகத்தினர்' எல்லா விஷயங்களுக்கும் நடேசனைத்தான் அணுகுகின்றனர். ''போலீஸ் ஸ்டேஷன் விவகாரத்துக்கு மட்டும் நான் போவதில்லை. மற்றபடி என் படுக்கை அறை வரை வந்து உரிமையோடு பேசிக் குறைகளைச் சொல்லி விட்டுப் போகிறார்கள் மக்கள்'' என்கிறார் நடேசன்.


- பி. எஸ்.

கல்கி அடுத்த இதழில்...

கிண்டல் மன்னன் எஸ்.வி. சேகர்
எழுதும்

பெரிய தம்பி

சினிமா துறையின் மண்வாசனை மோகத்தை
நையாண்டி செய்யும் தொடர் நாடகம்



ஆகஸ்டு 1ல் சென்னை மவுண்ட் ரோடு காமராஜர் அரங்கில் நடக்கும்

கல்கி பொன்விழா

நிகழ்ச்சிகள் பற்றிய முழு விவரங்கள் - வாசகர்களுக்கு அழைப்பிதழ்

உங்கள் ஸ்கூட்டரை நேசியுங்கள்



ஸ்கூட்டர் வைத்திருக்கும் அனைவருக்கும்
நிரந்தரப் பயன் தரும் இலவச இணைப்பு

பத்மா ரவிசங்கர்
எழுதும்
மர்மச் சித்திரத் தொடர்

இனி ஒரு சதி



பொன்விழா
நாவல் போட்டியில்

முதல் பரிசு
பெறும்



மகத்தான
நாவல்
ஆரம்பம்

மற்றும் பல புதிய அம்சங்கள்!
அதிக பக்கங்கள்; அதே விலை!

வட்டமேஜை

அந்த வாசகருக்கு என்ன பதில்?

◆ தலையங்கத்தின் தலைப்போ 'வெற்றி மாநாடு!' தந்த கருத்தோ, மாநாடு நடத்திய வர்களுக்குப் புத்தி போதிக்கும் விதத்தில். மதுரையின் மாமூல் வாழ்க்கையைப் பாதிக்க வைத்து, மாநாடு நடத்தி, வெற்றி மயக்கத்தி லிருப்போருக்குத் தலையங்கக் கருத்து ஏளன மாகக் கூடத் தோன்றலாம்!

மதுரை - 9, இரா. கல்யாணசுந்தரம்.

◆ 'வெற்றி மாநாடு' தலையங்கம் கண்டேன். உலக யுத்தத்தின் போது வானொலியில் சர்ச்சில் நிகழ்த்திய உணர்ச்சியூட்டிய உரையை, இங்கு ஜெ.வுக்கு நினைவூட்டியவிதமே அலாதி.

சென்னை - 23, கி. ராமதாஸ்.

◆ மீனவ இனத்துக்கே விடிவெள்ளியாய் இருக்கும் இளைஞர் சுப்ரமணியத்தின் சேவை யைப் படித்ததும் பிரமித்துப் போனோம்!

மேட்டூர் அணை - 2, ஆர். ஜெயா மாலதி.

◆ ஒரு வீர சாகசத்தின் வெற்றி இளைஞராக எங்களுக்குக் காட்சியளித்தார் பிளச். டி. செய்யும் மீனவ இளைஞர் சுப்ரமணியம். இவரைப் போல் படித்த இளைஞர்கள் ஒவ்வொரு வரும் சிந்திக்க ஆரம்பித்து விட்டால், நாட்டின் வளர்ச்சி மிகவும் சுலபமானதாகி விடாதா!

பாலக்காடு - 1, இராஜேஸ்வரன்.

◆ 'ஜனாதிபதி தேர்தல்; எதிர்க்கட்சி வேட்பாளர்' படித் தேன். ஸ்வெல் போட்டியிடு கிறார் என்பதுதான் பலருக்குத் தெரியும். அவர் யார்? அவருடைய அரசியல் வரலாறு என்ன? எங்கு பிறந்தார்? என்ன செய்கிறார் என்பதையெல்லாம் விளக்கி யமைக்கு நன்றி.

கும்பகோணம், டி. எஸ். சீதாராமன்.



◆ ''கருணை'' சிறுகதை படித் தேன். 'படித்த இளைஞர்கள் வேலை கிடைக்காவிட்டாலும் ஏதாவது ஒரு தொழிலைக் கத்துக் கிட்டு உழைக்கலாமே!' என்ற சக்கரவர்த்தியின் கூற்று நூற் றும் சரி என்பதோடு நல்ல அறி வுரையுங்கூட!

மணப்பக்காரன்பாளையம், ஏ. ஜி. கல்யாணசுந்தரம்.

◆ கடமையைச் செய்ய முன் வராமல், உரிமைகளை மட்டும் கேட்டுப் போராடுவோரையும் அதற்கு பக்கபலமாக நிற்கும் மனிதர்களையும் தோலுரித்துக் காட்டி, நாட்டின் இன்றைய பரிதாபமான நிலையைப் படம் பிடித்துக் காட்டிய சிறுகதை 'தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்.'

திருப்பரங்குன்றம், டி. கே. சுப்பிரமணியன்.

◆ இயக்குநர் பாரதிராஜாவுக்குப் பிடித்த வசன மான, 'தென்றலின் கையைப் பிடித்துக் கொண்டு நந்தவனத்தில் நடந்து போகும் திருப்தி'யின் மூலப் பரிமாணத்தை, ''இழப் புகள்'' சிறுகதை மூலம் உணர்ந்தேன்.

பழநி - 2, பா. வெங்கடரமணன்.

◆ வாழ்க்கையில் பலமுறை பல முயற்சிகளில் தோல்வியைத் தழுவிச் சோர்வடைந்த என் போன்ற பலரைத் தட்டி எழுப்பியது ''நம்மால் முடியும் தம்பிங்கள்'' என்ற போன். இளங்கோ கட்டுரை.

குத்தாலம், பி. முத்துக்குமரன்.

◆ குழந்தைகளைக் கண்டிப்ப தில் மட்டுமே கவனம் செலுத்தும் பல பெற்றோர்களுக்கு, அவர்க ளது அணுகுமுறை தவறு என் பதை விளக்கும் வகையில் 'குழந் தைகளிடமிருந்து கற்ற கல்வி முறை' அமைந்திருந்தது.

புதுக்கோட்டை, ஸ்வேதா சம்பத்.

◆ 'வாய் கிழியப் பேசியும், வெற்றுச் சவடால் அறிக்கைகள் விட்டுமே ஆட்சி நடத்தும் விளம் பரப் புகழ் தமிழக முதல்வர், படுத்தக்காட்டிடை எம். ஜெய்சங்கருக்கு என்ன பதில் சொல்லப் போகிறார்?

அரசடி, நெல்லை. வி. சிவா.

வீதிதோறும் வெள்ளிக் கொலுசுகள்

மொட்டை மாடியில்லாத வீட்டு வாசல்களில், வற்றல், வடாம் என்று வெயிலில் காய வைத்திருப்பதைத்தான் பார்த்திருக்கிறோம். ஆனால் சேலம் செவ்வாய்ப்பேட்டையிலுள்ள பல வீட்டு வாசல்களில் பளபளக்கும் வெள்ளிக் கொலுசுகளைக் காய வைத்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு இங்கே கொலுசுத் தொழில் கோலோச்சிக் கொண்டிருக்கிறது!

இத்தனை ஏன்?

பெண்களின் கால்களுக்கு அழகு சேர்க்கும் வெள்ளிக் கொலுசுத் தயாரிப்பில், இன்று இந்தியாவிலேயே முதலிடம் வகிப்பது சேலம்தான்! சேலம் செவ்வாய்ப் பேட்டையிலும், சுற்றியுள்ள கிராமங்களிலும், பெண்கள், சிறுவர்கள் உட்பட இரண்டு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பைக் கொடுப்பது இந்தத் தொழில்தான்.

இப்படி இதுவொரு குடிசைத் தொழிலாகச் செய்யப்பட்டாலும் ஒரே கூரையின் கீழ் கொலுசுகள் செய்து முடிக்கப்படுவதில்லை.

முதலில் வெள்ளிக் கட்டிகளை உருக்கி, அச்சுகளில் வார்த்து, வெவ்வேறு பருமன்களிலும், நீளத்திலுமாக வெள்ளிக் கம்பு (sticks) உருவாக்குகிறார்கள். இதுதான் ஆரம்பம்.

பின்னர் இந்தக் கம்புகள், இயந்திரங்களில் கொடுக்கப்பட்டு வெள்ளிக் கம்பிகளாக நீட்டப்படுகின்றன. இந்தக் கம்பிகளில்தான் கொலுசுக்கு முதுகாக இருக்கும் ''ஓரல்'' செய்யப்படுகிறது. ஓரல் செய்வது என்பது கம்பிகளில் நுணுக்கமான வேலை செய்து, அதைக் கயிற்றைப் போல் (செயினைப் போல்) மாற்றுவது. சின்ன உளிகளும் கத்தியல்களும்தான் இந்த நுணுக்கமான வேலைக்குப் பயன்படுத்தப்படும் ஆயுதங்கள். பழக்கப்பட்ட பெண்கள் நுணுக்கமான இந்த வேலையை அநாயாசமாகச் செய்கிறார்கள். வெள்ளிக் கம்பிகளைச் செயின்களாகச் செய்த பின், அவற்றுடன் இணைப்பதற்குச் சின்னச் சின்னச் சதுரமாக, செவ்வகமாக என்று பல்வேறு வடிவங்களிலான வெள்ளித் தகடுகள் மிஷின்களில் வெட்டப்படுகின்றன. பின்னர் இந்தத் தகடுகளில் இணைப்பதற்கு ஜவ்வரிசி சைஸில் வெள்ளி ரவைகள் செய்யப்படுகின்றன. இதற்கும் மிஷின்தான். அதன் பிறகு, செயின்கள், குட்டித் தகடுகள், ரவைகள் ஆகியவை 'ஊதும்' இடத்திற்குக் கொண்டு வரப்படு



● கொலுசு பட்டை அடித்தல்

கின்றன. 'ஊதுதல்' என்றால் இணைத்தல் (soldering) என்று பொருளாம். செயினுடன், தகடுகளும், ரவைகளும் இணைக்கப்பட்ட பின்னர் கொலுசு முழு வடிவம் பெற்று விடுகிறது. ஆனாலும் அந்த நிலையில் அவை கவர்ச்சியாக இருக்காது.

எனவே, ஊதுதல் முடிந்த பின், பட்டையடிக்கச் செல்கின்றன கொலுசுகள். இந்த வேலையில் - முக்கியமாகக் கொலுசு களில் இணைக்கப்பட்ட குட்டித் தகடுகள், உளியால் நுணுக்கமாகச் செதுக்கப்பட்டு, மேலும் அழகேற்றப்படுகின்றன. பிறகு கொலுசுகள் வந்து சேரும் இடம் மெருகேற் றும் இடம். கொலுசுகளை நெருப்பில் வாட்டிக் கொத் துக் கொத்தாக அமிலம் கலந்த நீரில் ஊறவைத்துத் துணிகளை அலசுவது போல் அலசியெடுக்கப் பளிச்சிடுகின்றன. இப்படி அலசப்பட்ட கொலுசுகள் தான் ஈரம் காய்வதற்காக வெயிலில் உலர்த்தப்படு கின்றன.

சேலத்திற்கு அடுத்த படியாக மகாராஷ்ட்ராவில் உள்ள கோலாப்பூரில் கொலுசுகள் தயாரிக்கப்பட் டாலும், சேலத்துக் கொலுசுகளுக்குத் தனி மவுசுதான்! காரணம் சேலம் கொலுசுகளின் பெரும்பாலான வேலைகள் கைகளால் செய்யப்பட்டுக் கலை வடிவம் பெறுபவை. ஆனால் கோலாப்பூர்க் கொலுசுகளோ மெஷின்கள் மூலமே சுட்டு மேனிக்குச் செய்து தள்ளப்படுவதால், கலைத் தன்மை யற்றுப் போய் விடுகின்றன. இதன் காரண மாகத்தான் சேலத்துக் கொலுசுகள், இந்தி யாவின் பல மாநிலங்களுக்குச் செல்வது மட்டுமல்லாமல், வளைகுடா நாடுகளுக் கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

ஆயினும், எல்லாத் தொழிலிலும் உள்ள பிரச்னைகள் போன்றே இந்தத் தொழிலிலும் உண்டு. கையாளப்படுவது அதிக மதிப்புள்ள உலோகம் என்பதாலும், ஆயிரக்கணக்கான சிறுவர்கள் ஈடுபட் டிருப்பதாலும் அரசாங்க (அதிகாரிகளின்?) இடையூறுகள் அதிகம். இதனால், வரவு, செலவு, கையாளப்படும் வெள்ளியின் அளவு முதலியவற்றைப் பற்றி பேசவே யோசிக்கிறார்கள். தெருவில் புதிய நபர் யாராவது சென்றால் அரசாங்க அதிகாரியோ என்று சந்தேகத்துடன் பார்க்கிறார்கள்.

வெள்ளி உருக்கும் தொழிலில் ஈடுபட்டிருப்போர் பெரும்பாலும் மராட்டி யர்கள். பாலிஷ் போடுவதைத் தவிர மற்ற பணிகளில் பிஸியாக இருப்பவர்கள் ஆசாரிகள். பாலிஷ் போடும் தொழிலில் அதிகமாக முஸ்லீம்கள் இருக்கிறார்கள். அரிப்புத் தன்மை மிக்க ரசாயனத்தைப் பாலிஷ் செய்வோர் கையாள்வதால், சேர்ந் தாற்போல் இரண்டு நாட்கள் செய்தால் கைகளில் புண்கள் வந்து விடுகின்றன.

● கொலுசு மெருகேற்றுதல்



பின்னர் தேங்காய் எண்ணெயைத் தடவி, ரணம் ஆறிய பின்தான் வேலைக்கு வருகி றார்கள். மாதத்தில் பத்து நாட்கள்தான் வேலை செய்ய முடிகிறது. இந்தத் தொழி லில் ஊதியமும் குறைவுதான் என்பது மிகப் பெரிய குறை.

"சேலத்தில் தயாரிக்கப்படும் கொலுசுகள் நூறு சதம் வெள்ளிதானா?" என்று இத் தொழிலில் சம்பந்தப்பட்டுள்ள ஜெயராமிடம் கேட்டோம்.

"எந்த உலோகத்தையும், அதன் பக்கு வத்திலேயே நகையாக உருமாற்ற முடி யாது. வேறு உலோகமும் கொஞ்சம் சேர்க்க வேண்டும். கொலுசுத் தயாரிப்பில், வெள் ளியை உருக்கும் நிலையிலேயே குறைந்தது 25 சதவிகிதம் செம்பு கலக்கப்படும்." என் கிறார் அவர்.

ஆக, தங்க நகைகளில் கலக்கப்படும் செம்பின் அளவைப் பொறுத்துத் தங்கத்தின் தரமும் விலையும் இருப்பது போல் வெள்ளியிலும் உண்டு என்பதை அனை வரும் புரிந்து கொள்ள வேண்டும்.

- ப்ரியன்

சிநேகம்

விவரம் அறிந்த நாளிலிருந்தே ஓர் இனந்தெரியாத வெறுப்பு. சில விஷயங்களுக்கு ரிஷிமூலம், நதிமூலமெல்லாம் பார்க்க முடியாது. இது கூட அப்படித்தான்.

சப்போட்டாப் பழ வாசனை எங்கே அடித்தாலும் குருமூர்த்தியை ஒரு இழு இழுக்கும். போன பிறவியில் எந்தத் தேசத்திலேயோ உப்பரிகை தொட்ட சப்போட்டா மரமாய் வளர்ந்து நின்றாலும் நின்றிருப்பான். அவன் கனவுகளில் பெரிய ராஜ கோபுரங்களும், சாளரங்களும், மேகமாய் வழிந்தோடும் திரைகளும், திராட்சைக் குடுவைகளும், செந்தாக்கு ஒளிப் பந்தங்களும்தான் வருகின்றன. அதற்கும் அவனுக்கும் சம்பந்தமில்லாவிட்டால், எதற்காய்க் கனவுகளில் வர வேண்டும்?

அவனிடம் இருக்கிற சைக்கிள் பழைய 'ராலி' மாடல். தாத்தா அவனுக்குத் தந்தது பிரியமாய். இன்னமும் அதை நண்பனாய்த்தான் பாவிக்கிறான். வெறுப்பாய் மிதித்ததில்லை. எக்கேடோ கெட்டுப் போ என்று அனாதையாய் வாசற்படியில் நிறுத்திப் போனதில்லை. ரேழியில் அதற்கு நிரந்தரமாய் இடமுண்டு. அப்படியிருக்க, அவனுக்கு நாய்களைப் பிடிக்காமல் போனதுதான் ஏனென்று தெரியவில்லை.

எப்போதோ ஒரு தடவை சங்கிலிச் சாமியார் ஆற்றோரக் குடிலில் தங்கியிருக்கையில் வேடிக்கை பார்க்கப் பையன்களுடன் போக, வேட்டைப் புலியாய் எங்கிருந்தோ பாய்ந்து வந்த ராஜபாளையம் கறுப்பு நாய் ஒன்று இலக்குத் தெரியாமல் விரட்டிவர, எதிலேயோ மோதி விழுந்து முழங்கால் சில்லுப் பெயர்ந்து, நொண்டி நடந்தது சிறுகச் சிறுக மறந்து போன விஷயம்.

அதற்கும் அப்பால் ஏதோ காரணம் இருக்கிறது. நிறையத் தடவை யோசித்தும் பிடி கிட்டாமல் நழுவி வந்திருக்கிறான் நினைவுகளிலிருந்து.

வீட்டோடு இருக்கிறவையென்றால் தேவலாம்தான். கதவோ, மதிலோ தாண்டிப் போனாலே எகிறி விழுகிற ஜாதி அவை. வறட்டுக் கௌரவம் பிடித்தவையாய், வீதி நோக்கிக் குரைத்த தங்கள் விசுவாசம் காட்டிக் கொள்பவையும் உண்டு. இதையெல்லாம் சகிக்கலாம்.

ஒரு காரணமுமின்றி, குப்பைத் தொட்டியை நம்பியிருக்கிற தெரு நாய்களைத்தான் குருமூர்த்தியால் ஜீரணிக்க முடியவில்லை. ஒரு பின்னணியும் இல்லாத தறுதலைகள். அவை பண்ணுகிற ஆரவாரங்களும், அசிங்கீங்களும்.

பஸ்ஸுக்காய் ஆண்களும், பெண்களுமாய்க் காலை வெய்யில் முகத்திலடிக்கக் காத்திருக்கிற நேரத்தில், கொஞ்சமும் லஜ்ஜையின்றி விளக்குக் கம்பத்தில் கால் தூக்கி... ச்சீ நினைக்கவே அருவருப்பாய் இருக்கிறது.

கொஞ்ச நாட்களாய் அவனுக்கு இன்னொரு பிரச்னை. ஆபீஸ் முடிய ஆறு மணியாகும். அதற்குப் பிறகு கம்ப்யூட்டர் கிளாஸுக்கு மூணு கிலோ மீட்டர் சைக்கிள் மிதித்துப் போய் வரப் பத்து மணியாகும்.


மனிதர்கள் வாழுகிற இடமாயிற்றே என்று யாருக்கும் எந்த அக்கறையுமில்லை. குண்டும் குழியுமாய்ச் சரளைக் கல் ரோடு. மெயின் ரோட்டிலிருந்து சைக்கிளை உருட்டி வர வேண்டும். பகல் நேரமாயிருந்தால் கத்தி மேல் நடக்கிறது போல் வித்தை பண்ணி வந்து விடலாம். இருட்டில் துணிந்தால், ஆஸ்பத்திரிக்குப் போவது நிச்சயம்.

ஒரு சந்திப்பில் திரும்பும். அங்கேதான் எமன்களாய்க் காத்திருக்கும் இந்தச் சனியன்கள். ஏதோ காணாததைக் கண்டது போல் கும்பல் கூடிக் கொண்டு குரைப்பதை எத்தனை நாளைக்குத்தான் பொறுக்க முடியும்?

''ஏம்மா... இந்தத் தெருவுல குடியிருக்கறவங்க யாருக்குமே கண்ணில்லையா? இல்லே காதில பஞ்சை வெச்சு அடைச்சிருக்கா? மனுஷன் தெருவில இறங்கி நடமாட முடியலே... வீடு வந்து சேர்ற வரைக்கும் உயிரைக் கையில புடிச்சிக்கிட்டு நடக்க வேண்டியிருக்கு... எத்தனை வீட்டுப் பசங்க ஸ்கூல் போறாங்க. ஒருநா இல்லாட்டி ஒருநாள் யாரையாவது கடிச்சப்புறம்தான் புத்தியில உறைக்கப் போவுதா....?

''முனிஸிபாலிட்டியில கம்ப்ளைண்ட் பண்ணப் போறேன் நான்... ஏதாவது உருப்படியாயிருக்கா இங்க...? ரோடு சரியில்லே... விளக்குக் கம்பத்தில விளக்கு இருந்தாவுல கரெக்டான வழியில நடக்க முடியும்? அதில போய் முட்டிக்காம இருந்தாச் சரிதான்...

ஜியா



இதையெல்லாம் ஒழுங்குபடுத்தலேன்னாக் கூட இந்தப் பாழாய்ப் போன ஜந்துக்களை யாவது கண்ட்ரோல் பண்ணலாம்... இதுக் கும் எதுவும் எம்.எல்.ஏ. சிபாரிசு வேணுமோ தெரியலே போ...''

அவனாய் நாலு வீடு தள்ளியிருக்கிறவர் களுக்கும் கேட்கிற மாதிரி இரைந்ததற்கு, ஒரு வாரத்துக்கப்புறம் பலன் இருந்தது.

விளக்குக் கம்பங்களில் புதுசாய் டியூப் லைட் மாட்டினார்கள். ஆனால் அதற்கெல் லாம் மசிகிறது போல் இல்லை நாய்கள். அவை அவனைக் கண்டதும் குரைத்தன. எதையோ கொள்ளையடித்துப் போகிறவ னைத் துரத்துவது போல் மோப்பம் பிடித்த படி தொடர்ந்தன. அசிங்கமாய் எச்சில் பெருக்கின. கழுத்தை யாரோ இறுக்குவது போல குருமூர்த்தி மறுபடி கவலையானான்.

"நீ மட்டுந்தான் அதிசயமா நடக்கிறி யாக்கும்? எல்லாருந்தான் போறாங்க வர் றாங்க... ஒருத்தருக்கும் ஒரு தொந்தரவு மில்லே... கம்ப்யூட்டர் கிளாஸ்தான் இருபது நாளையில முடிஞ்சுடும்ல... அப்புறம் காலா காலத்துல வீடு வந்துடுவே. பிரச்னை யிருக்காது...'' அம்மா இயல்பாய்ச் சொன் னது கூட அவனைச் சீண்டுவது போலிருந் தது.

அன்றைக்கிரவு அவனால் தூங்க முடிய வில்லை. விடியும் வரைக்கும் குரைப்பு களும், ஊளைகளும் நாராசமாய்க் காதைக் குடைந்தன. தன்னிரக்கத்தில் மனம் துக்கித் தது. அப்போதே தீர்மானித்து விட்டான்.

காலையில் ஆபீஸில் பர்மிஷன் போட்டு விட்டு, முனிஸிபாலிட்டி போய்ப் பெரிய அதிகாரியைப் பார்த்தான். அவன் சொன்ன தைப் புன்னகையோடு கேட்டுக் கொண்டார் அவர்.



இந்தியாவிலேயே பிஎச்.டி. பட்டம் பெறும் முதல் பார்வையற்ற பெண் கே. ராதாபாய். திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் "இந்திய மறுவாழ்வளிப்பு நிலையங்களின் வரலாறு" என்னும் ஆராய்ச்சிக்காக இவருக்கு பிஎச். டி. பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

ஆதாரம் : "மனோரமா" இயர் புக்
தகவல் : ஜி. ஜி. கிருஷ்ணன்

''வண்டியில்லாததாலதான் கொஞ்சம் டிலேயாகுது... ஏன்னா இந்தக் கம்பளைண்ட் என்னோட பார்வைக்கு ஒரு மாசத்துக்கு முன்னாலேயே வந்துட்டது... பப்ளிக்குக்கு நியூஸென்ஸா இருக்கிற எதையும் விட்டு வைக்க மாட்டோம் நாங்க... தைரியமாப் போங்க... டிஸ்டிரிக்ட் ஹெட் குவார்டர்ஸ்ல பேசியிருக்கேன் ஏற்கெனவே... வண்டி அனுப்புவாங்க கூடிய சீக்கிரம்... ரெண்டே நாள்... எல்லா நாய்ங்களையும் பிடிச்சுக் கொன்னுடலாம்...''

பியூனிடம் டீ வாங்கித் தரச் சொல்லி ரொம்ப நாள் பழகியது போல் நடந்து கொண் டார். நிறைவாய் நன்றி சொல்லி விட்டு வந்தான் குருமூர்த்தி.

அதற்கடுத்த நாட்களில், குரைக்கின்ற நாய்களைப் பார்த்து மனதுக்குள் கறுவினான். 'எத்தனை நாட்கள்... எண்ணிக் கொள்ளுங் கள்.... சகலமும் ஒடுங்கி மண்ணோடு மண் ணாவதற்கு முன்னால் போடுகிற ஆட்டம் தான் இது... தெரியாதில்லையா பிசாசு களே...'

அம்மாதான் அந்த தேவ செய்தியைச் சொன்னாள். "நிஜமாவா... இன்னிக்கு வந் தாங்களா?''

''பின்னே... மூணு நாய்ங்களைப் பிடிச் சுட்டுப் போறதை என் கண்ணால பார்த் தேன்... கழுத்தில சுருக்கு மாட்டி... ச்சே பாவம் வாயில்லா ஜீவன்கள்...''

''வாயில்லா ஜீவன்களா? உனக்குத் தெரியலேம்மா, அதுங்க பண்ணிய அழிச்சாட் டியமெல்லாம்... அனுபவிக்கட்டும்...'' பெருமிதமாய்ச் சிரித்துக் கொண்டான் குரு மூர்த்தி.

அன்றைக்கு விடுமுறை. குருமூர்த்தி வீட்டிலிருந்தான். வெளியில் ஏதோ விசித்திர மாய்ச் சப்தம் கேட்க, வெளிவாசலுக்கு வந் தான்.

சிறுவர்கள் கூட்டமாய்ப் பின்தொடர்ந்து கல்லெறியப் புழுதி கிளப்பிக் கொண்டு போவதுதான் நாய் வண்டியா?

அவனும் பையன்களில் ஒருவனாய் மாறிக் கல்லெறியலாமா என்று யோசித்தான்.

என்னவோ தோன்ற, சட்டையை எடுத் துப் போட்டுக் கொண்டு, அவசரமாய்ச் சைக் கிளை உருட்டிக் கொண்டு வெளியே கிளம் பினான்.

நாய் வண்டி போன திசையைக் குறி வைத்து வேகமாய்ப் போனான்.

ஊர் எல்லை தாண்டி முந்திரி மரங்களும், கருவேலம் புதர்களுமாய் மண்டிக் கிடக்கிற இடத்தில் வண்டி நின்றிருக்க, சைக்கிளை நிறுத்தி இறங்கிக் கொண்டான். ஒரு மரத்தின் பின்னே மறைவாய் நின்று கவனிக்க, வண்டி ஊழியர்களில் ஒருவர் மெதுவாய்ப் பின் கதவைத் திறக்க, கழுத்தை ஆர்வமாய் நீட்டிய அந்தச் செவலை நாயின் குரல் வளையை இறுக்குகிற சுருக்கால் வீசிப் பிடித்திழுத்தார்.

மெதுவாய் நடத்திக் கூட்டிப் போய் 'ஆ'வென வாய் திறந்திருந்த பத்தடி ஆழமான குழிக்கருகில் நிறுத்திக் கொண்டு ஏதோ சைகை பண்ண, இன்னொரு ஆள் கையில் பிடித்த சிரிஞ்சோடு நெருங்கி வந்து, நாயின் தொடையில் மெல்ல அழுத்த, ரெண்டு நிமிடம் முழுசாய்ப்போகு முன்னால் முன்கால்களை வழுக்கியது போல் முன்நீட்டி, பின்கால்கள் தொய்ந்து விழ, ஒரு சின்னத் துடிப்போடு, அடங்கிப் போனது உயிர். வலியும், வேதனையும் இத்தனை சுல பமா?

குருமூர்த்தி தலையைத் திருப்பிக் கொண்டான். 'சொத்'தென்று சத்தம். நாய் சவமாய்க் குழிக்குள் விழுந்ததால் கேட்டிருக்கும்.

கனமான மனத்துடன் தெருவுக்குள் நுழைகிறபோதே குறுக்கே ஓடியது ஒரு குட்டி நாய். அதன் மேல் புதுசாய் ஒரு சிநேகம் வந்திருந்தது குருமூர்த்திக்கு.



ஒரு வித்தியாசமான 'கலெக்டர்!'

சாரதா கல்லூரிச் சாலையில் (சேலம்)'சண்முக இல்லத்'தில் வசிக்கும் மெய்யப்பன் ஒரு வித்தியாசமான 'கலெக்டர்'.

படிகக் கற்களில் எத்தனை வகை உண்டோ அத்தனையையும் சேர்த்து வைத்திருக்கிறார் இவர்! வர்ண வர்ணக் கற்கள்! 108 விதவிதமான கற்களில் பிள்ளையார் சிலைகளைக் குட்டி குட்டியாய் அலமாரியில் அணிவகுத்து வைத்திருக்கிறார்! எத்தனை வகை ஸ்படிக லிங்கம் வேண்டும்? இங்கே பார்க்கலாம். யானைக்குள்ளே ஒரு யானையைப் பார்த்ததுண்டா? இவரிடம் இருக்கிறது! முட்டைக்குள் கோழிக் குஞ்சு முழிமுழி என்று முழிப்பதையும் பார்க்கலாம்.

அஜந்தா - எல்லோரா பகுதிகளில் கிடைக்கும் அக்கிக் கல்லில் விதவிதமான புத்தர் சிலைகள்!

வெள்ளைப் பவழத்தில் விநாயகர்! நூறு ஆண்டுகளுக்கு முந்தைய தங்கம், வெள்ளி நாணயங்கள்.

எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்துச் சேர்த்து வைத்திருக்கிறார் இந்த அதிசய மனிதர்.



● அகில இந்திய மாதர் சங்கம்

விளையாட்டுப் போட்டிகள் முதல் வீதிகள் பராமரிப்பு வரை...

மகளிர் மன்றங்கள் :

வேறு எந்த நகரத்திலாவது இத்தனை மாதர் சங்கங்கள் இருக்குமா என்று யோசிக்க வைக்கும் அளவுக்கு, சேலத்தில் மகளிர் மன்றங்கள் நிறையவே இருக்கின்றன. எல்லாமே பெயருக்கு ஏதோ 'லெட்டர் ஹெட் சங்க'மாக இயங்காமல், பெண்கள் முன்னேற்றத்திலும், நகரப் பராமரிப்பிலும் சுறுசுறுப்புடன் இயங்கி வருவதுதான் மகிழ்ச்சி தரும் விஷயம்.

அன்று 23000 கடன்,

இன்று பத்து லட்சம் சொத்து!

ஆரம்பத்தில், செரி ரோடில் ஓட்டு வில்லைக் கட்டடம் மட்டுமே இந்திய மாதர் சங்க இயக்கத்துக்குச் சொத்து. 74-ல் 23000ரூபாய் கடன் வேறு! இந்தி, ஆங்கில வகுப்புக்கள் தவிர, சர்க்கா சுற்றுவதிலும் பயிற்சி அளித்துக் கொண்டிருந்த இந்திய மாதர் சங்கம், இப்போது பணியாற்றும் பெண்கள் விடுதி, முதியோர் இல்லம் என்று பெரிதாக வளர்ந்து விட்டது.

● சௌராஷ்டிர மாதர் சங்கம்



● கோல்டன் ஸ்கொயர் மகளிர் மன்ற டென்னிஸ் பயிற்சி வகுப்பு துவக்கம்...



''ஏழரை லட்சம் ரூபாய்க்குப் பழைய கட்டடம் ஒன்றை வாங்கி, மேலும் மூன்று லட்ச ரூபாய் செலவழித்து முதியோர் இல்லம் கட்டியிருக்கிறோம், பாருங்கள்!'' என்றார் அலமேலு சம்பத். கிட்டத்தட்ட கட்டடம் முடிகிற நிலையில் இருந்தது. ''இது எப்படி சாத்தியமாயிற்று?''

''எங்கள் பணியாற்றும் மகளிர் விடுதியில் கிடைக்கும் லாபம் ஒன்றுதான் இதற்கு உதவியது. ஒட்டுமொத்தமாக அரிசி, மளிகைச் சாமான்கள் வாங்கி விடுகிறோம். சுத்தமான, கலப்படமில்லாத மளிகைப் பொருள்கள். தங்கும் விடுதிக்கும் நியாயமான அறை வாடகை.'' (டிரஷரியில் பணிபுரியும் ஒரு பெண்மணியிடம் விசாரித்த போது, 'வீட்டில் இருப்பது போன்ற பராமரிப்பும் பாது காப்பும் இருக்கிறது!' என்றார்.)

● ஃபேர்லாண்ட்ஸ் சிவிக் அசோசியேஷன்



வைர விழா கொண்டாடி விட்ட இந்தப் பழமையான சங்கத்தை, அறுபது வருடங்களுக்கு முன் ஆரம்பித்து வைத்தவர் 'சித்ரா' நாராயணசாமியின் சகோதரி காமாட்சி அம்மையார். ''இது பொதுச் சேவை. வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். முக்கியமான வரவு செலவு எல்லாம் செக் மூலமாகத்தான் நடைபெற வேண்டும்'' என்று கண்டிப்பாக இருப்பாராம்.

''காந்திஜி, பெண்கள் இணைந்து பணியாற்ற உருப்படியான திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று சொன்ன போது, மார்கரெட் கஸின்ஸ் அகில இந்திய மாதர் சங்க மாநாட்டில் இதை வலியுறுத்திப் பேசினாராம். காமாட்சி அம்மையார் சேலத்தில் சங்கம் துவங்க, காந்தியும் கஸின்ஸ் அம்மையாரும் பேசியவை ஒரு தூண்டுதல்'' என்றார் அலமேலு சம்பத்.

செல்லில் துவங்கி டென்னிஸ்ஸில்...

அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் லட்சுமி அவர்களைச் சேலம் கோல்டன் ஸ்கொயர்ஸ் மகளிர் மன்ற டென்னிஸ் பயிற்சித் துவக்க விழாவில் பார்த்த போது வியப்பாக இருந்தது. இவர் இங்கே எப்படி...?

''டாக்டர் லட்சுமி சேலத்துக்காரர். எங்கள் சங்க ஆலோசகர் இவர்தான்!'' என்று விளக்கினார் செயலர் திருமதி ஸ்ரீமதி ஜகன்னாதன். ''நாங்கள் விளையாட்டுப் போட்டிகளில் பெண்களை ஊக்குவிக்கும் முயற்சி யில் இச் சங்கத்தை ஆரம்பித்தோம். முதன் முதலாக, அகில இந்தியச் சதுரங்கச் சங்கம் சார்பில் ஒரு டோர்னமெண்ட் நடத்தினோம். இது 1991ல். இதில் கிடைத்த வெற்றிதான் எங்களை மேலும் ஊக்குவித்தது. இப்போது தியாகராஜர் பாலிடெக்னிக் வளாகத்தில், டென்னிஸ்ஸில் பயிற்சி அளிக்க வகுப்புகள் ஆரம்பித்திருக்கிறோம்!''

ஏற்காட்டில் 200 பேர் கலந்து கொண்ட ஓவியப் போட்டி, ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி என்று சங்கத்துக்குத் தொடர்ந்து பணிகள். இப்போது வீட்டு உபயோகச் சாதனங்கள் பழுதுபார்க்கும் பயிற்சி வகுப்பில் அத்தனை பேரும் ஆர்வத்துடன் சேர்ந்திருக்கிறார்கள்!

தீபாவளி ஸ்வீட்ஸுக்கு 'க்யூ'

செவ்வாய்ப்பேட்டை சௌராஷ்டிர மாதர் சங்கம் பெண்களில் பலருக்குத் தட்டெழுத்துப் பயிற்சியும், அச்சுக் கலைப் பயிற்சியும் அளிப்பது வியப்பே அல்ல. சொந்தக் கட்டடத்தில் இவை நடை பெறுவதும் பெரிய விசேஷம் அல்ல. இவர்கள் தயாரிக்கும் ஸ்வீட்ஸ் 'சேலம் புகழ்' பெற்றது! ''தீபாவளிக்கு முந்திய நாள் நீண்ட க்யூ நிற்கும். எங்களுக்குப் பெரிய அளவில் லாபம் தருவது இது தான்!'' என்கிறார் திருமதி கமலினிராஜ். அபலைப் பெண்களுக்கு வங்கிகள் உதவியுடன் சுய வேலை வாய்ப்பு, சட்ட உதவி, மருத்துவ சிகிச்சை உதவிகள் என்று அமைதியாகச் செயல்படும் இச் சங்கத்தின் உறுப்பினர்கள் எல்லாருமே சௌராஷ்டிரா வகுப்பைச் சேர்ந்த பெண்மணிகள். ஆனால் பயன் பெறுவோர் எல்லாப் பெண்களுமே.



● வித்யாநகர் மகளிர் மன்ற பிரேமாவதி, கார்த்திகா சம்பத்

அவரவர் வீட்டிலேயே அசோசியேஷன்

வித்யா நகர் மகளிர் மன்றத்தின் பணிகள் வித்தியாசமானவை. நேரு யுவ கேந்திராவுடன் இணைந்து செயல்படும் இம் மகளிர் மன்றம், சாதனை என்று சொல்லுவது நூலகம் நடத்துவதும், வித்யா நகர்வாசிகளான நூறு குடும்பங்களை ஒற்றுமையோடு இணைந்து வாழச் செய்வதும், உத்தரகாசி நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் செய்ததும், பள்ளி மாணவ - மாணவியருக்கு இலவசமாக நோட்டுப் புத்தகங்கள் வழங்கியதும்தான்.

''எங்களுக்கு என்று சொந்தக் கட்டடம் ஏதும் இல்லை. ஒவ்வொரு முறை ஒவ்வொரு உறுப்பினர் வீட்டில் சந்திக்கிறோம்!'' என்கிறார்கள் தலைவி பிரேமாவதியும், செயலர் கார்த்திகா சம்பத்தும். கல்லூரி மாணவ - மாணவிகளும் இப்போது இவர்களுடன் பல பணிகளில் ஒத்துழைக்கிறார்கள்.

சேலத்திலும் ஒரு எக்ஸ்நோரா

இருநூற்றைம்பது வீடுகள் உள்ள Fairlands விரைவில் சிங்கப்பூரின் சுத்தம் பெற்று, மாதிரி காலனியாக விளங்க வேண்டும் என்பது அழகாபுரம் சிவிக் அசோசியேஷனின் குறிக்கோள். அதற்காக, எக்ஸ் நோரா போல சந்தா வசூலித்து, குப்பைகள் அகற்றும் வண்டிகளை அமர்த்தி, தெருக்களைச் சுத்தமாக வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு தெருவுக்கும் ஒரு பிரதிநிதி. ஆரம்பித்த போது பலருக்கும் இது வெற்றிகரமாகச் செயல்படுமா என்று சந்தேகம் இருந்ததாம். இந்த ஆறு மாதங்களில், நம்மாலும் சாதிக்க முடியும் என்று நிரூபித்திருக்கிறார்கள் மீனா சேதுவும், மங்களம் ராமனும், பானுமதி மோகனும் மற்றும் அவர்களது குழுவினர் அத்தனை பேருமே! ''அதிகாரிகளை நேரில் சந்தித்து, விடாமல் கோரிக்கைகள் வைத்தும் அவர்கள் சற்றும் கோபம் கொள்ளாமல் எங்களுக்கு உதவுகிறார்கள்!'' என்கிறார்கள் இப் பெண்கள்.

– நம்பி

வண்ணப்படங்களும் சேலம் நகரச் செய்திகள் தொடர்பான மற்ற படங்களும் :

யோகா



மிருதுவான போஷாக்கு

உங்கள் குழந்தைக்கு 4 மாதங்களாகும் சமயத்தில் அவனது இயற்கை உணவான பாலுடன் எளிதில் ஜீரணிக்க உகந்த போஷாக்கு உணவான நெஸ்டத்தையும் கொடுங்கள்.

பாலுடன் கலந்து தயாரிக்கப்பட்ட நெஸ்டம் உங்கள் குழந்தையின் மிருதுவான முதல் திட உணவாகும். ஏனெனில் இதில் குழந்தை ஆரோக்கியமாய் வளர்வதற்குரிய எல்லா போஷாக்குகளும் சமச்சீர் அளவில் அடங்கியுள்ளன. உங்கள் குழந்தையின் உணவில் வெவ்வேறு சுவையைக் கூட்ட விரும்பினால், அவ்வகை உணவுடன் நெஸ்டத்தை கலந்து கொடுங்கள். உதாரணமாய் வேக வைத்த பழங்கள், வேகவைத்து மசிய வைத்த காய்கறிகள் மற்றும் பருப்பு வகைகள்.

அரிசி சேர்த்த நெஸ்டம் போஷாக்கு நிறைந்த ஸீரியல் ஆகும். உங்கள் குழந்தை இதை எளிதில் ஜீரணிக்கும். உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கு மருத்துவர்கள் சிபாரிசு செய்யும் எல்லாவித போஷாக்கும் இதில் உள்ளன. உறுதியான எலும்புகளுக்கும் பற்களுக்கும் தேவையான கால்ஷியம்; ஆரோக்கியமான ரத்தத்திற்கு தேவையான இரும்பு சத்து; பட்டு போல் பளபளக்கும் சருமத்திற்கும், ஒளிவீசும் கண்களுக்கும், நோய் எதிர்ப்பு சக்திக்கும் தேவையான வைட்டமின்களும் இதில் அடங்கியுள்ளன.

உங்கள் செல்லக் குழந்தை நெஸ்டத்துடன் சேர்ந்து வளர்வதை கவனியுங்கள்.

எளிதில் ஜீரணிக்க வல்ல பேபி ஸீரியல்

நெஸ்டம்

முக்கிய அறிவிப்பு உங்கள் குழந்தைக்கு தாய் பால்தான் மிகவும் சிறந்தது. உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதில் இருந்து தாய்ப்பாலுடன் குழந்தைத் தானிய உணவும் கொடுங்கள்.

வலைவீச்சு

எரிச்சலோடு அறையில் நுழைந்த வசந்த், தன் தொப்பியைக் கழற்றிக் கட்டிலில் விசிறி எறிந்தான்.

இடுப்பு பெல்ட்டை அவிழ்த்து யூனிஃபார்மை உரித்துத் தூக்கியெறிந்தான்.

அவன் மனம் முழுவதும் ஆத்திரம் மண்டிக்கிடந்தது.

''சே! எத்தனை பெரிய அவமானம்! எத்தனை கேவலம்! யூனிஃபார்மை மாட்டிக் கொண்டு அரசியல் தலைவர்களுக்குத் தலையாட்டிக் கொண்டு.... சே! என்ன வாழ்க்கை இது....''

காலையில் நடந்த நிகழ்ச்சி அவன் மனத்தை அறுத்தது.

அந்த முரட்டுத்தனமான கன்னத்தில் ஓங்கி அறைந்தான் இன்ஸ்பெக்டர் வசந்த்.

இரண்டு அடி தள்ளிப்போய் விழுந்தான் அந்த முரடன். கோபத்திலும் போதையில் கண்கள் சிவந்துபோய் இருந்தன.

கன்னத்தைத் தடவியவாறு நிதானமாகப் பேசினான், ''இன்ஸ்பெக்டர்! ஊருக்கு நீங்க புதுசுன்னு நினைக்கிறேன். நான் யார் தெரியுமா? நான் நினைச்சா இன்னைக்கே தண்ணியில்லாத காட்டுக்கு உங்களை மாத்த முடியும்... தெரியுமா?'' என்றான் கோபமாக.

''டேய்! தமிழ்நாட்டில எந்த ஊர்லடா தண்ணியிருக்கு? எந்திரிடா மேல! என்மேல உனக்கு ரொம்பக் கரிசனம்... நீட்டுடா கையை.....''

அவன் தயங்கியபடி நிற்க, கன்னத்தில் அறைவிட்டான் வசந்த்.

முனகியவாறே கைகளை நீட்டினான்.'' அனுபவிக்க போற... இதுக்கு நீ அனுபவிக்கப் போற....''

''சரிதான் போடா'' என்று கைவிலங்கிட்டு அவனை ஜீப்பை நோக்கித் தள்ளினான். ''காச்சறது கள்ளச்சாராயம்... சவாலா விடறே?''

அடுத்த முப்பதாவது நிமிடம் மேலிடத்திலிருந்து போன் வந்தது. ''யோவ்! அந்தச் சாராயம் காய்ச்சறவனை ஏன்யா அரஸ்ட் பண்ணினே... அவன் ஆளும் கட்சி ஆளுயா! மினிஸ்டருக்கு ரொம்ப வேண்டியவன். பெரிய தொந்தரவா இருக்கியே... அவனை முதல்ல வெளியே அனுப்பு....''

''இல்லை சார்...''

''யோவ்! சொன்னதைச் செய்!'' என்றது அதிகாரியின் குரல்.

அலட்சியமாக வெளியே போனான் அந்த முரடன். ''என்ன இன்ஸ்பெக்டர்! நான் வரட்டா'' என்றான் கிண்டலாக.

''தூ'' என்று துப்பினான் வசந்த். அவனால் முடிந்தது அதுதான்.

அந்தக் கடிதத்தைக் கண்டதும் அதிர்ந்து போனான் சுரேஷ். ''டேய்! என்னடா இது?'' என்று பதறினான். சுரேஷ் வசந்த்தின் அறை நண்பன்.

''தெரியல?'' என்றான் வசந்த் சாவகாசமாக. ''ராஜினாமாக் கடிதம்!''

''அது புரியுது! என்ன இது முட்டாள்தனம். ஏன் இந்தத் திடீர் முடிவு? காலேஜில படிக்கும்போதெல்லாம் 'இன்ஸ்பெக்டர் ஆகணும். அயோக்கியத்தனம் செய்யறவன் யாராயிருந்தாலும் அறைஞ்சு உள்ளே தள்ளணும்'னு அடிக்கடி சொல்லுவே... எத்தனை கஷ்டப்பட்டு இந்த இன்ஸ்பெக்டர் வேலை வாங்கின... இதப்போய் ராஜினாமா செய்யறேன்றயே... என்ன கிறுக்குத் தனம் இது....?''

அருண்

''சுரேஷ்! நீ சொன்னதெல்லாம் உண்மை. நான் ஒரு நேர்மையான போலீஸ் அதிகாரியா வரணும்னு முயன்றது உண்மை. ஏன், என் லட்சியமே அதுதான். ஆனா நேர்மையான போலீஸ் அதிகாரிக்கு இங்க வேலை இல்லைடா... நேர்மையா நடக்க முடியாது....''

''ஏன்டா, அப்படிச் சொல்றே?''

சுரேஷ் அப்படிக் கேட்டதும் காலையில் நடந்த நிகழ்ச்சியை ஆத்திரமாகச் சொல்லி முடித்தான் வசந்த்.

''ஒரு சமூக விரோதிக்கு, மேலதிகாரிகளும் அரசியல்வாதிகளும் துணை போகும் போது, நான் எங்கிருந்து நேர்மையா நடக்க முடியும்! மனச்சாட்சியை அடகு வைச்சிட்டு என்னால உத்தியோகம் பார்க்க முடியாதுடா!''

சிறிது நேரம் அவனை அமைதியாகப் பார்த்த சுரேஷ், அவனை ஆதரவாகத் தட்டிக் கொடுத்தான்.

பின், ''வசந்த்! நீ ராஜினாமா செய்திட்டா மட்டும் இந்த அயோக்கியர்கள் திருந்திடுவாங்களா?

''அவனுங்க திருந்தணும்னு நான் ராஜினாமா பண்ணலை... மறுபடியும் சொல்றேன், என்னால மனச்சாட்சியை அடகு வைக்க முடியாது.''

''வசந்த்! நீ பெரிய பெரிய குற்றவாளிகளைப் பிடிக்கிறது சரிதான். ஆனா அவங்க திருடங்க... எப்படியோ தப்பிச்சிடறாங்க. அதுக்காக நீ வலை வீசறதையே விட்டுட்டா எப்படி? சின்னச் சின்ன மீன்களையும் பிடியேன்... உனக்கு அதுக்கு வசதியிருக்கும் போது, ஏன் வலையை வீசி எறியறே?''

''அப்ப பெரிய திமிங்கலங்களை விட்டுட்டுச் சின்னச் சின்ன அல்ப மீன்களைப் பிடிக்கச் சொல்றயா?'' ஆவேசமாகக் கேட்டான் வசந்த்.

சிரித்தான் சுரேஷ். ''இல்லைடா. நான் சொல்றதை நீ தப்பாப் புரிஞ்சுக்கிட்ட. நான் உன் கடமையை மட்டும் பண்ணச் சொல்றேன். பலனை எதிர்பார்க்காதே!''

''நீ என்ன சொல்றே?''

''புரியலை? உன் வலையிலிருந்து பெரிய திமிங்கலங்கள் இன்னிக்கு நழுவலாம். ஆனா என்னைக்குமே நழுவும்னு ஏன் நினைக்கறே? காலம் ஒரு நாள் மாறும். பெரிய திமிங்கலங்களும் மாட்டும். அது வரை பொறுமையா, சின்ன மீன்களைப் பிடிச்சிட்டிரு. வலையைத் தூக்கி எறிஞ்சிடாதே. ஏன்னா இன்றைய சின்ன மீன்தான் நாளைய பெரிய திமிங்கலம்....''

அவன் சொல்லிக் கொண்டே போக, வசந்த் தன் தவறை உணர்ந்தான். தன் ராஜினாமாக் கடிதத்தை எடுத்தான். அதை நான்காய், எட்டாய்க் கிழித்துப் பறக்க விட்டான்.



சிவகாமியின் சபதம்

பதினேழாம் அத்தியாயம்
உறங்கா இரவு

அரண்மனைப் பூங்காவனத்திலிருந்து திரும்பிப் புவனமகாதேவியின் அரண்மனைக்கு வந்த மங்கையர்க்கரசி, அன்று மாலையெல்லாம் தரையிலே நடக்கவில்லை. ஆனந்த வெள்ளத்திலே மிதந்து கொண்டிருந்தாள். அவள் சற்றும் எதிர்பாராத காரியம் நடந்து விட்டது. அத்தகைய பாக்கியம் தனக்குக் கிட்டும் என்பதாக அவள் கனவிலும் எண்ணவில்லை. அவளுடைய தந்தை போர்க்களத்திற்குப் போன பிறகு அவளுடைய வாழ்க்கையே சூனியமாகப் போயிருந்தது. அந்தச் சூனியத்தை நிரப்பி அவளுடைய வாழ்க்கையை இன்பமயமாக்கக்கூடியதான சம்பவம் ஒன்றே ஒன்றுதான். அந்த அற்புதம் அன்றைக்கு நடந்து விட்டது. அவளுடைய உள்ளத்தையும் உயிரையுமே கவர்ந்திருந்த காதலன், எளிதில் யாரும் பிரவேசிக்க முடியாத அந்தப் பல்லவ அரண்மனைக்குள்ளே அவளைத் தேடி வந்து சந்தித்தான். சந்தித்ததோடல்லாமல் அவளிடம் தனது இடையறாக் காதலையும் சிறிதும் சந்தேகத்துக்கு இடமின்றி வெளியிட்டான்.

அவளுடைய வாழ்க்கையை ஆனந்தமயமாக்கக் கூடிய பேறு வேறு என்ன இருக்கிறது? அவளுடைய கால்கள் தரையிலே படியாமல், நடக்கும்போதே நடனமாடிக் கொண்டிருந்ததில் வியப்பு என்ன இருக்கிறது?

இந்த அற்புத சம்பவத்தைப் பற்றி யாரிடமாவது சொல்ல வேண்டுமென்று அவளுடைய உள்ளம் துடித்துக் கொண்டிருந்தது. ஆனால், யாரிடம் சொல்வது? சொல்வதானால் தன்னைப் புதல்வியெனக் கொண்டு அன்பு செலுத்தி வரும் புவனமகாதேவியிடந்தான் சொல்ல வேண்டும். ஆனால், அன்று மாலை, புவனமகாதேவியின் முகபாவமும் சுபாவமும் ஓரளவு மாறியிருந்தன. தன் அந்தரங்கத்தை வெளியிட்டுப் பேசக்கூடிய நிலைமையில் அவர் இல்லையென்பதை மங்கையர்க்கரசி கண்டாள். சிவ பூஜையின் போது கூடத் தேவியின் திருமுகத்தில் வழக்கமான சாந்தமும் புன்னகையும் பொலியவில்லை. மங்கையர்க்கரசியிடம் அவர் இரண்டொரு தடவை அகாரணமாகச் சிடுசிடுப்பாகப் பேசினார். மற்ற நாளாயிருந்தால் தேவி அவ்விதம் சிடுசிடுப்பாகப் பேசியது மங்கையர்க்கரசியின் உள்ளத்தை வெகுவாக வருத்தப்படுத்தியிருக்கும். ஆனால் இன்று மங்கையர்க்கரசி அதையெல்லாம் பொருட்படுத்தவில்லை. தன் மனத்தில் பொங்கி வந்த குதூகலத்தைத் தேவியிடம் பகிர்ந்து கொள்ள முடியவில்லையே என்று மட்டுந்தான் அவள் கவலைப்பட்டாள்.

இருட்டி ஒன்றரை ஜாம நேரம் ஆன போது, மங்கையர்க்கரசி வழக்கம் போல் புவனமகாதேவியின் படுக்கையறைக்குப் பக்கத்தில், • தனக்கென்று அளிக்கப்பட்

டிருந்த அறையில் படுத்துக் கொண்டாள். ஆனால், உறக்கம் மட்டும் வரவேயில்லை; கண்ணிமைகள் மூடிக் கொள்ளவே மறுத்து விட்டன. துயரத்தினாலும் கவலையினாலும் தூக்கம் கெடுவதைக் காட்டிலும், எதிர்பாராத சந்தோஷத்தினாலும் உள்ளக் கிளர்ச்சியாலும் உறக்கம் அதிகமாகக் கெடும் என்பதை அன்று மங்கையர்க்கரசி கண்டாள். சற்று நேரத்துக்கெல்லாம் தூங்கும் முயற்சியையே விட்டு விட்டுத் தன் வருங்கால வாழ்க்கையைப் பற்றிய மனோராஜ்யங்களில் ஈடுபட்டாள்.

இவ்விதம் இரவின் இரண்டாம் ஜாமம் முடிந்து மூன்றாவது ஜாமம் ஆரம்பமாயிற்று.

அந்த நடுநிசி வேளையில், நிசப்தம் குடிகொண்டிருந்த அந்த அரண்மனையில் திடீரென்று கேட்ட ஒரு சப்தம் மங்கையர்க்கரசியைத் தூக்கிவாரிப் போட்டது. அது வெகு சாதாரண இலேசான சப்தந்தான். வேறொன்றுமில்லை; ஏதோ ஒரு கதவு திறக்கப்படும் சப்தம். ஆயினும், அந்த வேளையில் அத்தகைய சப்தம் மங்கையர்க்கரசிக்கு ஏதோ ஒருவிதக் காரணமில்லாத பயத்தை உண்டாக்கியது.

அவள் படுத்திருந்த அறைக்கு வெளியே தாழ்வாரத்தில் மெல்லிய காலடிகளின் சப்தம் அவள் கவனத்தைக் கவர்ந்தது. அந்த நேரத்தில் புவனமகாதேவியின் அறைக் கருகே அவ்விதம் நடமாடத் துணிந்தது யாராயிருக்கும்? இன்னதென்று தெளிவாய்த் தெரியாத திகில் கொண்ட உள்ளத்துடன் மங்கையர்க்கரசி தன் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள். காலடிச் சப்தம் மேலும் மேலும் நெருங்கித் தன் அறைக்குச் சமீபத்தில் வருவதாகத் தோன்றியது. அப்படி வருவது யார் * என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் அவளைப் பிடித்தது. சப்தம் செய்யாமல் படுக்கையிலிருந்து எழுந்து, அவளுடைய அறையிலிருந்து வெளித் தாழ்வாரத்தை நோக்கிய பலகணியின் அருகே சென்று வெளியிலிருந்து தன்னைப் பார்க்க முடியாதபடி மறைவாக நின்றாள். மறுகணமே அவளுடைய ஆவல் நிறைவேறியது. தாழ்வாரத்தில் இருவர் வந்து கொண்டிருந்தார்கள். முன்னால் கையில் தீபம் ஏந்திய தாதிப் பெண்ணும் அவளுக்குப் பின்னால் வானமாதேவியும் வந்து கொண்டிருந்தார்கள். ஆம்! அது வானமாதேவிதான். ஆனால், அவருடைய முகம் ஏன் அப்படிப் பேயடித்த முகத்தைப் போல் வெளுத்து விகாரமடைந்து போயிருக்கிறது! வந்த இருவரும் மங்கையர்க்கரசியின் அறையைத் தாண்டி அப்பால் போனதும், சற்றுத் தூரத்தில் அதே தாழ்வாரத்தின் மறுபுறத்தில் திறந்திருந்த ஒரு கதவு, மங்கையர்க்கரசியின் கண்ணையும் கவனத்தையும் கவர்ந்தது. அவள் இந்த அரண்மனைக்கு வந்த நாளாக மேற்படி கதவு திறக்கப்பட்டதைப் பார்த்ததில்லை. வானமாதேவியின் மாளிகையிலிருந்து இந்த மாளிகைக்கு வருவதற்கான சுரங்க வழியின் கதவு அது என்று அவள் கேள்விப்பட்டிருந்தாள். அந்தச் சுரங்க வழி மூலமாகத் தான் வானமாதேவி இப்போது வந்திருக்க வேண்டும்! இந்த நடுநிசியில் அவ்வளவு இரகசியமாகச் சுரங்க வழியின் மூலம் அவர் எதற்காக வந்திருக்கிறார்?

இந்தக் கேள்விக்கு மறுமொழி அவளுக்கு மறுகணமே கிடைத்தது. வந்தவர்கள் இருவரும் புவனமகாதேவியின் படுக்கையறை வாசற் கதவண்டை நின்றார்கள். கையில் விளக்குடன் வந்த தாதிப் பெண் கதவை இலேசாகத் தட்டினாள். உள்ளேயிருந்து ''யார்?'' என்ற குரல் கேட்டது. ''நான்தான் அம்மா!'' என்றார் வானமாதேவி. ''இதோ வந்து விட்டேன்!'' என்னும் குரல் கேட்ட மறுகணமே கதவும் திறந்தது. தாதிப் பெண்ணை வெளியிலே நிறுத்தி விட்டு வானமாதேவி உள்ளே சென்றார்.

வானமாதேவியின் பயப்பிராந்தி கொண்ட வெளிறிய முகத்தைப் பார்த்த மங்கையர்க்கரசியின் மனத்தில் சொல்ல முடியாத கவலையோடு பயமும் குடிகொண்டது. பூரண சந்திரனையொத்த பிரகாசமான பல்லவ சக்கரவர்த்தினியின் வதனம் நாலு நாளைக்குள் அப்படி மாறிப் போயிருக்கும் காரணம் என்ன? அவருக்கு அத்தகைய கவலையையும் பயத்தையும் உண்டாக்கும் விபரீதம் என்ன? சக்கரவர்த்தி போர்க்களத்துக்குப் போன பிறகு கூட வானமாதேவி எவ்வளவோ தைரியமாகவும் உற்சாகமாகவும் இருந்தாரே? அதைப் பற்றித் தான் ஆச்சரியப்பட்டதும் உண்டல்லவா! அப்படிப்பட்டவரை இவ்விதம் மாற்றும்படியாக எத்தகைய அபாயம் எதிர் நோக்கி வந்து கொண்டிருக்கிறது? அந்த அபாயம் அவரோடு மட்டும் போகுமா? அல்லது அந்த அரண்மனையில் உள்ள மற்றவர்களையும் பீடிக்குமா?

கள்ளங் கபடமற்ற பெண்ணாகிய மங்கையர்க்கரசிக்கு மேற்படி விஷயத்தைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு ஒற்றுக் கேட்பது ஒரு பிசகான காரியமாகவே தோன்றவில்லை. எனவே, புவனமகாதேவியின் அறைக்கும் தன்னுடைய அறைக்கும் மத்தியிலிருந்த கதவண்டை சென்று நின்று

அமரர் **கல்கி**

மாமிக்கும் மருமகளுக்கும் நடந்த சம்பாஷணையை ஒற்றுக் கேட்கத் தொடங்கினாள்.

அந்த சம்பாஷணையின் ஆரம்பமே அவளுடைய மனத்தில் என்றுமில்லாத பீதியை உண்டாக்கி உடம்பெல்லாம் நடுங்கும்படி செய்தது. போகப் போக, அவள் காதில் விழுந்த விவரங்கள் சொல்ல முடியாத வியப்பையும் எல்லையில்லாத பீதியையும் மாறி மாறி அளித்தன. சில சமயம் அவள் உடம்பின் இரத்தம் கொதிப்பது போலவும்; சில சமயம் அவளுடைய இருதயத் துடிப்பு நின்று போவது போலவும் உணர்ச்சிகளை உண்டாக்கின. அப்படியெல்லாம் அந்தப் பேதைப் பெண்ணைக் கலங்கச் செய்து வேதனைக்குள்ளாக்கிய சம்பாஷணையின் விவரம் இதுதான் :

''அம்மா! ஒருவேளை தூங்கிப் போய் விட்டீர்களா?''

''மகளே! நீ சொல்லியனுப்பியிருக்கும் போது எப்படித் தூங்குவேன்? உன் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தேன். ஆனால், இது என்ன மர்மம்? எதற்காக இப்படி நடு ராத்திரியில் வந்தாய்? உன் முகம் ஏன் இப்படி வெளுத்துப் போயிருக்கிறது? ஐயோ பாவம்! பல நாளாக நீ தூங்கவில்லை போல் இருக்கிறதே?''

''ஆம், அம்மா! நெடுமாறன் என் அரண்மனைக்கு என்றைக்கு வந்தானோ அன்றைக்கே என்னை விட்டுத் தூக்கமும் விடை பெற்றுக் கொண்டு போய் விட்டது. தாயே! பக்கத்து அறைகளில் யாராவது இருக்கிறார்களா? நாம் பேசுவது யாருடைய காதிலாவது விழக்கூடுமா?''

''இது என்ன பயம், மகளே? யார் காதில் விழுந்தால் என்ன? யாருக்காக நீ பயப்படுகிறாய்? பல்லவ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினி - சத்துருமல்லரின் மருமகள், மாமல்லரின் பட்டமகிஷி - யாருக்காக இப்படிப் பயப்பட வேண்டும்?''

''யாருக்காக நான் பயப்படுகிறேன் என்றா கேட்கிறீர்கள், அம்மா! நமது அரண்மனையில் உள்ள ஒவ்வொரு பணியாளிடமும் ஒவ்வொரு பணிப் பெண்ணிடமும் பயப்படுகிறேன்.''

''அப்படியானால் உன் பின்னோடு அழைத்து வந்தாயே அவள்?''

''செவிடும் ஊமையுமாக இருப்பவளைப் பார்த்து அழைத்து வந்தேன்!''

''மகளே! இது என்ன பேச்சு? உன்னுடைய பணிப் பெண்களிடமே நீ பயப்படும்படியான அவசியம் என்ன நேர்ந்தது? வீர பாண்டிய குலத்திலே பிறந்து வீர பல்லவர் வம்சத்தில் வாழ்க்கைப்பட்டவள் இந்த கைய பயத்துக்கு ஆளாகலாமா? இது என்ன அவமானம்?''

''அம்மா! இதிலுள்ள மான அவமானமெல்லாம் பாண்டிய குலத்துக்குத்தான்; பல்லவ குலத்துக்கு ஒன்றுமில்லை. என் அரண்மனைப் பணிப் பெண் ஒருத்தி சமணர்களுடைய வேவுக்காரியாகி நெடுமாறனுக்கும் சமணர்களுக்கும் நடுவே தூது போய் வருகிறாள் என்று அறிந்தேன். அவள் வந்து சொன்ன செய்தியின் பேரில் நேற்றிரவு நடுநிசியில் நெடுமாறன் சமண சித்தர்களின் அந்தரங்க மந்திரக் கூட்டத்துக்குப் போய் விட்டு வந்தான்.''

''ஆம்! மகளே, இது என்ன விந்தை! காஞ்சி நகரில் இன்னும் சமணர்கள் தங்கள் காரியங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்களா?''

''ஆம், தாயே! நெடுமாறனைத் தொடர்ந்து, அந்தச் சமண சித்தர்களும் வந்திருக்கிறார்கள். நெடுமாறன் அவர்களைப் பார்க்கப் போன போது அங்கே நடந்த காரியங்களைக் கேட்டால் இன்னும் தாங்கள் பயங்கரமடைவீர்கள்!''

''என்ன நடந்தது, மகளே?''

''நெடுமாறனுடைய மனத்தைக் கெடுப்பதற்காக என்னவெல்லாமோ அவர்கள் மந்திர தந்திரங்களைக் கையாளுகிறார்களாம். பாவம்! நெடுமாறனுடைய புத்தி அடியோடு பேதலித்துப் போயிருக்கிறது!''

''ஆனால் சமணர்களுடைய நோக்கந்தான் என்ன?''

''யாரோ ஒரு பையனை மந்திர சக்தியால் மயக்கி, வருங்காலத்தில் வரப் போவதை அகக்கண்ணால் கண்டுசொல்லச் சொன்னார்களாம். வாதாபி யுத்தத்தில் வெற்றியடைந்தவுடனே தங்களுடைய புதல்வர், நெடுமாறன் மீது பொறாமை கொண்டு அவனைக் கத்தியால் வெட்டிக் கொல்வதாக அவன் கண்டு சொன்னானாம்!''

''ஐயோ! இது என்ன கொடுமை! அப்புறம்...?''

''ஆனால், அந்த விதியையும் சமண சித்தர்களின் சக்தியால் மாற்றலாம் என்று அவர்கள் சொன்னார்களாம். அவர்களின் விருப்பத்தின்படி நடந்தால் நெடுமாறனை தக்ஷிண தேசத்தின் ஏக சக்ராதிபதியாக இந்தக் காஞ்சியிலேயே பட்டாபிஷேகம் செய்து வைப்பதாகச் சொன்னார்களாம்!''

''இதெல்லாம் உனக்கு எப்படித் தெரிந்தது, மகளே?''

''நமது ஒற்றர் தலைவன் சத்ருக்னன் எல்லாவற்றையும் ஒளிந்திருந்து பார்த்துக் கொண்டிருந்தானாம்.''

''ஆகா! மகேந்திர பல்லவர் மீது பழி தீர்த்துக் கொள்ளச் சமணர்கள் நல்ல சந்தர்ப்பத்தைத்தான் தேடிக் கொண்டிருக்கிறார்கள்!''



"ஆமாம்! ஆனால், அவர்கள் உண்மையில் சமணர்களும் அல்லவாம்! வாதாபியின் ஒற்றர்கள் சமணர்களைப் போல் வேஷம் போட்டுக் கொண்டு இந்தத் தந்திர மந்திரமெல்லாம் செய்கிறார்களாம்!"

"அப்படியானால் அவர்களை உடனே சிறைப் பிடிப்பதற்கு என்ன?"

"சிறைப் பிடித்தால் அதனால் அபாயம் வரலாமென்று சத்ருக்னன் பயப்படுகிறான். பாண்டிய சைனியத்தை உடனே காஞ்சியைக் கைப்பற்றும்படி நெடுமாறன் சொல்லலாமென்றும், காரியம் மிஞ்சி விபரீதமாகி விடும் என்றும் அஞ்சுகிறான்."

"வேறு என்ன யோசனைதான் சத்ருக்னன் சொல்கிறான்?"

"அவனுக்கு ஒன்றும் சொல்லத் தெரியவில்லை, தாயே! உடனே சக்கரவர்த்திக்குச் செய்தி அனுப்ப வேண்டும் என்றான். ஆனால், என் நாதர் போருக்குப் புறப்படும் போது, அவருக்கு நான் வாக்குக் கொடுத்திருக்கிறேன். அதை நிறைவேற்றியே தீருவேன். தங்களிடம் அனுமதி பெற்றுப் போகத்தான் வந்தேன்."

"அப்படியா? மாமல்லனுக்கு நீ என்ன வாக்குறுதி கொடுத்தாய்?"

"நெடுமாறனால் ஏதாவது கெடுதல் நேருவதாயிருந்தால் என் கையால் அவனுக்கு விஷத்தைக் கொடுப்பேன்; இல்லாவிட்டால் அவனைக் கத்தியால் குத்திக் கொல்வேன் என்று வாக்குறுதி கொடுத்தேன்."

"ஆ! இது என்ன பாபம்? உன் தலையில் இவ்வளவு பெரிய பாரத்தை வைத்து விட்டு என் மகன் எப்படிப் புறப்பட்டுப் போனான்?"

"அம்மா! என்னிடம் அவர் பரிபூரண நம்பிக்கை வைத்துச் சென்றார். அந்த நம்பிக்கையை உண்மையாக்குவேன்."

"குழந்தாய்! நாளை மாலை வரையில் எனக்கு அவகாசம் கொடு. முடிவாக என் யோசனையைச் சொல்கிறேன்."

"அம்மா! அடுத்த அறையில் யார் இருக்கிறது? ஏதோ சப்தம் கேட்டது போல் தோன்றியது."

"இந்த அரண்மனையைப் பற்றி நீ சந்தேகிக்க வேண்டாம், இங்கு யாரும் அப்படிப்பட்டவர்கள் இல்லை."

"அப்படியா நினைக்கிறீர்கள்? இன்று சாயங்காலம் நடந்ததைக் கேட்டால் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்."

''சாயங்காலம் என்ன நடந்தது?''

''நெடுமாறன் பூந்தோட்டத்தில் உலாவிவிட்டு வருவதாகச் சொல்லிப் போனான். வெகுநேரம் அவன் திரும்பி வராமலிருக்கவே எனக்கு ஏதோ சந்தேகமாயிருந்தது. அவனைத் தேடிக் கொண்டு நான் சென்றேன். பூங்காவனத்தில் செடிகள் அடர்ந்திருந்த ஓரிடத்தில் நெடுமாறனும் ஒரு பெண்ணும் நின்று அந்தரங்கமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பெண் யார் தெரியுமா?''

''யார்?''

''தாங்கள் கவிகாரப் புதல்வியாகக் கொண்டு அன்புடன் ஆதரித்து வளர்க்கிறீர்களே, அந்தச் சோழ நாட்டுப் பெண்தான்!''

''என்ன? மங்கையர்க்கரசியா?''

''ஆம்; தாயே! மங்கையர்க்கரசியே தான்!''

''மகளே! நீ யாரைப் பற்றி என்ன சொன்னாலும் நம்புகிறேன். ஆனால், மங்கையர்க்கரசியை மட்டும் ஒருநாளும் சந்தேகிக்க மாட்டேன்.''

''ஆனால், என் கண்ணாலேயே பார்த்தேன், அம்மா!''

''கண்ணாலே என்ன பார்த்தாய்? இருவரும் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்தாய். அவ்வளவுதானே? இவள் பூஜைக்கு மலர் எடுக்கப் போயிருந்தாள். தற்செயலாக நெடுமாறன் அங்கு வந்திருப்பான்; ஏதாவது கேட்டிருப்பான். இவளும் யாரோ பாண்டிய நாட்டு வாலிபனைப் பற்றி விசாரிக்க வேணுமென்று சொல்லிக் கொண்டிருந்தாள்...''

''அவர்களுடைய நடவடிக்கைகள் மிக்க சந்தேகாஸ்பதமாய் இருந்தன, அம்மா!''

''இப்போதுள்ள உன்னுடைய மனோநிலையில் யாரைப் பற்றியும் சந்தேகம் தோன்றலாம்.''

''போய் வருகிறேன், அம்மா! தங்களிடம் சொன்ன பிறகு என் இருதயத்தை அழுத்திக் கொண்டிருந்த பாரம் கொஞ்சம் குறைந்திருப்பது போல் தோன்றுகிறது!''

''போய் வா, குழந்தாய்! மீனாக்ஷி அம்மன் அருளால் உன்னுடைய இருதயத்தின் பாரம் முழுவதும் நீங்கட்டும்.''

இதன் பிறகு கதவு திறந்து மூடும் சப்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து காலடிச் சப்தமும் மறுபடியும் கதவு திறந்து மூடும் சப்தமும் கேட்டன. பிறகு, அந்த அரண்மனையில் ஆழ்ந்த நிசப்தம் குடிகொண்டது.

மேற்படி சம்பாஷணை முழுவதையும் கேட்டுக் கொண்டு சித்திரப் பதுமை போல் கதவண்டை நின்ற மங்கையர்க்கரசி, அன்றிரவு முழுவதும் ஒரு கண நேரங்கூடக் கண்ணை மூடவில்லை. இதற்கு முன் விளங்காத பல மர்மங்கள் மேற்படி சம்பாஷணையின் மூலம் அவளுக்குத் தெரியவந்தன. பாண்டிய குமாரன்தான் தன்னுடைய காதலன் என்ற செய்தி அவளுக்கு எல்லையற்ற உவகையையும் வியப்பையும் அளித்தது. தான் அவனைப் பற்றி அடிக்கடி கண்ட கனவின் பொருள் ஒருவாறு விளங்கிற்று. அவனுக்கு அந்த அரண்மனையில் நேர்வதற்கு இருந்த பேரபாயம் அவளுக்குச் சொல்ல முடியாத திகிலையும் கவலையையும் அளித்தது. அந்தப் பேரபாயத்திலிருந்து அவனைத் தப்புவிக்கும் பொறுப்பும் பாக்கியமும் தனக்குரியவை என்பதையும் உணர்ந்தாள். இம் மாதிரி எண்ணங்கள் அவளுக்கு இரவு முழுதும் ஒரு கணமும் தூக்கமில்லாமல் செய்து விட்டன.

மறுநாள் மாலை, குறிப்பிட்ட சமயத்துக்குச் சற்று முன்னாலேயே பூங்காவனத்துக்குச் சென்று காத்திருந்தாள். நெடுமாறன் தென்பட்டதும் விரைந்து வந்து அணுகி ஒரே பரபரப்புடன், ''பிரபு! தங்களுக்கு இந்த அரண்மனையில் பேரபாயம் சூழ்ந்திருக்கிறது. உடனே இங்கிருந்து போய் விடுங்கள்!'' என்று அலறினாள்.

நெடுமாறன் சிறிது வியப்புடன், ''என்ன சொல்லுகிறாய்? எனக்கா பேரபாயம் வரப் போகிறது? இந்த ஏழைக்கு யாரால் என்ன அபாயம் நேரக்கூடும்?'' என்றான்.

''சுவாமி! என்னை இனியும் ஏமாற்ற நினைக்க வேண்டாம். தாங்கள்தான் பாண்டிய குமாரர் என்பதை அறிந்து கொண்டேன். உண்மையிலேயே தங்களுக்கு இங்கே பேரபாயம் வருவதற்கு இருக்கிறது. உடனே போய் விடுங்கள், இந்த அரண்மனையை விட்டு!'' என்றாள் மங்கையர்க்கரசி.

(தொடரும்)



''ரிடையர் ஆன பிறகும் ஆபீஸ் போறீங்களே, என்ன விஷயமாம்?''

''புதுசா வேலைக்கு வர்றவங்களுக்கு மாமூல் எப்படி வாங்கறதுன்னு டிரெயினிங் கொடுக்கணுமாம்!''

- ஊ. ரவீந்திரன்

PBF

சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டி

பார்க் டவுன் பெனிபிட் பண்டு லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் துவக்கம் 1985

223, தெற்கு தங்கசாலை வீதி (முதல் மாடி), சென்னை - 600 003. தொலைபேசி: 582676

உங்கள் வசதிக்கேற்றவாறு பயனடைய பற்பலச் சிறந்த திட்டங்களை அளிக்கும்
மேற்கண்ட நிறுவனத்தில் உறுப்பினராகுங்கள்.

பிக்சட் டிபாசிட் திட்டம்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு
13%	14%	15%	17%	18%	18.5	19%	20%

• தனயோகம டிபாசிட் திட்டம் - வட்டி வீதம் 20%

குறைந்த அளவு டிபாசிட் ரூ.20,000/- காலம் 5 ஆண்டுகள். மாத வட்டிக்கான
செக்குகள் முன் கூட்டியே கொடுக்கப்படும்

சேவிங்ஸ் கணக்குகள் மீது 9.5% வரை வட்டி
உங்கள் டிபாசிட்டுகள் 45 மாதங்களில் 2 மடங்காகிறது. 90 மாதங்களில் 4 மடங்காகிறது.

காமதேனு மாபெரும் திருப்பப் பெறும் திட்டம்

பிரதி மாதம் ரூ.100/- வீதம் தொடர்ந்து 15 வருடம் செலுத்துவீர்
5 ம் ஆண்டு முடிவில் ரூ.6000/- ஐத் திரும்பப் பெறுவீர்
10 ம் ஆண்டு முடிவில் மீண்டும் ரூ.6000/- ஐத் திரும்பப் பெறுவீர்
15ம் ஆண்டு முடிவில் மிகப் பெருந்தொகையாக ரூ.50,000/- பெறுவீர்.

பென்ஷனர் நலத்திட்டம்

முதியோருக்கென்றே அளிக்கப்படும் திட்டம்
சேமிப்பு ரூ. 15,000/- வட்டி வீதம் - 19% கால வரம்பு 12 மாதங்கள் மட்டுமே
முன்னதாகவே பெறும் காசோலைகள், விதவைகளும், உடல் ஊனமுற்றோர்களும்
மற்றும் கல்வி, சமய அறக்கட்டளைகளும் சேர்ந்து பயன் பெறலாம்.

ரெக்கரிங் டிபாசிட் திட்டம்

பிரதி மாத டிபாசிட்	ரூ. 25/-ம் அதன் பெருக்கமும் பெற்றுக் கொள்ளப்படும் மாதங்கள் முடிவில் கிடைக்கும் தொகை						
	12	24	36	48	60	72	84
ரூ. 25	330	715	1,180	1,800	2,510	3,350	4,370
ரூ. 100	1,320	2,860	4,720	7,200	10,050	13,400	17,500

செல்வக்களஞ்சியம் டிபாசிட் திட்டம்

உங்கள் குழந்தையைக் குபேரனாகக் காண ஆசையா! இதோ
ரூ.7500/- ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ.1,20,000/- பெறலாம்.
ரூ.9000/- ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ.1,44,000/- பெறலாம்.

கடன் வேண்டுமா? எங்களை அணுகுங்கள். நகைக்கடன் சவரனுக்கு ரூ.2100/- வட்டி விகிதம் ரூ.1.85
கடனுக்கு உச்சவரம்பு இல்லை. தருவதில் தாமதமில்லை.. R.D. கட்ட வேண்டியதில்லை...

கௌரவ ஆலோசகர்:
P.பாலசுப்ரமணியம், B.Sc.
முதன்மை அறங்காவலர்,
கந்த கோட்டம், சென்னை - 3.

இயக்குநர் குழுத் தலைவர்
R.விவேகானந்தன் B.Com.

பங்குதாரர்களுக்கு மட்டும்.

Business Hours: Week Days 8.30 a.m. to 12.30 p.m. & 2.00 p.m. to 6.00 p.m. Sunday 8.30 a.m. to 12 noon.
Friday Weekly Holiday.

கைநாட்டு



சம்பூர்ணம் சாவாள் என்ற நம்பிக்கை எல்லாருக்கும் போய் விட்டது. ரத்னவேலின் பெண்டாட்டி இலகா வாய் விட்டே சொல்லி விட்டாள். கிழவி என்னமோ ராவுலேயே போற மாதிரி லெட்டர் வந்ததைப் பார்த்து, போட்டது போட்டபடி கிடக்க ஓடி வந்து, இன்னையோட பத்து நாளாவுது. இன்னும் போவபாடில்லை. அவள் வாய் விட்டுச் சொல்லி விட்டாள். மற்ற எல்லோருக்கும் உள்ளே குமைந்து கொண்டிருக்கிறது.

முத்துசாமி மட்டும் யாருடனும் வாய் திறந்து ஒரு வார்த்தை பேசவில்லை. ஞானவேல் இரண்டு நாளைக்கு ஒரு முறை கொண்டு வந்து நீட்டும் பாங்க் செக்-புக்கில் மட்டும் கையெழுத்துப் போடுவதோடு சரி. அந்தக் கையெழுத்துக் கூட சம்பூர்ணா உரப்பூச்சி மருந்துக் கடையை அவர் ஸ்தாபித்து வளர்த்ததற்கு ஒரு குறியீடு மட்டுமே. அந்தக் குறியீடு கூட தண்ணீர் பட்ட மை எழுத்துக்களைப் போல அழிந்து விடுவதற்கு அடையாளமாகப் பிள்ளைகள் மூவரும் கூடிப் பேசிய தீர்மானம் இருந்தது. இரண்டாவது முறையாக சம்பூர்

த்திற்கு மாற்றுச் சிறுநீரக அறுவைச் சிகிச்சைக்கு ஒப்பவே இல்லை. டாக்டருக்குப் படித்த கடைசிப் பையன் கனகவேல் மட்டும் முரண்டியிருப்பான் போலிருக்கிறது. எம்.டி. டயாலிஸிஸ் கிளினிக் என்று ஆசை காட்டி அவன் வாயையும் மற்ற இரண்டு பயல்களும் அடைத்து விட்டார்கள்.

முதல் முறை சம்பூர்ணத்திற்கு கிட்னி செயலிழந்த போது அதன் தாக்கமும், சிரமமும் அதிகமாக இருந்தது. முத்துசாமியால் குரல் ஓங்கி எல்லாரையும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடிந்தது. தனித் தனி குடும்பமாகப் போய் விட்டாலும் பிள்ளைகளுக்கும் அம்மா என்ற பாசம் இருந்ததை மறுப்பதற்கில்லை. 'இந்தப் பத்து நாட்களும் நான் அடுப்படியிலேயே கிடந்து சாகிறேன்' என்று வாய்க்கு வாய் பேசும் மூத்த மருமகள் ஞானவேலின் மனைவி காமுகி கூட அப்பொழுது மாமியாருக்குப் பார்த்துப் பார்த்துத் தான் செய்திருக்கிறாள்.

இப்பொழுது யாருக்கும் சம்பூர்ணம் வேண்டாம். முத்துசாமியைத் தவிர. அவளால் நடமாட முடிகிறதோ, தன்னால் இயன்ற காரியத்தைச் செய்ய முடிகிறதோ, 'பசங்க தான் பெரிசாயிடுச்சுன்னு வியாபாரத்தை அவங்க கையில் கொடுக்காம இதென்ன எப்பவும் அதுங்களோட என்ன ராவடி?' என்று அவரைக் கிண்டல் பண்ண முடிகிறதோ இல்லையோ. இதெல்லாம் கூட வேண்டாம். காணும் நேரங்களில் அவளுடைய இருப்பை உணர்த்தும் வண்ணம் மார்புக்கூடு மட்டும் ஏறி இறங்கினால் போதும். அது முடியாமல் போய்க் கொண்டிருக்கிறது.

''ட்ரான்ஸ்ப்ளான்டேஷன் வேணாம். டயாலிஸிஸ் பண்ணிட்டு அவ பாட்டுக்கு இருக்கட்டுமே...'' என்ற முத்துசாமியின் குரல் கூட மெல்ல அடங்கி விட்டது. டயாலிஸிஸில் இருக்கும் சிக்கல்கள் காரணமாகவே அவளுக்கு ஆரம்பத்தில் மாற்றுச் சிறுநீரகம் வைக்கப்பட்டது.

ட்ரான்ஸ்ப்ளான்டேஷன் என்பது அடுத்தவர்களிடம் பெருமையுடன் பேசிக் கொள்ளும் விஷயமாகவும் இருந்ததால் பிள்ளைகள் மூவருமே சுறுசுறுப்புடன் இருந்தார்கள். டோனருக்கு அலைந்ததும் சம்பூர்ணம், டோனர் இருவருடைய பயாப்ஸி சோதனைகளுக்கு வேலூர் ஓடியதும், பேசியபடி தலைக்கு ஐம்பதாயிரம் என செலவு பண்ணியதும், ட்ரான்ஸ்ப்ளான்டேஷன் முடிந்து ஒருநாள் விட்டு ஒருநாள் அலுக்காமல் அவளை நெஃப்ராலஜிஸ்டிடம் அழைத்துக் கொண்டு போவதும் எல்லாமே வீணானது.

சரியாக ட்ரான்ஸ்ப்ளான்ட் ஆன ஒரு வருடத்தில் மாற்றுச் சிறுநீரகம் பொருந்தாமல் போனது. பண விஷயத்தில்தான் முதல் இரண்டு பிள்ளைகளும் மாறியிருக்க வேண்டும். அல்லது மனைவிமார்களுக்குத் தலையாட்டியிருக்க வேண்டும். உரக்கடையில் நல்ல வருமானம் வருகிறது என்றாலும் விற்பதற்குண்டான சொத்து எல்லாமே வாங்கிக் கடனுக்கு ஈடுகொடுப்பதற்காக உள்ளது. ஒன்றரை லட்சம் என்பது ஒரு வியாபாரிக்கு முதல். ஒருமுறை சரி. இரும்பவும் ஒருமுறை என்றதும் யோசிக்கப் போக சம்பூர்ணத்திற்கு சிகிச்சை வேண்டாம் என அழைத்து வந்து விட்டார்கள்.

''மொதல் தடவை ட்ரான்ஸ்ப்ளான்டேஷனப்ப நாம எதைப் பத்தியும் யோசிக்கலை. இப்பொ பணம் காரணமா ட்ரான்ஸ்ப்ளான்டேஷன் நின்னு போவதை அனுமதிக்க முடியலை. பிரதம மந்திரி நிவாரண நிதிக்கும், முதலமைச்சர் நிவாரண நிதிக்கும் எழுதிப் போட்டா தலா இருபதாயிரம் ரூபாய் நிவாரணமா கிடைக்கும். மீதியை நம்ம மூணுபேராலயும் செலவு பண்ண முடியாதா?'' ஞானவேல் சொன்னதற்குச் சம்மதித்து, டாக்டரின் சர்டிஃபிகேட்டை இணைத்து உள்ளூர் எம்பி, எம்.எல்.ஏ. மூலம் பிரதம மந்திரி நிவாரண நிதிக்கும், முதலமைச்சர் நிவாரண நிதிக்கும் விண்ணப்பித்து முடிக்கும் வரை ஒத்துப் போன இரண்டு பிள்ளைகளும் திடீரென்று பின் வாங்கி விட்டனர். சம்பூர்ணத்திற்கும் மரணபயம் வந்திருக்க வேண்டும். அவளும் இரண்டாவது முறை ட்ரான்ஸ்ப்ளான்டேஷன் வேண்டாம் என்று முரண்டு பிடிக்கப் பிள்ளைகள் டயாலிஸிஸ் கூட வேண்டாம் என்று கூட்டி வந்து பிரக்ஞை இல்லாமல் கிடக்கிறாள்.

இன்னப்பட்டியில் விவசாயக் குடும்பத்திலிருந்து பதினெட்டு வயதுப் பெண்ணாக இருந்த சம்பூர்ணத்தை முத்துசாமி கைப்பிடிக்கும் பொழுது, அவருக்கு பிஸினஸ் சரியாக சூடுபிடிக்காமலே இருந்தது. சில்லறையாகவே உரம், மற்றும் பூச்சி மருந்து வாங்கி ஓமலூர், சங்ககிரி, ராசிபுரம் இங்கெல்லாம் போய் அலைந்து விற்க வேண்டிய நிலை. கௌர

சத்தியப்ரியன்



சர்வர் 1 : அந்த ஆளுக்கு மட்டும் சட்னியில நாலஞ்சு கல் போட்டுக் கொடுக்கிறியே, ஏன்?

சர்வர் 2 : அந்தாளு டிப்ஸ் தர மாட்டான், அதான்!

– எஸ். முகம்மது யூசுப்

வம் பார்ப்பது வியாபாரத்திற்கு சக்கு. சம்பூர்ணத்திற்கு வசதி இல்லை என்பதோடு வெளி உலகம் தெரியாத கிராமத்துப் பெண்.

''எழுதப் ப டி க் க த் தெரியுமா உனக்கு?''

''தெரியாது.''

''எத்தனாங்கிளாஸ் வரை படிச்சிருக்க?''

''எங்க வூட்ல பள்ளிக்கூடத்துக்கு அனுப்பலை.''

''அப்பொ கைநாட்டு.''

முத்துசாமி நாற்பது வருஷம் முன்னால் செய்த கேலிக்கு சம்பூர்ணம் அழுதே விட்டாள்.

''சம்பூர்ணம்! தா பாரு! சம்பு! ஏன் அழறே? படிக்கலை என்பதாலா? நான் கேலி பண்ணிப்புட்டேனேன்னுட்டா! வருத்தப் படாதே! நானே ஒனக்கு எழுதப் படிக்கச் சொல்லித் தர்றேன்.''

முத்துசாமியால் சொன்னபடி சம்பூர்ணத்தை எழுத, படிக்க வைக்க முடியவில்லை. முதல் வருடத்திற்குள் ஞானவேல் பிறந்து விட்டான். ஞானவேல் பிறந்த பிறகுதான் முத்துசாமி தாம் வேலை பார்த்து வந்த உரக்கடையிலிருந்த ஸப்-ஏஜென்ஸியை மாற்றி, சம்பூர்ணா உரம், பூச்சி மருந்துக் கடையை ஆரம்பித்தார். சரக்கு வாங்கி வரவும், ஆர்டர் பிடிக்கவும் சேலம் மற்றும் அதைச் சார்ந்த எல்லா கிராமங்களுக்கும் அலைய வேண்டி வந்ததால், வீட்டை நிர்வகிக்க சம்பூர்ணமும், கடையை நிர்வகிக்க முத்துசாமியும் தனித்தனியாகப் பிரிந்து விட்டார்கள். எனவே, சம்பூர்ணத்திற்கு எழுத்து வாசனையே இல்லாமல் போனது.

இன்னமும் பாங்கில் முத்துசாமி பெயரிலும், சம்பூர்ணம் பெயரிலும் ஒரு ஜாயின்ட் அக்கவுண்ட் உண்டு. முத்துசாமி கையெழுத்தும், சம்பூர்ணம் கைநாட்டும் வைப்பார்கள்.

''நாப்பது வருசத்துக்கு முன்னே என்னைப் படிக்க வைக்கலை. எனக்கும் படிக்கணும்னு தோணலை. அவமானமா இருந்துச்சு. கைநாட்டுன்னு சொல்லிக்கக் கூச்சப்பட்டேன். புள்ளைங்களைப் பெத்து ஆளாக்கப் படிப்பு வேணுமான்னு இப்ப தோணுது. வீட்டை நிர்வாகம் பண்ண இந்த கைநாட்டாலும் முடியும்னு இப்ப பெருமையா நினைக்கத் தோணுது. என்ன கொறஞ்சு போயிட்டேன்? மூணு பசங்க, ஒரு பொண்ணு. ஒருத்தன் விவசாயக் கல்லூரி; ஒருத்தன் டாக்டர். பெரிய உரக்கடை. வீடு; தோட்டம்; காடு. போதாது? நான்தான் ஒசத்தின்னு கூவத் தோணுது. கைநாட்டு என்ன கைநாட்டு? பாருங்க. ஒருநாள் இல்லாட்டா ஒருநாள் என் கைநாட்டு மௌக தெரியும்...''என்று மனம் நிறைந்து சொல்வாள் சம்பூர்ணம்.

''மே பதினஞ்சு தேதியாச்சு. ஜூன் வந்தா ஸ்கூல் தொறந்திடும். இப்படியே எவ்வளவு நாள் இருப்பது? நானும் என் வீட்டுக்காரரும் ரெண்டு நாளில் கிளம்பறதா இருக்கோம்'' என்றாள் மகள் தாமிரபரணி.

''எங்க கேஸூம் அதேதான்'' என்றாள் திலகா.

''டாக்டர் தம்பி, முடிவா என்ன சொல்றே?'' என்றான் ரத்னவேல்.

''மூச்சு இருக்குன்னா உசிர் இருக்குன்னு அர்த்தம். ரொம்ப அவசரப்பட்டீங்கன்னா பரவாயில்லைன்னு உசிரோடயே எரிச்சிருங்க...'' என்று கனகவேல் கத்தினான்.

வாக்குவாதம். சண்டை. நடுவில் சம்பூர்ணத்திற்கு விக்கும். அது விக்கல்தானா? என் முன்னால் அடித்துக் கொள்ளாதீர்கள் என்பதைச் சொல்லும் சாவு மொழியா?

''இன்னிக்குச் சாயந்திரம் வரையிலும் பார்க்கிறோம். இல்லேன்னா கிளம்பறதா இருக்கோம்...'' என்று மாப்பிள்ளை பன்னீர் செல்வம் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே சம்பூர்ணத்தின் சுவாசம் சீர்குலையத் தொடங்கியது. கனகவேல் அவசர, அவசரமாக ஸ்டெத்தை காதில் மாட்டிக் கொண்டு சம்பூர்ணத்தின் நாடி பார்த்தான். அவளுடைய மார்பை அழுத்திப் பிசைய ஆரம்பித்தான்.

''பால் வேணா வாயில ஊத்து கண்ணு'' என்ற அத்தையின் மேல் எரிந்து விழுந்தான்.

இவர்கள் கவனத்தைக் கலைக்கும் விதமாக ஞானவேலின் பையன் தினகரன் ஓடி வந்து, ''பாட்டிக்கு ரிஜிஸ்தர் தபால் வந்திருக்கு. கையெழுத்துப் போட போஸ்ட் மேன் கூப்பிடறார்'' என்றான்.

''ரெஜிஸ்தர் போஸ்டா?'' முத்துசாமி குழம்பினார்.

''ட்ரான்ஸ்ப்ளான்ட் பண்ண, சி. எம். ரிலீஃப் பண்டிலிருந்து செக் வந்திருக்கும்!'' என்றான் ஞானவேல்.

''பிரயோஜனம் இல்லை. அவங்க ட்ரான்ஸ்ப்ளான்ட் பண்ணதுக்கு டாக்டர் ஸெர்டிஃபிகேட் கேப்பாங்க...'' என்றான் கனகவேல்.

''முதல்ல ஆன ட்ரான்ஸ்ப்ளான்டேஷனை தேதி மாத்திப் போட்டு ஒரு ஸெர்டிஃபிகேட் கொடுக்கச் சொன்னாத் தீர்ந்து போச்சு!''

பைசா வருகிறது என்றவுடன் பையன் என்ன வேகமாகக் கணக்குப் பண்ணுகிறான் என்று முத்துசாமி அசந்து விட்டார்.

இதற்குள் ரத்னவேல் போஸ்ட்மேனை உள்ளேயே கூட்டி வந்து விட்டான்.

''என்ன ஆச்சரியம் தெரியுமா? முதலமைச்சர் நிவாரண நிதி, பிரதம மந்திரி நிவாரண நிதி இரண்டிலிருந்தும் ஒரே நாளில் செக் வந்திருக்கு. மொத்தமா நாற்பதாயிரம் ரூபாய்க்கு...''

போஸ்ட்மேன் ரெஜிஸ்தர் நம்பர்களை எழுதி வைத்த ஒரு காகிதத்தை நீட்டி, குறிப்பிட்ட நம்பர் ஒன்றின் முன்னால் சம்பூர்ணத்தின் கையெழுத்து வேண்டும் என்றார்.

''அவங்களை இப்ப இருக்கும் நிலையில் தொந்தரவு பண்ண முடியாதுங்களே...'' என்றான் கனகவேல்.

''அவுங்க கையெழுத்து இல்லாம இதைக் கொடுக்க முடியாதுங்க. கவர்ன்மென்ட் மேட்டர். ஏதாவது ஒண்ணு ஆயிருச்சுன்னா என் வேலை போயிரும்.'' போஸ்ட்மேன் மறுத்தார்.

''அவளுக்கு எழுதப் படிக்கத் தெரியாதுப்பா...'' என்றார் முத்துசாமி.

''அப்ப ரொம்ப வசதியாப் போச்சு. அவங்க கைநாட்டை மட்டும் இந்த இடத்தில் வெச்சுக் கொடுத்துடுங்க.''

ரத்னவேல் முன் அறைக்குப் போய் ஸ்டாம்ப்-பேடை எடுத்துக் கொண்டு வந்தான். கனகவேல் தபால்காரர் கொடுத்த பேப்பரை வாங்கிக் கொண்டு கட்டிலின் இடப்புறமாக நகர்ந்து, சம்பூர்ணத்தின் இடது கைப் பெருவிரலில் முத்திரை மையைத் தேய்த்தான். தபால்காரர் சொன்ன இடத்தில் வைத்து அழுத்தி விட்டு, மிக ஜாக்ரதையாக அந்தக் கையைப் படுக்கை மேல் கிடத்தினான். தபால்காரர் நன்றி சொல்லி விட்டுக் கிளம்பினார்.

அவர் போனதும் ரத்னவேல் இரண்டு தபால் உறைகளையும் பிரிக்க, இரண்டுமே நிவாரண நிதிக் காசோலைகள்... நாற்பதாயிரம் ரூபாய்க்கு.

கனகவேல் முகம் வெளுத்துப் போய், ''அம்மா செத்துப் போய்ட்டாங்க'' என்று அழுதபடி சொன்னான்.

''எப்போ?'' என்று முத்துசாமி அலறிக் கொண்டு எழுந்தார்.

''வாசலில் போஸ்ட்மேன் வந்து நிக்கறதா தினகரன் வந்து சொன்னானே, அப்பவே செத்துட்டாங்க...''

சிகரெட்டைத் துறந்த அமைச்சர்!

சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைச்சர் கமல்நாத் சென்ற ஆண்டு பதவியேற்றதும், ''இந்நிமிடம் வரை நானே சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் ஒரு குற்றவாளியாகவே இருந்திருக்கிறேன்'' என்று சொல்லிச் சற்று நிறுத்தியதும், அவர் எதைக் குறிப்பிடுகிறார் என்று நிருபர்கள் திகைத்தார்கள். உடனே தம்மிடமிருந்த சிகரெட் பாக்கெட்டைக் குப்பைக் கூடையில் வீசி எறிந்தார். புகைப்பிரியரான அவர் அதன் பிறகு சிகரெட்டைத் தீண்டியதே இல்லை.

- அ. ஷண்முகசுந்தரம்



''நாடக எழுத்தாளர் ஜ. வி. நிலையத்தின் மீது கேஸ் போட்டிருக்காரா, ஏங்க?''

''அவரது நாடகத்தை 'மறுஒளிபரப்பு' செய்துட்டு அதுக்காக வந்திருந்த பாராட்டுக் கடிதங்களை மட்டும் மறுஒளிபரப்புச் செய்யலையாம்!''

- வி. மனோஹரன்

கல்கத்தாவில் உள்ள உல்டாடங்கா என்ற பகுதியில் ஓர் இளைஞன் லாரி டிரைவரிடம் பணம் வசூலித்துக் கொண்டிருந்தான். அதைப் பார்த்த மந்திரி, காரிலிருந்து இறங்கி அவனை விசாரித்தார்.

போலீஸ்காரர்கள் அந்த இளைஞனைக் 'கப்பம்' வசூலிக்க நியமித்திருந்தனர் என்ற செய்தி தெரிய வந்தது.

போலீஸ்காரர்கள் கல்கத்தாவில் எங்கோ ஓர் இடத்தில்தான் கப்பம் வாங்க, இப்படி 'உதவியாளர்'களை நியமிக்கின்றனர்.

பெரும்பாலான இடங்களில் அவர்களே நேரில் வசூலித்துக் கொள்கிறார்கள்!

- எக்ஸ்பிரஸிலிருந்து

தகவல் : சேலம் சக்திக்கொடி



● டாக்டர் ராஜரத்தினம்

ஆரவாரமில்லாமல் ஓர் அரிய சேவை

போலியோ நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், டாக்டர் ராஜரத்தினத்துக்கு நன்றி சொல்லுகிற காட்சியைச் சேலத்தில் காண முடிந்தது.

ஆமாம்.

ஒரு நயா பைசா செலவு இல்லாமல், சூம்பிப் போன காலை, திருத்தமாக அறுவை செய்து நடக்க வைக்கும் முயற்சியில், பல ஏழைக் குழந்தைகள் பயன் அடைந்திருப்பதைக் கண்டு அவர் பெறுவது அளவற்ற மகிழ்ச்சி மட்டுமே; கூடுதலாகக் குழந்தைகளின் நன்றி.

பனமரத்துப்பட்டியிலிருந்து வந்திருக்கும் பன்னிரண்டு வயதுச் சிறுமி தேவியின் இரண்டு கால்களும் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு, பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ் ஸால் மூடப்பட்டிருந்தன. ஏழு வயதில் ஜுரம் வந்து கால்கள் இரண்டையும் போலியோ தாக்கியதில், பள்ளிப் படிப்பு பாதியோடு நின்றது. அப்புறம் பல மருத்துவமனைகள், மருத்துவர்கள் என்று அம்மாவும் பெண்ணுமாக அலைந்ததில், இருந்த பணமெல்லாம் செலவழிந்தது. பிறகு இங்கே குணமாகிப் போன பெண் ஒன்று ஊரில் போய்ச் சொல்லவே, தேவியை இங்கே கூட்டிக் கொண்டு வந்து சேர்த்தாராம் அவள் அம்மா.

''ஒரே சமயத்தில், சிறிது நேரமே இடைவெளி விட்டு, இரண்டு கால்களையும் ஆபரேஷன் செய்தார்கள் இரண்டு டாக்டர்கள். இரண்டு தடவைக்குப் பதில் ஒரே ஒரு தடவை அனஸ்தீஸியா கொடுத்தால் போதும் பாருங்கள்!'' என்றார் டாக்டர் ராஜரத்தினம்.

டாக்டர் ராஜரத்தினம், தமது மருத்துவமனையில், மூன்று கட்டில்களை இம்மாதிரி போலியோ நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் அறுவைச் சிகிச்சைக்கெனவே நிரந்தரமாய் ஒதுக்கி வைத்திருக்கிறார்.

''செலவை எப்படி சமாளிக்கிறீர்கள் டாக்டர்?''

''அறுவைச் சிகிச்சை செய்யும் மருத்துவர்கள் இலவசமாகச் செய்து விடுகிறார்கள். மருந்துக்கும் பிற தேவைகளுக்குமாக 750 ரூபாய் ஆகிறது. இதை உள்ளூரிலேயே இருக்கிறவர்கள் தரும் நன்கொடைகள் மூலம் சமாளித்து விடுகிறோம்.''

''அரசின் சமூகநல போர்டு, இம் மாதிரி அறுவைச் சிகிச்சைகளுக்கு நிர்ணயித்திருக்கும் குறியை எட்ட, நாங்கள் உதவுகிறோம்!'' என்று டாக்டர் ராஜரத்தினம் சொன்ன போது வியப்பாக இருந்தது. யார் செய்ய வேண்டிய வேலையை, யார் செய்வது!

ரோட்டரி மூலம் போலியோ தடுப்பு முறைகளைப் பிரசாரம் செய்து, தடுப்பு மருந்து விநியோகமும் செய்வதால், சேலம் ரவுண்ட் டேபிள் நெ. *28ன் கீழ், இந்த போலியோ அறுவைச் சிகிச்சைத் திட்டத்தை வெகு சிரத்தையாக நடத்தி வருகிறார்கள்.

சேலத்திலிருந்தும், அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்தும் மட்டும் இங்கே அறுவைச் சிகிச்சைக்காகக் குழந்தைகள் வருவதில்லை. சென்னை முதற்கொண்டு பெரிய நகரங்களிலிருந்தும் வருகிறார்களாம்.

ஆஸ்த்ரிய ரவுண்ட் டேபிள் இதை அவர்களது தேசியத் திட்டமாக அங்கீகரித்திருக்கிறார்கள் என்பதோடு, பதினைந்து லட்ச ரூபாய் பெறுமானமுள்ள உபகரணங்களையும் வழங்கி உதவியிருக்கிறார்கள்.

''என்னுடைய வருத்தமெல்லாம், இருக்கிற பணம், நிலம், சொத்து எல்லாவற்றையும் ஒவ்வொரு வித வைத்தியத்தில் செலவழித்து விட்டுக் கடைசியாக இங்கே வந்து சேரும் குழந்தைகளின் பெற்றோர் மீதுதான்!'' என்கிறார் டாக்டர் ராஜரத்தினம்.

– சித்தார்த்

பிரசாதமாக மரக்கன்றுகள்!

பெங்களூர் ரிப்போர்ட் :

பெங்களூர் மகாத்மா காந்தி ரோட்டில் பயணம் செய்யும் போது, காந்தி சிலையிலிருந்து ஓரியண்டல் பில்டிங் வரையிலும் சாய்வுப் படுகையில் அழகான போகன் வில்லா இருந்ததில்லையா? சாலையை அகலப்படுத்துகிறேன் பேர்வழி என்று மாநகராட்சி போகன்வில்லாவை பத்தை பத்தையாய்ப் பெயர்த்தெடுத்து விட்டது. 'கார்டன் சிட்டி' என்று பெயர் வைத்துக் கொண்டு இம் மாதிரி காரியத்தைச் செய்வதா என்று பொது மக்களும் பத்திரிகைகளும் குரல் எழுப்பினர். 'இருக்கிற அகலம் போதும்; அழகில் கை வைக்காதீர்கள்' - என்றது ஒரு லோக்கல் பத்திரிகை. தற்சமயத்துக்கு நிறுத்தியிருக்கிறார்கள். மாநகராட்சி மற்றும் பொதுப் பணித்துறை அதிகாரிகளுக்கு அழகியல் உணர்ச்சி இருந்தே தீர வேண்டும் என்பதை ஒரு சட்டமாகவே இயற்றினால் கூடத் தேவலாம்!

மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பது போல் குனிகல் துப்பாக்கிச் சூடு விஷயத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சர் ரமேஷ் ராஜினாமா செய்த பிறகும் கூட சிக்கல் அடங்கினபாடில்லை. அமைச்சர் ராஜினாமாவை ஏற்கக் கூடாது. அவர் அமைச்சராகத் தொடர வேண்டும் என்ற கோரிக்கைகளும் போஸ்டர்களும், ஆர்ப்பாட்டங்களும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இதற்கென பெரிய ஊர்வலம் ஒன்றும் நடத்தப்பட்டது. எதிர்க்கட்சிகளாலும் பொது மக்களாலும் கண்டனம் செய்யப்பட்ட சம்பவத்துக்கு ஆதரவாக ஒரு கூலிப் பட்டாளத்தைத் தூண்டி விட்டு அரசியல் லாபம் பெறப் பார்க்கிறார் என்று முன்னாள் அமைச்சர் ரமேஷ் மீது குற்றம் சாட்டுகின்றன எதிர்க்கட்சிகள். பரிதாபம் என்னவென்றில் ரமேஷுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டமும் ஊர்வலங்களும் நடத்திக் கொண்டிருப்பவர்கள் முக்காலே மூணு சதம் தமிழர்கள் என்பதுதான்!

கோவில்களில், மடங்களில் சுவாமிகளைத் தரிசனம் செய்யச் செல்லுகிறீர்கள்... பிரசாதமாக என்ன கிடைக்கும்? குங்குமம்... திருநீறு... பூக்கள்... பழங்கள்... இவைதானே? கர்நாடகத்தில் இப்படித் தரிசிக்க வரும் பக்தர்களுக்கு இனிமேல் பிரசாதத்துடன் ஒரு மரக் கன்றையும் கொடுப்பார் சுவாமிகள். மரம் வளர்க்கும் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கான அரசாங்கத்தின் யோசனை இது. கிராமப்புறங்களில் உள்ள மடங்களின் சுவாமிகள் ஏற்கெனவே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த ஆரம்பித்து விட்டார்கள். இந்தத் திட்டம் நல்ல பலனைத் தந்திருக்கிறதாம். கிராமப்புறத்து மக்கள் தங்களுக்குக் கொடுக்கப்படும் இளங்கன்றுகளை பயபக்தியுடன் வாங்கிச் சென்று நடுகிறார்களாம்.



தமிழகத்திலும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தலாம். சுவாமிகள் மட்டுமல்லாது நம்மூர் அரசியல் தலைவர்களும் இதனைச் செய்யலாம். தொண்டர்களைக் கட் - அவுட் வைக்கச் சொல்லுவதை விடவும் மரம் வைக்கச் சொல்லுவது பயனுள்ள யோசனை இல்லையா?

நாடகக் கலைஞர்களுக்கு ஒரு நல்ல செய்தி. நாடகத்தையே தொழிலாகக் கொண்ட குழு வருடம் முழுக்க நாடகங்கள் நடத்திக் கொண்டிருப்பது சாத்தியமா என்ன? சும்மா இருக்கும் காலங்களில் பணத்துக்கு என்ன செய்வார்கள்? அப்படிப்பட்ட குழுக்களுக்கு நாடகம் நடத்தாமலிருக்கும் காலங்களில் அரசாங்கம் உதவித் தொகை தர வேண்டும் என்ற திட்டத்தை நாடக அகாடமி அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்ய, அரசாங்கமும் ஒப்புக் கொண்டுள்ளது. என்ன, எப்படி, எவ்வளவு என்பதையெல்லாம் அரசாங்கம் விரைவில் அறிவிக்கும்...

– பெர்ணாண்டஸ்

நிலா மயக்கம்

16

"என்ன நந்தினி?" என்று திகைப்புடன் கேட்டான் அருண்குமார்.

நந்தினி பொங்கிப் பொங்கி வந்த விம்மலை அடக்கிக் கொண்டாள். அவசர அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"ஒண்ணுமில்ல அருண். காலைல கல்யாணி ஆபீஸ் வரைக்கும் வர முடியுமா? உங்க கூட நான் கொஞ்சம் பேசணும்."

"வரேன் நந்தினி" என்றான் அருண்குமார்.

"வந்துட்டேன் நந்தினி" என்றான் அருண்குமார்.

முந்தைய இரவின் கலக்கம் நீங்கி, சற்றே மிகையான அலங்காரத்தில் நந்தினி 'பளிச்' என்று இருந்தாள். நந்தினி தான் வேலை செய்த ஆபீஸ் வரை போய் வர தேவராஜிடம் அனுமதி கேட்ட போது, "மலரும் நினைவுகளா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டு, "போய் வா நந்தினி" என்று மனதார அனுமதி அளித்திருந்தான். அவனுக்குக் கூட அவனுடைய ஹெட் ஆபீஸில் வேலை இருந்தது. நந்தினி ஏதோ ஒரு புடைவை ஏதோ ஒரு ரவிக்கை என்று தேர்ந்தெடுத்த போது அவன்தான் "நல்லா பளிச்னு ட்ரஸ் பண்ணிக்க நந்தினி" என்று சொன்னவன். நந்தினியை அலங்காரத்திற்குப் பின் பார்த்து "குட்" என்று திருப்தியடைந்து ஆட்டோவில் கொண்டு வந்து அவளுடைய ஆபீஸில் விட்டவன்.

நந்தினிக்கு, தேவராஜின் மாற்றம் எல்லாமே ஆச்சரியமாக இருந்தது. சந்தோஷமாக இருந்தது. பெங்களூர் போனவுடன் எல்லாவற்றுக்கும் சேர்த்து கச்சேரி வைத்துக் கொள்வானோ என்று பயமாகவும் இருந்தது.

ஆபீஸில் அவளுடன் வேலை செய்தவர்களுக்கு அவளைப் பார்த்த மகிழ்ச்சி அடங்குவதற்குள், அருண்குமாரைப் பார்த்ததால் பிரமிப்பு ஏற்பட்டு விட்டது. ஒரு மாபெரும் இளம்புயல், முன்பிருந்த சமூகத் தருநி மாறிய பின்பும், தான் மாறாமல் பழைய மாதிரியே ஆபீஸில் நுழைந்து ஒவ்வொருத்தராய் விசாரித்து, பழையபடியே நடந்து கொண்டது உலகத்தின் எட்டாவது அதிசயமாகத் தோன்றியது.

எல்லாம் அடங்கச் சற்று நேரமாகி, கல்யாணி அவர்கள் இருவரையும், முன்பு நந்தினியின் ஆபீஸ் அறையாக இருந்த அறையில் தனியாக விட்டு விட்டு விலகிச் சென்ற பின், அருண்குமார் அவளை நிமிர்ந்து அவள் கண்களைத் தைரியமாகச் சந்தித்து "வந்துட்டேன் நந்தினி" என்றான்.

நந்தினி புன்னகை சிந்தி, "தாங்க்ஸ்" என்றாள். மௌனமாக இருந்தாள்.

இரவு முழுக்க அவனுடன் என்னென்னவோ பேச வேண்டும் என்று நினைத்திருந்தாள். இது பேச வேண்டும், அது பேச வேண்டும், இதைப் பேசியே ஆக வேண்டும் என்றெல்லாம் மன ஒத்திகை பார்த்ததில் ராத்திரித் தூக்கம் அவளை விட்டு நழுவி எங்கோ தொலை தூரத்திற்குப் போயிருந்தது.

"சொல்லுங்க நந்தினி."

"வாழ்க்கை சுமையா இருக்கான்னு கேட்டீங்கல்ல?"

அப்படிக் கேட்டது தப்போ என்று அருண்குமாருக்குத் தோன்றியது. அந்தக் கேள்விதான் அவள் மனத்தைக் காயப்படுத்தி விட்டது போலும் என்ற சந்தேகத்துடன் தலையை மட்டும் வெறுமனே அசைத்தான் அருண்குமார்.

"உங்க படத்தைப் பாத்துட்டு அதைப் பத்தி நான் எதுவுமே சொல்லலைன்னு உங்களுக்குத் தோணியிருக்குமே..."

அதற்கும் வெறுமனே தலையை அசைத்தான் அருண்குமார்.

"உங்க நனைந்த ஓவியத்தைப் பாத்ததாலதான் எனக்கு அழுகையே வந்தது..." என்றாள் நந்தினி நிதானமாக.

"ஏன்?" என்று திகைப்புடன் கேட்டான் அருண்குமார்.

"நீங்க உங்க படத்தில என்ன சொல்லியிருக்கீங்க?"

"என்ன சொல்லியிருக்கேன்?"

"பெண்கள் முன்னேற்றம், பெண் விடுதலை பத்தியெல்லாம் சொல்லியிருக்கீங்க..."

"ஆமா."

"பாரதியார் பாட்டெல்லாம் வச்சிருக்கீங்க."

"ஆமா" என்றான் அருண்குமார் இப்போதும் புரியாமல்.

சுபா

''வாழ்க்கைல ஒரு தடவை ஏமாந்த பொண்ணு நனைஞ்சி போன ஓவியம் மாதிரியே தவிர, கெட்டுப் போன ஓவியம் இல்லேன்னு சொல்லியிருக்கீங்க.''

''யெஸ்.''

''நனைஞ்ச ஓவியத்தை மறுபடியும் கூடத்தில மாட்டி, ஏமாந்த பொண்ணுக்கு வாழ்க்கை அமைச்சிக் குடுத்திருக்கீங்க.''

''நான் மனகல எப்படி ஃபீல் பண்ணேனோ அதைத்தான் படத்திலயும் சொல்லியிருக்கேன்.''

''அதை வாழ்க்கையிலேயும் நீங்க திருபிச்சிக் காட்டுவீங்களா அருண்?''

''என்ன சொல்றீங்க நந்தினி?''

''எங்க வீட்டுப் புவனா ஒரு நனைஞ்ச ஓவியம்.''

''உங்க நாத்தனாரா?''

''ஆமா. அவ அப்படி ஆனதுக்கு நான்தான் காரணம்.''

''எனக்கு ஒண்ணுமே புரியலை நந்தினி.''

''நான் ஒரு மாதிரி நிலா மயக்கத்தில இருந்துட்டேன் அருண்.''

''புதிர்ப் பேச்சா இருக்கு இது.''

''நிலா தூரத்திலேர்ந்து பார்க்கக் கொள்ளை அழகு. கிட்டப் போனாத்தான் குண்டும் குழியுமா எவ்வளவு மோசமா இருக்குங்கறது தெரியும்! தூரத்தில தெரியற நிலாவைப் பார்த்து மயங்கிப் போனா அது சரின்னு எப்படி ஒத்துக்கறது?''

''இன்னும் எனக்குப் புரியலை.''

''நான் உங்களை லவ் பண்ணேன். ஆனா என் காதல் நிறைவேறலை. என்னைப் பொறுத்தவரைக்கும் என்னோட காதல் மயக்கத்தை நான் நிலா மயக்கமா நெனைச்சிட்டிருந்தேன். நான் விரும்பின நிலா எனக்குக் கெடைக்கலையேங்கற ஆதங்கமும் எனக்கு இருந்தது. அதனால, புவனா அதே மாதிரியான ஒரு நிலா மயக்கத்தில இருந்தப்ப எனக்கு அவளுக்கு ஹெல்ப் பண்ணணும்னு தோணிச்சி. புவனா தன் காதலன்கிட்டப் போய் சேர்றதுக்கு நான்தான் காரணமா இருந்தேன். எனக்குக் கெடைக்காத ஒரு வாழ்க்கை அவளுக்காவது கெடைக்கட்டுமேன்னு...''

''ம்...''

''புவனா தோத்துப் போய்த் திரும்பி வந்தப்புறந்தான் எனக்கு அவளோட நிலா எவ்வளவு அசிங்கமான நிலான்னு தெரிஞ்சது. புகுந்த வீட்ல எனக்கு அவமரியாதை. காதலை வாழ வைக்கிறேன்னு சொல்லி, புவனாவோட வாழ்க்கையை நாசமாக்கிட்டியேன்னு என் ஹஸ்பெண்ட் என்னைக் கோச்சிக்கிட்டாரு. அவரு என் மேலே நெறைய கோவப்படலை. திட்டலை. ஆனா எனக்கு முள்ளு மேல இருக்கற மாதிரி இருக்கு. தண்ணிலேர்ந்து கரைக்கு வந்த மீன் மாதிரி தினம் தினம் சுவாசத்துக்குத் துடிச்சிக்கிட்டிருக்கேன்.''

''அழாதீங்க நந்தினி.''

''என்னால வேற எதையும் செய்ய முடியலை அருண். புவனாவுக்கு அதுக்கப்புறம்



நெறைய தடவை முயற்சி பண்ணிட்டோம். எதுவும் நடக்கலை. ஒவ்வொரு தடவையும் முயற்சி வீணாறப்ப, 'நான்தானே காரணம்', 'நான்தானே காரணம்'னு மனசு அல்லாடுது! நேத்து நைட் உங்க படம் பாத்துட்டு ரொம்ப உணர்ச்சிவசப்பட்டுட்டேன்! உங்களை வெளிப்படையாக் கேக்கறேன் அருண். எங்க வீட்டு நனைஞ்ச ஓவியத்தை உங்க வீட்டுக் கூடத்தில நீங்க மாட்டி அழகு பாப்பீங்களா?''

அருண்குமார் அசைவற்று உட்கார்ந்திருந்தான். முதல் படத்தில் அவன் தன் கதையை அழுத்தந்திருத்தமாகச் சொன்ன போது, ஒரு சமூகத் திடுக்கிடல் வேண்டும் என்று எதிர்பார்த்து அப்படி அவன் சொல்லவில்லை. உண்மையாகவே பரிதாப நிலையில் இருக்கும் பெண்களுக்கு ஒரு நல்ல எதிர்காலம் அமைய வேண்டும் என்ற எண்ணத்தில் தான் அப்படிச் சொன்னான். அவனுடைய ஊரில் அப்படிப்பட்ட பெண்ணொருத்தி வாழ்க்கையில் ஏமாந்து தற்கொலை முடிவை மேற்கொண்டதைக் கேட்டு அந்த பாதிப்பில்தான் நனைந்த ஓவியத்தைப் படைத்தான். ஆனால் அதற்காக... அதற்காக...

தானே ஒரு முன்னுதாரணமாக மாற வேண்டும் என்று நந்தனியே தன்னிடம் வந்து கேட்பாள் என்று அவன் கொஞ்சங் கூட எதிர்பார்க்கவில்லை.

தான் வாழ்க்கை முழுவதும், நந்தினி சொன்ன அதே நிலா மயக்கத்தில் இருக்க வேண்டுமென முடிவெடுத்திருப்பதைப் பற்றி அவளிடம் சொன்னால் அவள் என்ன நினைப்பாள்? தன்னையே அருண்குமார் நினைத்துக் கொண்டிருக்கிறான் என்ற செய்தி அவள் மனதை எவ்வளவு தூரம் கூசச் செய்யும்? அதுவுமில்லாமல் அவன் ஒரு போலிச் செய்தியாளன் என்று நந்தினி தீர்மானித்து விட்டால்...?

நந்தினியைப் பற்றிச் சிந்திப்பது சுகம்தான். அவளோடு பேசிய பேச்சுக்களை அசைபோடுவது சொர்க்கம்தான். அவளோடு பழகிய சில நாட்களை நினைத்துப் பார்ப்பது ஆனந்தம்தான். ஆனால் அந்த முடிவை அவளிடம் சொல்வதெப்படி?

தன்னை மறந்து வாழும்படி அவளுக்குக் கவிதை எழுதிக் கொடுத்து விட்டு, தான் மட்டும் அதே வாழ்க்கை வாழ்வது அறிந்தால் அவள் எப்படித் துடிப்பாள்?

உண்மையைச் சொல்லி நந்தினியிடம் மறுத்தால் என்ன ஆகும்?

நந்தினி தன்னை விட்டு விலகிப் போய் விடுவாள். மனதளவிலும் கூட. ஆனால் புகுந்த வீட்டில் அவளுக்கு ஏற்பட்ட அவப் பெயர் மாறப் போவதில்லை. நாளுக்கு நாள் நிலைமை மோசமாகிக் கூடப் போகும். அவளுக்கும் அவள் கணவனுக்கும் இடையில் விரிசல் பெரிதாகிக் கொண்டே போகக் கூடும். நாளை நந்தினியே கூட இன்னொரு நனைந்த ஓவியமாக மாறி விடக்கூடும்.

புவனா எப்படி ஏமாந்தாள் என்று தெரிந்து கொள்வதில் அவனுக்கு அக்கறை இல்லையென்றாலும் நந்தினியே எல்லாவற்றையும் சொல்லி *விட்டாள். நந்தினியிடம் உடனே தன் பதிலைச் சொல்லாமல், ஒரே ஒரு நாள் அவகாசம் கேட்டு அவளிடமிருந்து அவன் விடைபெற்று வந்தது கூட, அருண்குமார் தன் நிலையைப் பற்றியும், அவள் நிலையைப் பற்றியும் யோசித்து ஒரு முடிவெடுப்பதற்குத்தான்.

யோசித்துப் பார்த்தால், நந்தினியைப் பற்றிய கற்பனையில் மூழ்கி இருக்கையில் அவனுக்குக் கிடைக்கும் சுகத்தை விட, அவள் மகிழ்ச்சியாக, சந்தோஷமாக இருக்கிறாள் என்ற செய்திதான் அவனுக்கு அதிக மகிழ்ச்சியைத் தரும் போலிருந்தது. நந்தினி சந்தோஷமாக இருக்க வேண்டும்.

அருண்குமார் தீர்மானித்தான். டயலில் விரல் பொருத்திச் சுழற்றிக் கல்யாணி வீட்டை அழைத்தான்.

''ஹலோ... நான் நந்தினி பேசறேன்'' என்று அவள் குரல்தான் கேட்டது.

அருள்வாக்கு

உண்மையான பக்தன் ஒருவன், பரமேசுவரனுக்குப் பூஜை செய்ய விரும்புகிறான். உடனேயே அவனுக்கு ஒரு பெரிய சந்தேகம் வந்து விடுகிறது. ஈசுவரனிடமே கேட்கிறான் : ''ஈச்வரா! நான் உனக்கு உபசாரம் செய்வதாக நினைத்துப் பூஜை செய்தாலும், உண்மையில் அபசாரம் அல்லவா செய்வதாகத் தோன்றுகிறது? திரிலோகமும் வியாபித்த உன் திருவடியை நான் ஓர் உத்தரணி தீர்த்தத்தால் அலம்ப முடியுமா? விசுவாகரமான உன் சரீரத்துக்கு இந்தச் சிறிய வஸ்திரத்தைக் கட்டி மூட முடியுமா? உனக்கு நமஸ்காரம் பண்ணினால், என் காலை எந்தப் பக்கம் நீட்டினாலும் அங்கேயும்தான் நீ இருக்கிறாய். ஆனபடியால் உனக்கு நேரே காலை நீட்டிய தோஷம் அல்லவா எனக்கு ஏற்படுகிறது? சரி, பூஜையே வேண்டாம் என்று பிரார்த்தனை செய்யப் பார்த்தால், எல்லாம் அறிந்த சர்வக்ஞனான உன்னிடம் பிரார்த்திப்பதும் அபசாரமாக அல்லவா ஆகிறது? பிரார்த்தனை என்றால்



உனக்குத் தெரியாததை நான் கேட்பதாகத்தானே ஆகும்? நீ சர்வக்ஞன் என்பதற்கு என் பிரார்த்தனையே குறைவு உண்டாக்குகிறது. இருந்தாலும் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகிற அளவுக்கு நான் குறை உள்ளவனாக இருக்கத்தானே செய்கிறேன்? அதனால் அந்தக் குறை நீங்குவதற்காக உன்னிடம் பிரார்த்திக்கிறேன். அதுசரி, எல்லாமான உன்னிடம் எதைப் பிரார்த்திப்பது? எல்லாமான நீயேதான் நானாகவும் ஆகியிருக்கிறாய் என்று தெரியாமல், என்னைக் குறைவுபடுத்திக் கொண்டிருக்கிறேனே. இந்தக் குறையை நீக்கு என்றே பிரார்த்திக்கிறேன். நீ அகண்ட ஆனந்த ஸ்வரூபம்; உன்னைத் தவிர வேறில்லை என்று வேதம் சொல்கிறது. இருந்தாலும் பூரண ஆனந்தமான உனக்கு வேறாக இப்படிக் கோணலும் மாணலுமாகக் குறையோடு நான் ஒருத்தன் இருப்பது போல் தோன்றுகிறதே? இல்லாவிட்டால் அழுது கொண்டு இப்படி நான் ஒருத்தன் பிரார்த்தனை பண்ண வர வேண்டியதே இல்லையே. இ ப் ப டி நான் உனக்குத் தனியாக இருப்பதாகத் தோன்றுவதைப் போக்கடி. போக்கினால் நீதான் எல்லாமும், நீதான் நானும். அதாவது நான்தான் எல்லாமும் என்று ஆகும். அதாவது உன்னிடம் நான் இதைக் கொடு, அதைக் கொடு என்று வெளி வஸ்துக்களைக் கேட்க வில்லை. என்னையே எனக்குக் கொடு என்றே பிரார்த்திக்கிறேன்!'' - இப்படிச் சொல்கிறார் அந்த பக்தர். இந்த ரீதியிலேயே 'சிவ மானஸி பூஜா' என்ற ஸ்தோத்திரத்தில் பிரார்த்தித்திருக்கிறார் ஸ்ரீஸதா சிவ பிரம்மேந்திரான்.

மஹ்யம் தேஹிச பகவன்
மதீயமேவ ஸ்வரூபம் ஆனந்தம்

''என் ஆனந்த ஸ்வரூபத்தையே எனக்குக் கொடு'' என்கிறார்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

அருண்குமாரின் கண்களில் அவனை யறியாமல் நீர் திரண்டது. எவ்வளவு பரபரப்போடு, எவ்வளவு ஆவலோடு அவள் காத்திருந்தால் போனருகிலேயே காத்திருப்பாள். மழையில் நனைந்து நடுங்கும் சிட்டுக்குருவியை நினைவுபடுத்தினாள் நந்தினி.

''சரி நந்தினி, நான் புவனாவைக் கல்யாணம் பண்ணிக்கறேன்'' என்றான் அருண்குமார்.

டெலிஃபோனில் விம்மல் கேட்டது. ''தாங்க்ஸ் அருண். நீங்க ரொம்ப ரொம்ப உசத்துட்டீங்க அருண்'' என்றாள் அவள் விம்மலினூடே.

அவன் என்னென்ன யோசித்து இந்த முடிவை எடுத்திருப்பான் என்பதை நந்தினி புரிந்து கொண்டாள் என்பது அவள் பேசிய அந்த வரிவிலேயே அவனுக்குப் புரிந்தது.

கெட்டி மேளத்திற்காகக் கையையும், உடம்பையும் குலுக்கு குலுக்கு எனக் குலுக்கி எடுத்த தவில்காரர் கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொண்டார். கருதிப்பெட்டி ஒரே ஒரு உலர்ந்த வெற்றிலையில் காய்ந்த சுண்ணாம்பைப் போட்டு வாயில் அடக்கிக் கொண்டு தங்க விலாஸை உள்ளங்கையில் வைத்து அரக்கிக் கொண்டே சீவாளியைப் 'பீப்பீ' என்று பரிசோதித்த இன்னொரு நாதஸ்வரத்தைப் பார்த்து 'எங்களுக்கு மட்டும்' என்கிற மாதிரி ஒரு சிரிப்பைச் சிந்தியது. 'கல்யாணம் ஜோராக நடந்திரிச்சு' என்று நாதஸ்வரம் கொஞ்சம் அபஸ்வரத்தில் தொடர்ந்தது.

தலைகளை, உடல்களை, சட்டைகளை, புடைவைகளை மீறிப் பார்வையில் பட்ட நாதஸ்வரக் கோஷ்டியை ஒரு விநாடி நேரம் கவனித்து விட்டு, நந்தினி மறுபடி பார்வையைத் தழைத்துக் கொண்டாள். கண்களில் பொங்கிய நீரைக் கட்டுப்படுத்த இயலவில்லை. எப்படித் துடைத்துக் கொள்வது என்று தெரியவில்லை. கண்டு விரலால் சுண்டினாள். தேவராஜ் பார்த்தால் ஆனந்தக் கண்ணீர் என்று நினைத்துக் கொள்வான். நிமிர்ந்து பக்கத்தில் இருந்த தேவராஜைப் பார்த்தாள். அவனும் கண்ணின் நீரைச் சுண்டி விட்டுப் பக்கத்தில் நின்ற நந்தினியைப் பார்த்தான். கையால் அவள் தோளை வளைத்து நெருக்கிக் கொண்டான்.

''இப்படிப்பட்ட ஒரு பொண்டாட்டி கெடைக்கறதுக்கு நான் கொடுத்து வச்சிருக்கணும் நந்தினி'' என்றான்.

''ஷ்ஷ்... என்ன இது இந்த மாதிரில்லாம் பேசிக்கிட்டு?'' என்றாள் நந்தினி வெட்கப்பட்டுக் கொண்டு. கூ ட வே

மணமேடையை நோக்கினாள். அருண்குமார் புவனாவின் கரம் பற்றி அக்னி வலம் வந்து கொண்டிருந்தான். அவன் பின்னால் சென்று கொண்டிருந்த புவனா, தோளுக்குப் பின்னால் முகம் திருப்பி நந்தினியைப் பார்த்தாள். கண்ணீரும் நன்றியும் சமவிகிதத்தில் கலந்திருந்தன அவள் கண்களில்.

கூட்டத்தில் ஒவ்வொருத்தராய் விலக்கிக் கொண்டே பாட்டி அவளுக்குப் பக்கத்தில் வந்து சேர்ந்தாள். முகம் நிறைய மஞ்சள். பெரிய குங்குமப் பொட்டு. கட்டம் போட்ட பட்டுப் புடைவையும், வெள்ளை ரவிக்கையுமாய் இருந்த பாட்டி, நந்தினிக்கு அருகில் வந்ததும், தேவராஜைப் பார்த்து, "டேய் தேவராஜு, சமையக்கட்ல ஒன்னைத் தேடிட்டிருக்காங்க. நீ இங்க நின்னு பொண்டாட்டியைக் கொஞ்சிக்கிட்டிருக்கியே. ஒம் பொண்டாட்டியை யாரும் தூக்கிட்டுப் போகாம நான் பாத்துக்கறேன். நீ போய் என்ன ஏதுன்னு விசாரி..." என்றாள்.

"என்ன பாட்டி இது?"

"அவனைத் தொரத்தத்தான்."

"ஏன்?"

"இதுக்குத்தான்" என்று பட்டுப் பாட்டி நந்தினியின் கன்னத்தில் முத்தமிட்டாள். கை விரல்களை அவள் நெற்றிப் பொட்டில் வைத்து மடக்கி, 'சடசட'வென நெட்டி முறித்தாள்.

"நந்தினியா, கொக்கா? ரொம்ப சாமர்த்தியக்காரிடியம்மா நீ?"

"இல்ல பாட்டி. அருண்குமார் ரொம்ப நல்லவர்."

"அதுவும் சரிதான். இருந்தாக்கூட எங்க வூட்டுப் பொண்ணை நான் வுட்டுக் குடுக்க முடியுமா? இனிமே என்ன? சீக்கிரமா ஒரு கொள்ளுப் பேரனைப் பெத்து என் கைல போடு. அந்தப் பொண்ணு முந்திக்கப் போறா."

"ஐயோ... ஐயோ"

"வெக்கத்தைப் பாரு. கல்யாண வீட்ல வந்து ஐயோன்னு சொல்லாதேடி தங்கம்."

மாலை ஆறு மணிக்கு ரிசப்ஷன் அலங்காரம் முடிந்து புவனா, அருண்குமார் அருகில் சோஃபாவில் உட்கார்ந்து கொண்டாள். பாண்டு வாத்தியம் அமர்க்களப் படுத்திக் கொண்டிருந்தது.

சினிமாத் துறையே திரண்டு வந்திருந்தது. வீடியோவின் லைட்-கன் இடையறாமல் ஒளிர்ந்து கொண்டிருந்தது. ஃப்ளாஷ் வினாடி பிசகாமல் மின்னிக் கொண்டிருந்தது.

நந்தினி, வாழ்த்த வந்த கூட்டத்தின் நடுவில் தானும் ஒருத்தியாகக் கலந்து சென்று, அருண்குமாரை அணுகி, "கங்கிராஜுலேஷன்ஸ்" சொன்னாள்.

கையில் இருந்த பரிசுப் பொருளை அருண்குமாரிடம் நீட்டினாள்.

அது ஒரு சாதாரண கவர்ச் சித்திரம். தங்க விளிம்புகளால் கரையிடப்பட்டிருந்தது. யாரோ ஒரு சிறந்த ஓவியனால் உருவாக்கப் பட்டிருந்தது. சூரிய வெளிச்சம் பிரகாசக் கதிர்களாய் நீண்டு, அப்போதுதான் பசுமையான இலைகளைப் பெற்றிருந்த அழகிய மரமொன்றை நனைத்துக் கொண்டிருந்தது. சித்திரத்தின் ஓர் ஓரத்தில் அந்தக் கவிதை.

உளி பொளிந்து
சிதைப்பதால்தான்
சிற்பம் சிறக்கிறது.
இலையுதிர்ந்த
மரங்களில்தான்
வசந்தம் பிறக்கிறது.
இழந்து பெறும்
வாழ்க்கையிலும் ஏதோ
சுகமொன்று இருக்கிறது.

அருண்குமார் பெற்றுக் கொண்டு அவளைப் பார்த்தான். திகைத்தான். சிரித்தான். "தாங்க்ஸ்" என்றான்.

நந்தினி சிரித்தாள்.

(முற்றும்)



"ஸ்வீட் எடுத்துக்குங்க சார்!"


"என்னய்யா விசேஷம்? குழந்தை பிறந்திருக்கா?"

"ஊஹி... ஊஹி... இல்ல சார். டார்கெட் அச்சீவ் பண்ணிட்டேன்."

"டார்கெட்டா? என்னய்யா அது...?"

"போன மாசம் வரைக்கும் மூவாயிரம் ரூபாய்தான் லஞ்சம் கிடைக்கக்கிட்டிருந்தது. இந்த மாசத்திலேர்ந்து நாலாயிரம் ரூபாயாக ஆயிட்டுது!"

- வி. ராஜப்பா



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542-இல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 90 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒரு நாள் உணவளிக்க, உணவு வகையினை அனுசரித்து சுமார், முறையே ரூ.300/- அல்லது 500/- ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 3000/- அல்லது 5000/- மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்பவேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்யா மஹாராஜா ஸாஹேப் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
D-76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம்—612 001.

****** இந்த நன்கொடைக்கு 80-G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு *****

வேத வைதிக நூல்கள் (விலை தபால் செலவு உட்பட)

I
1. ரிக்வேத ஸம்ஹிதா - நாகராக்ஷரம் - 10 மண்டலங்கள் - ரூ. 365/-
2. யஜுர்வேத ஸம்ஹிதா - நாகராக்ஷரம் - 7 காண்டங்கள் - ரூ. 165/-
3. ஸாமவேத ஸம்ஹிதா - கிரந்தாக்ஷரம் - 2 பாகங்கள் (முதல் பாகம் - ரூ. 185/-, இரண்டாம் பாகம் - ரூ. 210/-)
4. ஸாமவேத அஷ்டப்ராம்மணம் - நாகராக்ஷரம் - 3 பாகங்கள் (முதல் பாகம் - ரூ. 210/- இரண்டாம் பாகம் - ரூ. 110/- மூன்றாம் பாகம் - ரூ. 65/-
5. ஸாமவேத பூர்வாபர ப்ரயோகம் - கிரந்தாக்ஷரம் - ரூ. 80/-

II கிரந்தாக்ஷரத்தில் காரிகையுடன் பிரம்மஸ்ரீ முத்துச்ரௌதிகளால் பதிப்பிக்கப்பட்ட கிரந்தங்களின் மறுபதிப்புகள்
1. போதாயன பூரவாபர ப்ரயோகம் - ரூ. 95/-
2. ஆபஸ்தம்ப பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 90/-
3. ஆபஸ்தம்ப ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 55/-
4. ஆச்வலாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 85/-
5. ஆச்வலாயன ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 50/-
6. கல்ப சிந்தாமணி - ரூ. 55/-

III
1. மனாசேச்லோக - ராமமந்த்ராசே ச்லோக - ரூ. 25/- (மராத்தி மூலம் தமிழ் பதவுரை)
2. ஸ்ரீ ராதாகிருஷ்ண பூஜாவிதானம் - ரூ. 25/- (ஸம்ஸ்கிருதமூலம் - தமிழ் பதவுரை)
3. நளோதந்தம் - நைஷதகாவ்யத்தின் சருக்கம் - ரூ. 25/- (ஸம்ஸ்கிருத மூலம் - ஆங்கில பதவுரை)
4. வடமொழிச் சொற்கடல் - ஸம்ஸ்க்ருதம் - தமிழ் Dictionary ரூ. 80/-
5. வேதபாட வழிமுறை (syllabus) ரிக், யஜுர், ஸாம - ரூ. 25/-

V.P.P. யில் அனுப்புவதில்லை. முழுத்தொகையையும் M.O. (or) Draft மூலம் கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும். செக் மூலம் அனுப்ப வேண்டாம்.

பிரஸிடெண்ட் & டிரஷரர் - A.V.M.S.G.D.P.S. சமிதி, D-76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர்காலனி, கும்பகோணம் - 612 001.

நேரில் வாங்க விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்தில் பெற்றுக் கொள்ளவும் ராஜா வேத காவ்ய பாடசாலை, யாகசாலை தெரு (சக்கரை படித்துறை அருகில்) கும்பகோணம் - 612 001.



!! பெண்களின் மூளையை விட ஆண்களின் மூளை எடையில் கூடுதலாக இருக்கும். ஆண்களின் உடல் எடை கூடுதல் என்பதால் அதற்கேற்ப மூளை இயக்கம் இருக்கவே இப்படி இயற்கையாக அமைந்துள்ளது. இதனால் அறிவுத்திறனில் ஆண் - பெண்ணிடையே வேறுபாடு இருக்காது.

!! ஆண் குழந்தைகளைக் காட்டிலும் சீக்கிரமாகப் பேசவும் வாக்கியங்கள் அமைக்கவும் கற்றுக் கொள்கின்றனர் பெண் குழந்தைகள். எழுத்துக் கூட்டிப் படிப்பதில் சிரமம், திக்குவாய், போன்றவை ஆண்களிடையேதான் அதிகம். வளர்ந்த பருவத்தில் பெண்ணின் மொழியாற்றல் ஆணினுடையதை விடக் கூடுதலாக இருக்கும்.

!! பெண்களின் சராசரி நாடித் துடிப்பு நிமிடத்துக்கு 78 - 82 வரை இருக்கும். ஆண்களது நாடித் துடிப்பு 70 - 72... இந்தக் கணக்கு அமைதியாக இருக்கும் சமயத்தில் மட்டுமே. வேகமான உடற்பயிற்சியில் ஈடுபட்டால் நாடித் துடிப்பு நிமிடத்துக்கு 200 வரை கூடப் போகலாம்.

அட, அப்படியா?

கருவுற்றதும் மறைந்துவிடும் வலி!

!! பெண்களின் vocal cords (குரல் ஒலிக்கச் செய்யும் முக்கிய உறுப்பு) ஆண்களின் vocal cords ஐ விட நீளத்தில் குறைவாய் இருக்கும். இதனால் அவர்களுடைய குரல் கருதி கூடுவதுடன் அவற்றை இயக்குவதற்குத் தேவைப்படும் முயற்சியும் குறைகிறது. எனவே, பெண்கள் குறைந்த அளவு முயற்சியில் நிறையப் பேசலாம்!

!! ஆண்களின் உடலமைப்பு காரணமாக அவர்கள் உடலில் கூடுதலாக ரத்தம் இருக்கிறது. சுமார் 1.5 காலன். பெண்கள் உடலில் உள்ள ரத்தத்தின் அளவு சராசரியாக 0.875 காலன் தான். அது மட்டுமல்ல ஆண்கள் உடலில் உள்ள ரத்தத்தில்தான் சிவப்பணுக்கள் அதிகம்.



!! ஒரு பெண் கருவுற்றதுமே அவளுக்கு உள்ள ஆர்த்தரைடிஸ் வலி அநேகமாக மறைந்து விடுகிறது... இதற்கான காரணம் என்ன என்பது யாருக்கும் தெரியாது.

!! சராசரி கண் பார்வைத் திறனுடைய தந்தைக்கும் வண்ணங்களைப் பகுத்தறிய இயலாத 'colour blidness' உள்ள தாய்க்கும் பிறக்கும் பெண் குழந்தைக்குக் கண் பார்வை சரியாக இருக்கும். ஆனால் அதே ஜோடிக்கு ஆண் குழந்தை பிறந்தால் அவனுக்கு வண்ணங்களைப் பிரித்தறியும் ஆற்றல் இருக்காது.

தொகுப்பு : உதய்லால்



கல்கி பொன்விழா மலர்

◆ ஓவிய மேதைகளும் புகைப்பட நிபுணர்களும் போட்டி போட்டுக் கொண்டு மலரை அழகுபடுத்தியிருக்கிறார்கள்.

◆ இன்றைய பிரபலமான எழுத்தாளர் களின் முதல்தரச் சிறுகதைகள் தவிர, இலக்கிய ஜாம்பவான்களின் எழுத்தோவியங்கள்.

◆ அமரர் கல்கி எழுதிய ''மயில்விழி மான்'' - குறுநாவல்

◆ பாரதி முதல் வைரமுத்து வரை பலரது பொறுக்குமணியான கவிதைகள்.

◆ வண்ணப்படங்களில் வயலூர் முருகன், காஞ்சிப் பெரியவர்கள், ஸ்ரீ சத்திய சாயி பாபா, சதாசிவம் - எம். எஸ். தம்பதி, பாரத ஜனாதிபதி, ராஜாஜி, டி.கே.சி., கல்கி.

◆ வண்ணமடல்களில் விளையாட்டுத் துறை, நகைச்சுவை, சினிமா, நடனம், சங்கீதம், தவிர பாலிதானாவுக்கும் காவேரி நிஸர்கதா மாவுக்கும் நேரில் விஜயம்!

பொன்விழா மலருடன் ஓர் அன்பளிப்பு!

ஸ்ரீ சதாசிவம் - ஸ்ரீமதி எம். எஸ். தம்பதியின்
நல்லாசிகளோடு

கல்கி பொன் விழா சிறப்பு காஸெட்



ஆதி சங்கரர், அருணகிரிநாதர், ராஜாஜி, பாரதியார், கல்கி முதலிய பலரது அற்புதமான பாடல்கள் ஸ்ரீமதி எம்.எஸ்.ஸின் தேன் குரலில் ஒலிக்கின்றன.

தயாரிப்பு : கிராமஃபோன் கம்பெனி (HMV).

ஒரு மணி நேர தேவகானம்!

விலைமதிக்க முடியாத பொக்கிஷம், பொன் விழா மலர் ஒவ்வொன்றுடனும் இலவசம்!

மலரும் கேஸட்டும் ஆகஸ்டு 1உ பொன் விழா மேடையில் வெளியிடப்படுகின்றன.

உங்கள் தேவைக்கு உடனே உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவு செய்து கொள்ளவும். அல்லது கல்கி காரியாலயத்துக்கு எழுதவும்.

விலை ரூ 50/= ரிஜிஸ்தர் தபால் செலவு ரூ 8/-

தாமதமின்றிச் செயல்பட்டால் ஏமாற்றத்தைத் தவிர்க்கலாம்.

மானேஜர், கல்கி, சென்னை - 600 097



ஸ்டுடியோவுக்கு ஆபத்து!

நான் ''நெஞ்சில் ஓர் ஆலயம்'' எடுத்த போது, படப்பிடிப்பு தளத்தின் சுற்றுச் சுவரை இடித்து விடவும் அனுமதி அளித்தவர் நாகிரெட்டி. இப்போதும் துளிக் கூடத் தயங்காமல் அனுமதி தந்தார்.

மளமளவென்று செட்டுக்கு வெளியே பிரும்மாண்டமான தொட்டி உருவாகியது. பெரிய தடாகம் போல் காட்சியளித்தது. தடிமனான களிமண் சுவர். தளத்தினுள்ளே நாற்பது அடி அகலத்துக்கு ஆறு. ஒரு கரையில் மதுக்கடையுடன் கூடிய உணவகம். மறுபக்கம் புரட்சியாளர் ஒளிந்து மறைவாக வாழ ஏற்ற பகுதிகள். ஆர்ட் டைரக்டர் சாந்திதாஸ"ும் இன்ஜினியர் குமாரசாமியும் நன்கு ஒத்துழைத்து சிறப்பாகச் செய்தனர்.

லாரிகளில் தண்ணீர் கொண்டு வந்து தொட்டியை நிரப்பினோம். ஒரு தடவை ஒத்திகை பார்த்து விடலாம் என்று தீர்மானித்தோம். தொட்டி திறந்து விடப்பட, குபுகுபுவென்று தண்ணீர் செட்டுக்குள் அமைந்திருந்த ஆற்றில் ஓடியது. திரும்பவும் தொட்டிக்குள்ளேயே போய்ச் சேர்ந்தது. எல்லாம் சரியாக இயங்கவே ஒரே சந்தோஷத்துடன், ''சபாஷ் குமாரசாமி'', ''வெல்டன் சாந்திதாஸ்'' என்று கைகுலுக்கி, தட்டிக் கொடுத்து மகிழ்ந்தேன். வெற்றிகரமாகவே வேலை முடிந்ததும் பசி தெரிந்தது. எல்லோரும் ஸ்டுடியோவிலேயே உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தோம். ஐந்து நிமிஷம் ஆகியிருக்கும் –

''ஐயோ! ஐயோ!'' என்று அலறியபடி ஆர்ட் டைரக்டர்களின் உதவியாளர்கள் இருவர் எங்களை நோக்கி ஓடி வந்தனர்.

''என்ன? என்ன?''

''தொட்டி உடைத்துக் கொண்டு விட்டது!''

எல்லோரும் கையை உதறி விட்டு எழுந்து ஓடினோம்!

ஒன்றரை லட்சம் காலன் தண்ணீர் நிறைந்த தொட்டி. அடியில் சற்று விரிசல் ஏற்பட, அது வழியே தண்ணீர் பாய, சீக்கிரமே ஓட்டை விழுந்து ''குபுகுபு''வென்று நீர் பெருக்கெடுத்தது. உடனே நடவடிக்கை எடுக்காவிட்டால் தண்ணீர் முழுவதும் வெளியேறி, எங்கள் செட்டை மட்டுமின்றி, மற்றப் படப்பிடிப்புத் தளங்களையும் நாசமாக்கி விடும்! உடைப்பு அகலமாகிக் கொண்டே போக, இன்ஜினியர் குமாரசாமி கையைப் பிசைந்தார்.

அப்போதுதான் அந்த அற்புதம் நிகழ்ந்தது! அதை எங்கள் நல்லகாலம் என்று சொல்லுங்கள்; அல்லது தெய்வசித்தம் என்று வர்ணியுங்கள். எவ்வாறாயினும் சரி, நாங்கள் என்ன செய்வது என்று புரியாமல் திகைத்து நின்ற போது, தொட்டியின் உயரமான மேல் பகுதியிலிருந்து ஒரு பெரிய களிமண் பகுதி கட்டியாக உடைந்து, உள்ளுக்குள் விழுந்து, வெளியேறும் தண்ணீரால் ஈர்க்கப்பட்டு, உடைப்புப் பகுதிக்கு வந்து அதை அடைத்துக் கொண்டது! தண்ணீர் வெளியேறுவதும் நின்றது.

''ஆண்டவன்தான் காப்பாற்றினான்'' என்று எங்களை அறியாமல் கைகூப்பியபடி நிம்மதிப் பெருமூச்சு விட்டோம். இதன் பிறகு நானும் இன்ஜினியர் குமாரசாமியும் ''இனி ரிஸ்க் எடுக்கக் கூடாது'' என்று தீர்மானித்து, களிமண்ணுக்குப் பதில் கான்கிரீட் தொட்டியே கட்ட முடிவு செய்தோம்.

நாகிரெட்டியிடம் மறுபடி அனுமதி கோர, அவர், ''என்ன வேணுமானாலும் செய்து கொள்ளுங்கள்; ஆனால் படப்பிடிப்பு முடிந்து கிளம்பும் போது படப்பிடிப்புத்தளம் முன்பு எப்படி இருந்ததோ அதே நிலையில் விட்டுச் செல்லுங்கள்'' என்றார்.

மறுநாளே சிமெண்ட் மூட்டைகளும் கருங்கல் ஜல்லியும் எஃகுக் கம்பிகளும் வந்திறங்க, தொட்டி கட்டும் வேலை மறுபடியும் தொடங்கியது. போட்ட பட்ஜெட்டைக் காட்டிலும் செலவு பல மடங்காகி விட்டது. ஆனால் சிக்கனம் பார்க்கக்கூடிய விஷயம் இல்லையே, இது!

தொட்டி தயாரானதும் பத்திரிகையாளரை அழைத்துக் காண்பித்தேன். செட்டுக்குள், ஆற்றில் ஒரு கரையிலிருந்து குதித்து, மறுகரைக்கு ஒருவரை நீச்சலடித்துப் போகச் சொன்னேன். பத்திரிகையாளர்கள் அசந்து விட்டனர். இந்தப் பத்திரிகையாளர் கூட்டத்தில்தான் படத்துக்குப் பெயரும் சூட்டினேன். மூலக் கதையின் பெயர் நினைவிருக்கிறதல்லவா? ''அன்று சிந்திய ரத்தம்!'' அதுதானே சிவாஜிக்காக சில மாறுதல்களுடன் திரைப்படமாக உருவாகி வருகிறது? ரத்தம் மண்ணில் சிந்தினால் என்ன ஆகும்? அதனால் இதற்குச் ''சிவந்த மண்'' என்று பெயர் வைத்தேன்.

இரவு நேர எஃபெக்ட், பகல் நேரக் காட்சி என்று ஆறு ஓடிய செட்டில் சிறப்பாக எடுத்தோம். பரிசல் கூடச் செலுத்திப் படமெடுத்தோம் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

ஆற்றங்கரைக் காட்சிகளெல்லாம் எடுத்து முடித்த பிறகு, அதே தளத்தில்

டைரக்டர் ஸ்ரீதர்



சிவாஜி



வஹிதா ரஹ்மான்



ராஜேந்திரகுமார்



காஞ்சனா

பிரமிட் லைட் போட்டார் சாந்திதாஸ். தானாகச் சுற்றி வரும் வகையில் ஒரு மேடை அமைத்து, அதில் போடப்பட்ட எகிப்திய பிரமிட் லைட்டில் சிவாஜி சவுக்குச் சொடுக்க, காஞ்சனா ஆடுவார். ''சவுக்கு டான்ஸ்'' என்று இந்த ஆடல் - பாடல் காட்சி ரசிகர்களால் பின்னால் பெரிதும் வரவேற்கப்பட்டது.

''சிவந்த மண்'' திரைக்கதையில் இன்னொரு சிக்கலான, சிரமமான காட்சி அமைத்திருந்தேன். இரண்டு மலைப் பகுதிகளை இணைப்பது போல் பள்ளத் தாக்கின் மீதாக ஒரு ரயில் பாலம். அதை வெடி வைத்துத் தகர்ப்பது போன்ற காட்சி. ''பிரிட்ஜ் ஆன் தி ரிவர் குவாய்'' என்று ஓர் ஆங்கிலப் படம். அதுதான் இந்த ஒரு காட்சிக்கு இன்ஸ்பைரேஷன்.

இத்தகைய காட்சியைக் கதையில் இணைத்து விட்டேனே தவிர, இத்தகைய ஒரு லொகேஷனுக்கு எங்கே போவது? தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா என்று என் நண்பர்களை அனுப்பி தேடச் செய்தேன். ஊஹூம், பிரயோஜனமில்லை.

கடைசியில் ஒரு நண்பர் மூலமாக, ஆந்திரா, கடப்பா மாவட்டத்தில் இரண்டு மலைப் பகுதிகளை இணைக்கும் ஒரு ரயில்வே பாலம் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். சில உதவியாளர்களுடன் மறுநாளே புறப்பட்டு நந்தியாலுக்குச் சென்றேன். ஆச்சர்யம் தாங்கவில்லை எனக்கு. திரைக்கதைக்கு நான் என்ன எதிர்பார்த்தேனோ, அது அப்படியே அங்கு இருந்தது! பாலத்திலிருந்து கீழே பார்த்தால் அறுநூறு, எழுநூறு அடி ஆழம்! மனதுக்கு ரொம்ப திருப்தி அளித்த லொகேஷன் கிடைத்ததும் மற்ற காரியங்கள் கிடுகிடுவென்று நடந்தன. ரயில்வே இலாக்காவில் ஷூட்டிங்குக்கு அனுமதி பெற்றேன். ஆறு நாள் படப்பிடிப்புக்குத் திட்டமிட்டேன். மூன்று நாள் தமிழுக்கு; மூன்று நாள் ஹிந்திக்கு. இதற்கேற்ப தமிழ், ஹிந்தி நடிக நடிகையரிடம் மூன்று மூன்று நாட்கள் கால்ஷீட் பெற்றேன். படப்பிடிப்புக் குழுவுக்கு என்று ஏசி செய்யப்பட்ட முதல் வகுப்பு ரயில் பெட்டி ஒன்று ரிசர்வ் செய்தேன். சிவாஜி, நான், காஞ்சனா, சாந்தகுமாரி அம்மா, இதர டெக்னீஷியன்கள் என்று எல்லாரும் கடப்பாவுக்குப் பயணமானோம். ராஜேந்திரகுமார், வஹிதா ரஹ்மான் முதலானவர்கள் பம்பாயிலிருந்து விமானத்தில் ஹைதராபாத் வந்து சேர ஏற்பாடாகியது. அங்கிருந்து ஷூட்டிங் ஸ்பாட்டுக்குப் போக கார்கள், வேன்கள் தயாராக இருந்தன.

கடப்பா, கர்நூல், நந்தியால் பகுதிகளை ராயலசீமா என்பார்கள். இங்கே படப்பிடிப்பு நடப்பதே அபூர்வம். அப்படி தப்பித் தவறி நடந்தால் வேடிக்கை பார்க்க வரும் மக்கள் கூட்டத்தைச் சமாளிக்க முடியாது. இதற்குப் பயந்தே அப் பகுதிக்குப் படப்பிடிப்புக்கு யாரும் போவதில்லை! இந்த விவரம் எனக்கு அங்கு போன பிறகுதான் தெரிந்தது! மேலும் எனக்கு இந்த லொகேஷனை விட்டால் வேறு கிடைக்காதே! அதனால், 'என்னவானாலும் சரி, வந்தது வந்து விட்டோம்; ஷூட்டிங்கை நடத்தி முடித்து விடுவது' என்று தீர்மானித்தேன். எல்லோரும் ஸ்பாட்டுக்குப் போய்ச் சேர்ந்தோம். திடுக்கிட்டோம். அலை அலையாக மக்கள் கூட்டம்! அவர்களைக் கட்டுப்படுத்துவது பெரும்பாடாக இருந்தது. எங்கே காமிராவை வைத்தாலும் கதைக்குச் சம்பந்தமில்லாமல் ஒரு மக்கள் கூட்டம் ஃப்ரேமில் தெரிந்தது!

''வேடிக்கை பாருங்கள்; ஆனால் இடைஞ்சல் செய்யாதீர்கள்'' என்று தெலுங்கில் கத்திக் கத்தி தொண்டை வறண்டு விட்டது. முதல் நாள் ஏதோ ஒருவழியாகச் சில

காட்சிகளை எடுத்து விட்டு, ''பேக் அப்'' சொன்னேன். நடிக - நடிகையர், யூனிட் காரர்கள் போன பிறகு, நானும் கேமிரா மேனும் மட்டும் மறுநாள் என் னென்ன காட்சிகளை எப்படி எடுப்பது என்று முன் னேற்பாடாக விவாதித்து, முடிவுகளுக்கு வந்தோம். பின்னர், நாங்கள் தங்க ஏற்பாடு செய்திருந்த விருந்தினர் விடுதிக்குத் திரும்பி னோம். கெஸ்ட் ஹ வு ஸ நெருங்கிய சமயம் அந்த விபரீதம் நடந்தது.

பாலம்



●● சென்னைப் பல்கலைக் கழகம், அஞ்சல் வழிக் கல்வி, பி. காம். ஆங்கில மீடியம் மூன்றாம் ஆண்டுக்கு உரிய பின்வரும் இரு புத்தகங்கள் தேவை. விலை, அஞ்சல் செலவு குறிப்பிட்டு எழுதவும். Income tax Corporate account.

- க. சீனிவாசன்,
3, அக்ரஹாரம்,
தோப்புத் துறை,
வேதாரண்யம்
வட்டம்,
614 809.

●● மாஜிக் கலையை இலவசமாகக் கற்றுத் தரத் தீர்மானித்துள்ளேன். பதினைந்து நாள் பயிற்சி. இந்த ஆண்டு முப்பது பேரை மட்டும் மேடை ஏற்ற எண்ணியுள்ளேன். சுயவிலாசமிட்ட அஞ்சல் உறையுடன் எழுதவும்.

- ''ஜாக்கி''
எஸ். ஆர். லக்ஷ்மிநாராயணன்,
12, மேற்கு சித்திரை வீதி,
ஸ்ரீரங்கம் - 620 006.

●● தமிழ் - இந்தி சினிமா பாடல்கள், பக்திப் பாடல்கள் அடங்கிய LP/EP இசைத் தட்டுக்களைச் சேகரிக்கிறேன். நல்ல நிலையில் உள்ள இசைத் தட்டுக்களை விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ள முகவரி :

- நா. இரவீந்திரன்,
404-A, தேரு வீதி,
திண்டிவனம் - 604 001.

●● கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள் வாழ்க்கை வரலாற்றை எழுத விருப்பம். இம் மகான் பற்றி சரித்திரம், செவிவழிச் செய்திகள், குறிப்புக்கள் இருந்தால் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

- எஸ். சுப்பிரமணியன்,
National Council for Cement
& Building Materials,
Old Bombay Road,
Hyderabad - 500 008.

●● என்னுடன் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பி. ஏ. வகுப்புக்களில் 1938-40 இல் படித்த எஸ். சேஷன், வி. எஸ். ராகவேந்திரன், ஆர். புஷ்பவனம், கே. பத்மநாபன் இவர்கள் என்னுடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

- பி. கே. வேங்கடாசலம்,
142, Cross Bazaar,
Coonoor - 2

●● கோழி வளர்ப்பு பற்றிய புத்தகங்கள் என்னிடம் உள்ளன. பழைய நூல்கள் என்றாலும் நல்ல நிலையில் உள்ளன. அயல்நாட்டு நூல்கள். விலைக்குப் பெற விரும்புவோருக்கு முகவரி :

- வை. பாலசுந்தரம், .
வாழக் குடியிருப்பு,
அழியா நிலை, அறந்தாங்கி,
614 616.

●● 1981 - 85ல் நான் நடத்தி வந்த ''பாரதி'' கையெழுத்துப் பிரதியின் பத்தாவது இதழைப் பெற்றுச் சென்ற சீர்காழி அன்பர் அதனைத் தயவு செய்து எனக்குத் திருப்பி அனுப்ப வேண்டுகிறேன்.

- ஏ. ஆர். வீரராகவன்,
1/33 A, இரட்டைத் தெரு,
ஆனந்ததாண்டவபுரம் - 609 103.

●● பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு, பேராவூரணி தாலுக்காக்களில் அரசு மான்யத்துடன், சொட்டு நீர், தெளிப்பு நீர்ப் பாசனம் அமைக்கவும், சுயவேலை வாய்ப்புப் பெறவும் இலவச ஆலோசனைக்கு ஒரு ரூபாய் தபால் தலையுடன் எழுதவும்.

- ஆர். உலகநாதன்,
பிச்சைக் கட்டளை,
வண்டுவாஞ்சேரி (அஞ்சல்)
தகாட்டூர் வழி - 614 714

(பாலம் பகுதி மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி நிர்வாகம் பொறுப்பேற்க இயலாது.)

டிபாசிட்தாரர்களே...
இப்பொழுது உங்கள் வட்டி
வருமானம் உயர்வதைக் காண்பீர்!

பிக்ஸெட் டிபாசிட்டுகளுக்கு இப்போது மாத வட்டி

15%

கியுமுலேட்டிவ் டிபாசிட்டுகளுக்கு

17.5% முதல்
22.1% வரை

வருட வருமானம்


UIPC SF 26.92

17-6-92 முதல் அமலில் இருக்கும் ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் ஆணைப்படி, இப்பொழுது மாதாந்திர வட்டி தொகைகளுக்கும் மிக உயர்ந்தபட்சமான 15% விகிதம் அளித்து வருகிறோம். இதே போன்று காலாண்டுக்கு ஒரு முறை வட்டி கணக்கிடப்பட்டு வந்த கியுமுலேட்டிவ் டிபாசிட்டுகளுக்கு, மாதாந்திர ரீதியில் வட்டி கணக்கிடப்பட்டு, அசலும் வட்டியும் கூட்டாக இணைந்திடச் செய்கிறோம். நிர்ணய காலத்திற்கு முன்பே முடித்துக் கொள்ளப்படும் டிபாசிட் தொகைகளுக்கும் வட்டி வழங்குகின்றோம். மேலும் உள்ள சிறப்பு அம்சங்களை அறிந்திட, அருகாமையில் இருக்கும் எமது கிளை அலுவலகத்தை அணுகவும்.

சக்தி பைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 475, டாக்டர் நஞ்சப்பா சாலை, கோயம்புத்தூர் 641 018

சக்தி பைனான்ஸ்: ரூ. 500 கோடி "சக்தி" குழுமத்தின் ஓர் அங்கம்



சர்க்கரை · போக்குவரத்து · சோயா · வாகனங்கள் · மலைத்தோட்டங்கள் · குளிர்பானங்கள் · நூற்பாலை · உருக்காலை


● லைசென்ஸ்!


● மறக்க மாட்டார்!


● ரகசிய அறிக்கை!

● ம. செந்தில்நாதன், மதுரை.

? வீட்டுக்குச் சென்று குடிப்பதைத் தவிர்க்கவே 'பார்' வைத்ததாகக் கூறுகிறாரே ஜெயலலிதா?

! 'ஆகா! என்ன பேரறிவு' என்று வியந்து போகிறோம்! பலான சமாச்சாரத்தையும் பாரிலேயே வைத்து விட்டால் வீடே மறந்து விடும். கு டு ம் ப க் கவலையே இராது! பிரச்னை என்ற பேச்சே எழாது!

● ஆர். கார்த்திகேயன், நாட்டரசன் கோட்டை.

? அ.தி.மு.க. பிரமுகர் பா ண் டி ய ன் கொலைக்கு தி.மு.க.தான் காரணம் என்று 'ஜெ' குற்றம்சாட்டியுள்ளாரே?

! கொலைக்கு முழுக் காரணம் பேட்டைத் தகராறுதான். போலீஸிலும் இப்படித்தான் சொல்வார்கள். 'கத்தி எடுத்தவன் கத்தியால் சாவான்' என்ற பழமொழி மறுபடி நிரூபணமாகியுள்ளது. இதை அரசியலாக்குவது சரியல்ல.

● மாரி வெற்றிவேல், பட்டுக்கோட்டை.

? 'முன்பிருந்ததை விட இந்தியா இப்போது அதிக வலுவுடன் இருக்கிறது' என்று நரசிம்மராவ் கூறியுள்ளாரே, அப்படியானால் ராஜீவ் ஆட்சியில் இல்லை என்று அர்த்தமா?

! இடையில் சில காலமேனும் தேசிய முன்னணி ஆட்சியும் சந்திரசேகர் ஆட்சியும் இருந்ததை நீர் மறந்தாலும் நரசிம்மராவ் மறக்க மாட்டார்.

● தி. சி. ஆனந்தகுமார், திருவெண்ணெய்நல்லூர்.

? இளையராஜா, கங்கை அமரன், எம்.எஸ். விசுவநாதன் இணைந்து நடத்திய இன்னிசை மழையில் கங்கை அமரன் சேஷ்டைகளைப் பார்த்தீர்களா? இது ரசிகர்களிடையே தவறான எண்ணத்தை வளர்க்காதா?

! கங்கை அமரன் அப்படி நடந்து கொள்வதை மேடையில் உள்ளவர்கள் ரசிப்பதனால், கங்கை அமரன் அதை ஒரு லைசென்ஸாக எடுத்துக் கொண்டு விட்டார் போலிருக்கிறது. ஆனாலும் 'விசுவநாதன் வேலை வேண்டும்' பாட்டுக்கு எம். எஸ். வியைக் கிண்டலடிக்கிற மாதிரி பாடியிருக்க வேண்டாம்!

● கே. பி. சாரதி, வேலூர்.

? பார்ஸிலோனா ஒலிம்பிக்கில் இந்தியா மகத்தான சாதனை படைக்குமா?

! ஏதோ விம்பாராம் மனக வைத்தால் ஒரே ஒரு சாதனையாவது படைக்கலாம்.

● அருண்குமார், ஈரோடு.

? சம்பாதிக்கும் வயது எது வரை?

! அரசாங்க ஊழியருக்கு 58 வயது வரை. அரசியல்வாதிக்கு ஆடி அடங்கும் வரை.

● இரணியல் கலை, இரணியல்.

? அ.தி.மு.க. மாநாடு பற்றிய இரகசிய அறிக்கையொன்றை மத்திய அ ர சு க் கு கவர்னர் சமர்ப்பித்திருப்பதாகச் சொல்லப் படுவது பற்றி...?

! அரசியல்ரீதியாக ம த் தி ய அரசுக்கும் மா நி ல அரசுக்கும் இடையே லடாய் வராத வரை, கவர்னர் அனுப்பும் அறிக்கைகள் ஆவின் பட்டர்தான்!

அரசியல் கறிவேப்பிலை அ.தி.மு.க.வில் யார்?

● எம். சந்திரசேகர், மேட்டு மகாதானபுரம்.

? 'டான்சி நிலத்தை ஜெயலலிதா வாங் கியது தவறுதான்


● "சதித்திட்டம்"!

● குண்டுவேகதி!



என்றாலும் அதைக் கேட் கும் தகுதி கருணாநிதிக்கு இல்லை' என் கிறாரே வாழப்பாடி?

! அப்படி பார்க்கப் போனால் வாழப் பாடிக்கும் அந்த உரிமை இல்லாது போகும். ஜனநாயகத்தில் தட்டிக் கேட்கும் உரிமை மக்களுக்கு உண்டு என்கிறோம். மக்கள் எல் லோருமே என் ன அரிச்சந்திரன்களா, அல்லது மகாத்மாக்களா? ஆக, தகுதி உள்ள வர்தான் கேட்க வேண்டும் என்ற வாதம் தவ றானது. ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் குற்றம் இழைக்கலாகாது. அதுவும் தங்க ளைத் தேர்ந்தெடுத்த மக்கள் நலனுக்கு எதி ராக எந்தவிதத்திலும் செயல்படக் கூடாது என்பதுதான் முக்கியமே தவிர, அதை யார் எடுத்துக் காட்டுகிறார்கள் என்பது அல்ல.

● முஸ்தபா கமால், தக்கோலம்.

? சசிகலா?

! சசிகலா!

● நிலவழகி, மேல்பட்டி.

? அரசியல் கறிவேப்பிலை அ.தி.மு.க.வில் யார்?

! 'ஜெ'யைத் தவிர மற்ற அனைவரும் என் பது அனைவரும் அறிந்த ஒன்று.

● எம். யாதவன், திருச்சி.

? கவர்ச்சி மோகம் குறைந்து வருவது பற்றி?

! யார் சொன்னது? இந்த வாரம் சினி சிப்ஸ் படியுங்கள். 'பா' வரிசையெல்லாம் கூட 'குஷ்புவே கதி' என்றுதான் பேசுகின் றனர்.

● எஸ். சுரேஷ், கும்பகோணம் ❒

? தொடர்ந்து சினிமா நடிக நடிகையர் முதல்வராக வருவதால் நன்மையா?

! நிச்சயம் நன்மையல்ல. அவர்கள் நடிகர் கள் என்ற கிளாமர் இமேஜ்தான் மக்களின் ஆதரவைப் பெறக் காரணமாகிறது. திறமை, தகுதி, தியாக உணர்வு இருக்கிறதா என்று யோசிக்கும் பக்குவம் நம் மக்களுக்கு இன் னும் வரவில்லை.

● சித்ரா கிருஷ்ணமூர்த்தி, குடந்தை.

? "விவசாயத்துக்குத் தொடர்ந்து மான்யம் அளித்தால் நாடு திவாலாகி விடும்" என நிதி அமைச்சர் மன்மோகன் சிங் கூறியிருப்பது குறித்து?

! இலவசம் என்பதாக ஏதுமில்லை; கடை சியில் வேறு ஒரு வரி வடிவத்தில் மக்கள் தலையில்தான் விடிகிறது என்பது உண் மையே. ஆனால் விவசாயம் என்கிற விஷ யத்தில் மட்டும் இந்த நியதிக்கு விலக்கு அளிக்கலாம். ஏனெனில் பொருளாதார ரீதி யாகப் பார்த்தால் கூட விவசாயப் பொருள் களின் விலை ஏற்றத்தை அனுமதிக்காமல் இருப்பதே நல்லது. அதிலும் ஏழை பாழை கள் நிறைந்த நமது நாட்டில் மிகவும் முக் கியம். எனவே, என்னதான் உலக வங்கி போன்றவை நிர்பந்தித்தாலும் விவசாயத் துறையில் மட்டும் பொருளாதாரச் சீர்திருத் தங்களை ஒரு தடவைக்குப் பத்துத் தடவை யாக யோசித்துத்தான் செய்ய வேண்டும். இந்த விஷயத்தில் மன்மோகனின் சிந் தனை தவறாக இருந்தாலும் பிரதமர் உறுதி யாக இருப்பதாகவே தோன்றுகிறது.

● ஆர். சுப்பராவ், திருக்கோவலூர்.

? "ம து வி ல க் கு க் கொள்கையிலிருந்து நாங்கள் விலகிச் செல்லவில்லை, வெளிச்சம் நாடகம் போடுகிறோம்; சினிமா ஆடுகி றோம்" என்று கூறுகிறாரே ஜெயலலிதா?

! 'ராமாயணத்தைப் படித்து விட்டுத்தான் பெருமாள் கோயிலை இடிக்கிறோம்' என்று சொல்கிறார்!



● வேதநிபு!



● தவறான சிந்தனை!

● நா. பாண்டியன், பெங்களூர்.

? "மத்திய உளவுத் துறை அ.தி.மு.க. ஆட்சியைக் கவிழ்த்து விட்டு, தி.மு.க.வை யும் உடைக்கச் சதித் திட்டம் போட்டிருக் கிறது" என்று கருணாநிதி கூறுகிறாரே?

! ஐயய்யோ! அப்புறம் யார் முதுகில் காங்கிரஸ் சவாரி செய்யும், பாவம்!

● வண்ணை கணேசன், சென்னை.

? உலகில் முட்டாள்கள் இல்லாமலிருந் தால்?

! இந்திரா காந்தியை இழிவுபடுத்தும் ஒரு புத்தகத்துக்கு சாகித்திய அகாதமி பரிசு கிடைத்திருக்காது. "பரிசு கொடுத்ததற்கு நாங்கள் பொறுப்பல்ல; அந்த நூலை சிபா ரிசு செய்தவர்கள்தான் பொறுப்பு" என்று அகாதமி அதிகாரிகள் வழிந்திருக்க மாட் டார்கள். அதிகாரிகளில் ஒருவரான ஓ. பி. சர்மா முகத்தில், டில்லி இளைஞர் காங் கிரஸ் தலைவர் கபில் சர்மா நிஜ கரிச் சாயம் பூசியிருக்க மாட்டார்!

❒ ரூ 25 பரிசு பெறுபவர் :
எஸ். சுரேஷ்,
24, பீமன் தெரு,
கும்பகோணம்.

கலாலயம் இசை வகுப்பு.....



வித்துக் கொண்டிருந்தார். ஞாயிறு ஆனதால், அலுவல கங்களில் பணியாற்றுவோரும் அங்கே கற்றுக் கொள்ளு வதைக் காண முடிந்தது.

'சேலம் கலாலயா'வின் இயக்குநர் வி. ராபர்ட் ஜேம் ஸும் சரி, திருமதி நிர்மலா ராபர்ட்டும் சரி, திருமதி வள்ளி வேலாயுதமும் சரி - இசை-நாட்டியப் பள்ளி ஒழுங்காக நடைபெறுவதில் பெரும் அக் கறை செலுத்தி வருகிறார்கள். இசைப் பரீட்சைக்கு மாணவ-மாணவிகளை அனுப்பி

சங்கீத சேலம்

சேலம், அம்மாப்பேட்டைப் பகுதி யில் கைத்தறி மட்டுமல்ல; கலைகளும் வளர்கின்றன.

வித்யா நகரில் ஒரு மாடி வீடு. அதில் தான் 'கலாலயா' இயங்குகிறது. கர்நாடக இசை, வயலின், வீணை தவிர, கித்தாரும் வாசிக்கச் சொல்லித் தருகிறார்கள் இங்கே. பரதநாட்டியம் சொல்லித் தரும் லதா மாணிக்கம் கலாக்ஷேத்திரா மாணவி.

'சேலம் சகோதரர்கள்' என்று பாடிக் கொண்டிருந்தவர்களில் ஒருவரான பாடகர் டி. வாசுதேவன் கர்நாடக இசை பயிற்று வைப்பதோடு நின்று விடாமல், பல பள்ளிக் கூடங்களுக்கும் போய் இசை நிகழ்ச்சிகள் வழங்கவும் இவர்களைத் தயார் செய் திருக்கிறார்கள். கிராமியக் கலைகள் பற்றிய ஒரு வாரப் பயிற்சி வகுப்பு நடக்கவிருக் கிறது.

அம்மாப்பேட்டைக்கு இப்படி ஒரே யடியாகப் புகழ் குவிந்து விட செய் வ ா ய் ர



கிருஷ்ணமூர்த்தி பாகவதர்



கலாலயம் நாட்டிய வகுப்பு....



* யூத் மியூசிகல் ஆர்கெஸ்ட்ரா

பேட்டை விடுவதாயில்லை. சரவணன்-ரவி சங்கர் என்று இளைஞர்கள் இரண்டு பேர் இன்னும் இருபது பேரைச் சேர்த்துக் கொண்டு, பள்ளியில் இசை கற்பிக்கும் ஆனந்த் மாஸ்டரின் தலைமையில் கிட்டார் இசைக்குழு வைத்து நடத்துகிறார்கள். இந்தக் குழு கல்யாணம், விழா, மீட்டிங் என்று எல்லா இடங்களிலும் சக்கைப் போடு போடுகிறது. கொஞ்சமே கொஞ்சம் கர்நாடக இசை, அப்புறம் இருக்கவே இருக்கிறது சினிமாப் பாட்டுகள்! இந்தக் குழுவின் வெற்றி, இவர்களைத் தேடித் தேடிப் பலரும் வரும் அளவுக்கு உச்சியை எட்டியிருக்கிறது. மாணவர்களின் 'யூத் மியூசிக் ஆர்கெஸ்ட்ரா' வுக்கு யாராவது திருஷ்டி சுற்றிப் போட்டு விட வேண்டும் போல இருக்கிறது!

கிருஷ்ணமூர்த்தி பாகவதர் கதை வேறு. பள்ளியில் படிக்கும்போதே பார்வையை இழந்த இவர் சங்கீதம் பயின்றது சேலம் ஜி. தேசிகனிடம். பிறகு பேராடுவில் பார்வையற்றோர் பள்ளியில் பயின்று, நெசவுத் தொழில், பிரம்பு வேலை எல்லாம் கற்றுக் கொண்டார். சென்னை பின்னி மில்லில் 24 வருடங்கள் தொழில் செய்து, கூடவே கர்நாடக இசைப் பயிற்சியையும் தொடர்ந்திருக்கிறார். இப்போது பிறருக்குச் சொல்லித் தருவதோடு, மேடைகளிலும் கச்சேரி செய்து வருகிறார். எதிர் வீணை இல்லாமல், ஒரே வீணையில் கற்றுத் தருவது இவருடைய ஸ்பெஷாலிடி!

இசை வளர்க்கும் இன்னொரு பெரியவர் கே.ஏ. சங்கரன் செட்டியார். இந்த ஐ வயதிலும் கச்சேரிகளை முழுதும் கேட்டு ரசிப்பதோடு, வாராவாரம் சீனியர், ஜூனியர் வித்துவான்களின் கச்சேரிகளை ஏற்பாடு செய்து நடத்தியும் வருகிறார்!


– எஸ். வி. என்.



"தமிழ்நாடு சுற்றுலா போனியே, என்னென்ன பார்த்தே?"

"மெட்ராஸ்லே 30 கட்-அவுட், திருச்சியிலே 25 கட்-அவுட், மதுரையிலே 70 கட்-அவுட், கோயம்புத்தூர்லே 35 கட்-அவுட், கும்ப கோணத்திலே 18 கட்-அவுட், சேலத்துலே 40 கட்-அவுட், தஞ்சாவூர்லே 20 கட்-அவுட்...."

- குமார்





"போலீஸுக்கு பொது மக்கள் உதவியும் தேவை!"

சேலம் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் ஏ. சுப்பிரமணியம் கொஞ்சம் வித்தியாசமானவர். இவருடைய காருக்குப் பின்னே எப்போதும் ஒரு வேனில் பத்துப் போலீஸ் கொண்ட, எதற்கும் தயாரான அதிரடிப் படை சென்று கொண்டே இருக்கிறது. ஏதாவது வன்முறை என்றால் உடனே அதிரடிப் படை மட்டுமல்ல; எஸ்.பி.யும் களத்தில் இறங்கி விடுகிறார்!

"நகரத்தின் மக்கள் தொகை சுமார் ஏழு லட்சம். இது தவிர வந்து செல்லும் மக்கள் சுமார் ஒரு லட்சம் பேர். இந்த மக்கள் தொகையின் விகிதாச்சாரத்துக்கு ஏற்ற அளவில் போலீஸ் எண்ணிக்கை கிடையாது. கூடவே, சுற்றியுள்ள கிராமங்களின் வறுமை, வேலையில்லா இளைஞர்களை மட்டுமின்றிப் பெரியவர்களையும் சேலத்திற்குத் துரத்துகிறது. இங்கு மட்டும் எல்லோருக்கும் வேலை கிடைக்குமா? எனவே, அவர்களிடையே குற்றமனப் பான்மை (Criminal minded) வளர ஆரம்பித்து விடுகிறது" என்கிறார் சுப்பிரமணியம்.

"எல்லா நகரங்களிலும், அதிகக் கட்டணம் கேட்கும் ஆட்டோக்காரர்கள் போலவே சேலத்திலும் இருக்கிறார்கள். இவர்களை ஓர் ஒழுங்குமுறைக்குக் கொண்டு வர முடியாதா?"

"சேலத்தில் மூவாயிரம் ஆட்டோக்கள் ஓடுகின்றன. ஜங்ஷனிலிருந்து டவுனுக்கு, மற்றும் முக்கிய இடங்களுக்கு இவ்வளவு தான் கட்டணம் என்று போர்டு எழுதி ஸ்டேஷன் வாசலில் வைக்கப் போகிறோம். இது சம்பந்தமாகப் போக்குவரத்துத் துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்துக் கொண்டிருக்கிறோம். அப்படிக் கட்டணத்தை நிர்ணயித்த பிறகுதான் அதிகப்படியாகக் கேட்கும் ஆட்டோக்காரர்களின் மேல் நடவடிக்கை எடுக்க முடியும்."

"இங்கு எக்கச்சக்கமான தியேட்டர்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றில் எந்த வசதியும் கிடையாது. ஏ.சி. போடப்படுவதில்லை; சில தியேட்டர்களில் மின் விசிறிகள் கூடப் போடுவதில்லை..."

"எங்களுக்கு இருக்கும் சட்டம் - ஒழுங்குப் பிரச்னைகளைச் சமாளிக்கவே நேரம் சரியாக இருக்கிறது. இருந்தாலும் கிடைக்கும் நேரத்தில் இதுபோன்ற பிரச்னைகளிலும் கவனத்தைச் செலுத்துகிறோம். அண்மையில் கூட ஏ. சி. போடாமல் இருந்த தியேட்டர் முதலாளிகள் மேல் வழக்குப் பதிவு செய்தோம். இன்று இருக்கும் சமுதாய, அரசியல் அமைப்பு பற்றி உங்க

ளுக்கே தெரியும். அந்த அம்சங்களையும் கவனித்துத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது!''

''பஸ்களில் பிளேடு போடுவது, மற்றும் வழிப்பறிக் கொள்ளைகள், சேலத்தில் அதிகமாகி விட்டன' என்று சொல்கிறார்களே!''

''நகர பஸ்களை நடுரோட்டில் திடீரென நிறுத்திச் சந்தேகப்படும்படியான ஆசாமிகள் இருக்கிறார்களா என்று அடிக்கடி சோதனை செய்கிறோம். எங்கள் கான்ஸ்டபிள் ஒருவரிடம் கையில் தோல் பையைக் கொடுத்து, நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்யச் சொல்லி விட்டு நாங்கள் கண்காணிக்கிறோம். சேலத்தைப் பொறுத்தவரை Organised Rowdism குறைந்து விட்டது. சிலரைக் குண்டர்கள் சட்டத்தில் உள்ளே தள்ளினோம். வழிப்பறி போன்றவற்றைத் தடுக்க மக்களுடைய உதவியும் தேவை. ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் பொது மக்கள் கொண்ட கண்காணிப்பு கமிட்டி ஒன்று உண்டு. ஆனால் பல ஏரியாக்களில் பொது மக்கள் இந்தக் கமிட்டிகளில் பங்கு கொள்ள உற்சாகமாக வருவதில்லை என்பது வருத்தத்திற்குரிய விஷயம். சேலம் நகரத்திற்குப் புதிதாக உதவி போலீஸ் கண்காணிப்பாளர், பொறுப்பில் சேர்ந்திருக்கிறார். இனி குற்ற எண்ணிக்கை குறையும் என்று எதிர்பார்க்கலாம்.''

''இரண்டு வருடத்திற்கு முன் பரபரப்பாகப் பேசப்பட்ட நர்ஸ் கலைச் செல்வி கொலை வழக்கு விசாரணை என்னவாயிற்று?''

''இந்த வழக்கு மத்திய கிரைம் பிராஞ்சுக்கு மாற்றப்பட்டு விட்டது. அவர்கள் தான் விசாரித்து வருகிறார்கள்.''

சேலத்தைச் சுற்றிச் செழிப்பாக இருந்த கள்ளச் சாராயத்தை ஒழித்துக் கட்டிய பெருமை சுப்பிரமணியத்துக்கு உண்டு. சமீபத்தில் எருமைப்பாளையம் மக்கள், 'இனி கள்ளச் சாராயம் காய்ச்சுவதில்லை' என்று இவர் தலைமையில் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். அவர்களுக்கு வங்கிகள் மூலம் சுய வேலை வாய்ப்பு போன்றவற்றுக்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார் எஸ். பி. அவ்வப்போது போலீஸ் படையுடன் சந்தனக் கடத்தல் வீரப்பனை வேட்டையாடவும் சென்று வருகிறார் இவர்!

சந்திப்பு : திலீப்பா



''ஹர்ஷத் மேத்தா விவகாரத்துக்குப் பிறகு ஒரு மாதிரி தாழ்வு மனப்பான்மை வந்துடுச்சுங்க எனக்கு... அரசியலில் நாம் சம்பாதித்த ஆறு கோடியெல்லாம் ஒரு தொகையான்னு!''

- உ. ராஜாஜி.



''சே... சே! இந்த காலண்டர் கம்பெனிக்காரங்க ரொம்ப மோசம்!''

''ஏன் என்ன விஷயம்?''


''பச்சை குத்திக் கொள்ள சுபதினம் அச்சிட்டு இருக்காங்களே!''

- ராஜராயன்.

''விமானம் கிளம்பும் போது பயணிகள்... விமான அதிகாரிகள் எல்லாரும் கைதட்டறாங்களே... ஏன்?''

''ரொம்ப நாளைக்கு அப்புறம் ஒரு விமானம் சரியான நேரத்துக்கு வந்து சரியான நேரத்துக்குக் கிளம்பிச் செல்லுதாம்...!''

- ராஜிராதா



சேலத்தில் இரண்டு, மூன்று இளைஞர் மன்றங்கள் இருக்கின்றன.

ஒரு சங்கத்துக்கு 'இமயம் இளைஞர் சமூக நற்பணி மன்றம்' என்று பெயர். வேலை வாய்ப்புச் செய்திகளை மன்ற வாசலில் போர்டில் எழுதுவது; ஊனமுற்றவருக்கு உதவுவது; தெரு விளக்குகளை எரிய வைப்பது; ஆழ்துளைக் கிணறு பழுது பார்ப்பது; மக்களின் மின்சார பில் பணத்தை வாங்கிக் கொண்டு போய்க் கட்டி ரசீது வாங்கி வருவது; மாதம் ஒரு முறை மக்களின் குறைகளைக் கேட்டு, அதிகாரிகள் கவனத்துக்குக் கொண்டு சென்று தீர்க்க முயலுவது என்று அலுக்காமல் சலிக்காமல் சமூக சேவை செய்து வருகிறார்கள். ஐம்பதே உறுப்பினர்தாம். மாதச் சந்தா மூன்றே



இமயம் இளைஞர் மன்றத்தினர்

நம்பிக்கையூட்டும் இளைஞர் மன்றங்கள்!

ரூபாய்தான்...!

இன்னொரு இளைஞர் மன்றத்துக்குப் பெயர் 'ப்ளூ போர்டு அசோசியேஷன்'.

அக்டோபர் மாதம் பள்ளி மாணவிகளுக்குக் கட்டுரை-பேச்சு-இசைப் போட்டிகள் நடத்துகிறார்களாம், அதுவும் கடந்த ஒன்பது ஆண்டுகளாக! மே மாத விடுமுறைக் காலத்தில் கோடை விடுமுறை வகுப்புகள் நடத்துகிறார்கள். ஆரிய வைசிய சமாஜ நூலகத்துக்கு ஆயிரக் கணக்கில் புத்தகங்கள் வாங்கி வழங்கி இருக்கிறார்களாம். போட்டித் தலைப்பு? கொஞ்சம் சாம்பிள் பாருங்கள் : 'மகாத்மா காந்தியின் மாபெரும் தியாகங்கள்'; 'இன்றைய கல்வி முறை சமுதாயத்துக்கு ஏற்றதா?'; 'நவீன இந்தியாவில் பெண் கல்வி'.

ட்ரீ கிளப் அங்கத்தினர்கள்



மற்றொரு இளைஞர் கூட்டம் 'மரங்களை நடுவோம், மரங்களை வளர்ப்போம், மரங்களைக் காப்போம்' என்று சொல்லிக் கொண்டு 'சேலம் ட்ரீ கிளப்'பை நடத்துகிறது, கையிலிருக்கிற பணத்தைச் செலவழித்து! சேலத்தைப் 'பூங்கா நகர்' ஆக்குவது இவர்கள் லட்சியம். கலெக்டர்தான் போஷகர். ட்ரீ கிளப்பினர் சாலையில் எங்கே கொஞ்சம் இடம் கிடைக்கும், மரத்தை நட்டு வைப்போம் என்று அலை அலை என்று அலைகிறார்கள். குழாய் போடவோ, கேபின்



பசுமேடு அசோசியேஷன்

போடவோ சாலையைத் தோண்டினால் இவர்களுக்கு இதயம் பக் பக்கென்று அடித்துக் கொள்கிறது. மரவளேரியில் மெனக்கெட்டு 240 வேப்பங்கன்றுகளை நட்டு விட்டு, மரமாக வளரும் வளரும் என்று பார்த்துக் கொண்டிருந்தால், இருக்கிற செடியும் கொஞ்சம் கொஞ்சமாக மறைய ஆரம்பித்தனவாம். பகலில் யார்தான் ஒடிக்கிறார்கள் என்று பார்த்தார்கள். இரவு முழுக்கக் கண் விழித்து 'டர்ன்' போட்டுக் கண்காணித்தார்கள். காலை நாலு மணி அளவில் கூட ஒரு துப்பும் கிடைக்காமல் போகவே வெறும் திரும்பிக் கொண்டிருந்தார்கள். ஒரே ஒரு நாள் மட்டும், காலையிலும் கண்காணிப் போமே என்று நின்றிருந்த போதுதான் விஷயம் வெளிப்பட்டது. சாலையில் போகிற அத்தனை பேரும் காலையில் பல் துலக்க வேப்பங்குச்சியை ஒடித்து ஒடித்து மரங்கள் எல்லாம் அம்போ!

ஆனாலும் இவர்கள் மனம்தளர்ந்து போய்விடவில்லை. இப்போதும் அலங்காரக் கொன்னைச் செடியை நர்சரியில் வளர்த்து வைத்துக் கொண்டு காத்திருக்கிறார்கள். இடங்கள் தேர்வு செய்யப்பட்டதும் நட்டு, வேலி போடுவார்களாம். ஆக, சேலத்து இளைஞர்களின் பலர் நம்பிக்கையூட்டு பவர்களாக இருக்கிறார்கள்; மற்ற இளைஞர்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறார்கள் என்பது சந்தோஷப்பட வைக்கிறது.

– சாருகேசி





பூமிக்கு ஆடை கொடுப்போம்!

இந்தப் பூமிக்குக்
கொஞ்சமேனும்
ஆடையைக் கொடுங்கள் -
மரங்களை நடுங்கள்.

வனங்களை அழித்து
உலகமாம் தேவியை
மானபங்கப்படுத்தினால்
பஞ்ச பூதங்களும்
பாண்டவர்களாகப்
பொங்கி எழுவார்கள்.

இன்னும் இன்னும்
அதிகமாய் வேர்கள்
ஊடுருவுவதனால்
நீங்கள் உங்களை
ஸ்திரப்படுத்திக் கொள்ளலாம் -
மரங்களை நடுங்கள்.

பெட்ரோல் கலாசாரம்
கக்கிய புகைகளைச்
சுத்திகரிக்கத்
தொழிற்சாலை வேண்டாமா? -
மரங்களை நடுங்கள்.

பூமியின் நுரையீரல் வனங்கள்.
காற்றோடு உறவாடி
அதன் மாசகற்றும் தேவதைகள்
மரங்கள்.

இந்தப்
பச்சை இராமன்
காலூன்றி நின்றால்தான்
கல்லான பூமியும்
உயிர் பெற்று எழுந்துவரும்.

மனங்களைப் பண்படுத்துங்கள்
மரங்களை நடுங்கள்.

– அருளமுது.



லாரி ஸ்டிரைக் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காரணத்தால், அந்நியாவசியப் பொருள்களைச் சேலத்திற்குக் கொண்டு வருவதிலும், சேலத்திலிருந்து மற்ற இடங்களுக்குப் பொருள்களை அனுப்புவதிலும் பிஸியாக இருந்தார் மாவட்ட ஆட்சியாளர் ராமையா. அதிலும் குறிப்பாக நாமக்கல்லில் தேங்கியிருந்த லட்சக்கணக்கான முட்டைகளை வெளியே அனுப்ப அவர் எடுத்த முயற்சிகளைப் பாராட்ட வேண்டும். அந்தப் பரபரப்பிலும், கல்கிக்காக சிறிது நேரத்தை ஒதுக்கினார் அவர்.

''சேலத்தின் சுகாதாரச் சீர்கேடுகளுக்குக் காரணம், பாதாளச் சாக்கடை இல்லாததுதான். இதோ... அதோ என்கிறார்களே தவிர, எப்போது வேலை முடியும் என்று தெரியவில்லை....''

''சேலம் பாதாளச் சாக்கடைத் திட்டம் உலக வங்கியின் உதவியுடன் செயல்பட இருக்கிறது. 43 கோடி ரூபாய் செலவாகும். கிட்டத்தட்ட ஏற்பாடுகள் எல்லாம் நடந்து முடிந்து விட்டது போலத்தான்.''

''சேலம் நகரில் இன்னும் பல ஏரியாக்களில் குடிநீர்ப் பஞ்சம் இருக்கிறது. மற்றும் இரவு எந்த நேரம் தண்ணீர் விடுகிறார்கள் என்பது தெரியாததால் சில சமயம் இரவு முழுவதும் கண் விழித்துக் காத்திருக்க வேண்டியதாக இருக்கிறது என்று சொல்கிறார்கள்....''

''சேலத்தைப் பொறுத்தவரை நிலத்தடி நீரை எடுப்பது லாபகரமானது அல்ல. காரணம் தண்ணீர் மட்டம் வெகு கீழே போய் விட்டது. மேட்டூர் அணையிலிருந்து சேலம் வழியாக ஆத்தூருக்குக் குடிநீர் கொண்டு செல்வதற்கான வேலை தீவிரமாக

நடந்து வருகிறது. இந்தத் திட்டம் செயல்படும் போது, இதன் மூலம் சேலமும் பயனுறும். மற்றபடி குடிநீர் எப்போது விடுகிறார்கள் என்பதை அறிவிக்கலாம் என்றால் பல சந்தர்ப்பங்களில், பவர் கட் போன்றவற்றால் சொன்ன நேரத்திற்குத் தண்ணீர் விட முடியாது போகிறது. எனினும் பிரச்னைக்குத் தீர்வாக வேறு ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்கிறேன்.''

''சேலத்தில் பல குறுகலான தெருக்கள். நடைபாதைகளில் ஆக்ரமிப்புகள் வேறு. ஜங்ஷனிலிருந்து டவுனுக்கு வருவதற்குள் எல்லா மதங்களைச் சேர்ந்த பக்தி வழி பாட்டுத் தலங்களும் பெட்டிக் கடைகளுமாக ஆக்ரமிப்புகள் இருக்கின்றன. இவற்றை அகற்ற முடியாதா?''

''புதிய பஸ் ஸ்டாண்ட் உள்ள சாலை, சாரதா கல்லூரிச் சாலை போன்றவற்றில்,

''நெத்திமேட்டில் உள்ள தனியார் பள்ளி ஒன்றில், அரசு வழங்கும் ஸ்காலர்ஷிப், மாணவிகளுக்கு ஒழுங்காகப் போய்ச் சேருவதில்லை என்று புகார் வந்துள்ளது.''

''அந்தப் பள்ளிக்கூடம் மிகச் சிறப்பான பள்ளிக்கூடம் ஆயிற்றே. கல்வி அதிகாரிகளைக் கொண்டு விசாரிக்கிறேன்.''

''சேலம் தலைமை மருத்துவமனை பற்றிப் பல புகார்கள் இருக்கின்றன.''

''நான் இங்கு பணியில் சேர்ந்த போது அதன் விவகாரங்களில் கொஞ்சம் நுழைந்து பார்த்தேன். பல பிரச்னைகள் வரும் போல இருந்தது. அங்கு நிலைமைகள் சரியில்லை என்பது எனக்குத் தெரியும். பல விஷயங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் இந்த விவகாரத்தில் நான் செயல்பட வேண்டியிருக்கிறது.''

''கிச்சிப்பாளையத்தில் உள்ள நகர

சுறுசுறுப்பான சேலம் கலெக்டர்

போக்குவரத்திற்கு இடைஞ்சலாக உள்ள ஆக்ரமிப்புகளை அகற்றிச் சாலைகளை அகலப்படுத்தியிருக்கிறோம். நடைபாதையில் உள்ள வழிபாட்டுத் தலங்கள் பல வருடங்களாக இருப்பவை. மக்களுடைய மத உணர்வுகளைப் பார்த்துத்தான் செயல்பட வேண்டியிருக்கிறது.''

''சேலம் ஜாகிர்பாளையத்தில் உள்ள மயானத்தைச் சுற்றிலும் ஜவ்வரிசி தொழிற்சாலைகள் வந்து விட்டதால், சுடுகாட்டுக்குச் செல்லும் பாதை அடைபட்டுப் போய் விட்டது. இதனால் நான்கு கி. மீ. சுற்றிக் கொண்டு மயானத்திற்குச் செல்ல வேண்டியதாக இருக்கிறது...''

''இது பற்றிய புகார் எனக்கு ஏற்கெனவே வந்திருக்கிறது. பத்திரிகைகளிலும் வந்தது. நான் உடனே பஞ்சாயத்து பி. டி. ஓ. வைக் கூப்பிட்டு விசாரிக்கும்படி உத்தர விட்டேன்.'' (இந்த விஷயத்தை follow செய்யும்படி உதவியாளரிடம் உத்தர விட்டார் கலெக்டர்)

சபைப் பள்ளி ஒன்றின் தலைமையாசிரியர், மாணவர்களிடத்தில் பணம் பிடுங்குகிறார் என்றும் அரசு இலவசமாகக் கொடுக்கும் செருப்பு, புத்தகம், சீருடை போன்றவற்றை வழங்குவதில் ஊழல் செய்கிறார் என்றும் புகார்கள்.

(கலெக்டர் முகத்தைச் சுளிக்கிறார்)

''இதுதான் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்தவென்றே சிலர் இருப்பார்கள். கண்டிப்பாக விசாரிக்கிறேன்.

கலெக்டர் ராமையா சிதம்பரனார் மாவட்டத்தைச் சேர்ந்தவர். ஐ. ஏ. எஸ். பணிக்கு வரும் முன் ரிசர்வ் வங்கியில் வேலை பார்த்தவர். இவரும் எஸ். பி. யான சுப்பிரமணியமும், ஒரே பாட்ச் என்பதால் தோஸ்துகள். இதனால் மாவட்ட நிர்வாகம் எந்தச் சிரமமும் இல்லாமல் செல்கிறது என்கிறார்கள் அதிகாரிகள்.

சந்திப்பு : ஸ்ரீநிவாசன்



● ராஜாமணி



● கோப்பெருந்தேவி

பிரிந்த மனங்களைச் சேர்க்கிறார்கள்!

கணவன்-மனைவி, ஒரு குழந்தை. இதுதான் அந்தக் குடும்பம். எந்தவிதப் பிரச்னையுமின்றிச் சந்தோஷமாக நடந்து கொண்டிருந்தது வாழ்க்கை. திடீரென ஒருநாள் மனைவி கேள்விப்பட்ட செய்தி, அவளது அடிவயிற்றைக் கலக்கியது. கணவன் தனது அலுவலகத்தில் வேலை செய்யும் இன்னொரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருக்கிறான் என்பதுதான் அந்தச் செய்தி. மனைவி கணவனிடம் என்ன, ஏது என்று கேள்விகள் கேட்க, தென்றல் வீசிக் கொண்டிருந்த குடும்பத்தில் புயல் வீச ஆரம்பித்தது.

''அப்புறம் மனைவியின் எதிர்ப்பைச் சற்றும் பொருட்படுத்தாமல் அந்தக் கணவன், அலுவலகப் பெண்ணை வீட்டிற்கே கூட்டிக் கொண்டு வந்து குடும்பம் நடத்த ஆரம்பித்து விட்டான். மனைவியும், குழந்தையும் கிராமத்தில் உள்ள சொந்தக்காரர்கள் வீட்டிற்குச் சென்று விட்டனர். இப்போது உடைந்த குடும்பத்தை ஒட்ட வைப்பதற்கு நாங்கள் முயன்று கொண்டிருக்கிறோம்...'' என்று சொன்னார்கள் சேலம் சகோதரி குடும்ப நல ஆலோசனை மையத்தின் முழு நேர சமூக சேவகிகளான செல்வி ராஜாமணியும், திருமதி கோப்பெருந்தேவியும்.

மத்திய சமூக நல வாரியத்தின் உதவியுடன் செயல்படுகிறது இந்த அமைப்பு. வரதட்சணைக் கொடுமை, மற்றும் பலவித பிரச்னைகளால் பிரிந்து விட்ட கணவன், மனைவி இருவரையும் கூப்பிட்டு, விசாரித்து, ஆலோசனைகள் சொல்லி மீண்டும் இணைந்து வாழ வழி செய்கிறது இந்த மையம்.

இது வரை 106 வழக்குகள் மையத்தின் கவனத்திற்கு வந்திருக்கின்றன. அதில் 34 வழக்குகள் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டன. மற்ற வழக்குகளில் விவாகரத்து, ஜீவனாம்சம் போன்றவைகளைப் பெற மேல் நடவடிக்கைக்காக மாவட்ட இலவசச் சட்ட உதவி மையத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். பெண்கள் கல்வி, பெண்களுக்கெதிரான வன்முறைகள் ஆகிய தலைப்புகளில் கருத்தரங்குகள் நடத்தியிருக்கிறார்கள்.

வாரம் ஒரு முறை மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர் மக்களிடம் புகார் வாங்கும் போது மையத்தின் சமூக சேவகிகளும் அங்கு செல்கிறார்கள். அவரிடம் புகார் கொடுக்கும் பல பெண்மணிகளின் பிரச்னைகளைத் தீர்க்கும் பொறுப்பை மையத்தின் கையில் கொடுக்கிறார் எஸ்.பி.

''கணவன் - மனைவி இருவரும் மனம் விட்டு விஷயங்களைச் சொன்னால்தான் எங்களால் தகுந்த ஆலோசனை சொல்ல முடியும். முதலில் பேசவே தயங்குகிறார்கள். கொஞ்சம் கொஞ்சமாகத்தான் எங்கள் மேல் நம்பிக்கை வைத்துப் பேச ஆரம்பிக்கிறார்கள். ஒரு நாள் ஆலோசனையிலேயே எல்லாம் சுமுகமாக முடிந்து விடாது. பல நாட்கள் பேச வேண்டியிருக்கும். நிறைய கேஸ்கள் பாலியல் பிரச்னைகளாகவும் வருகின்றன. தகுந்த மருத்துவ உதவிக்கு நாங்கள் வழி செய்கிறோம்.

''சில கணவன் - மனைவிகளுக்குள் பூசல் இருந்தாலும், வெளியே தெரிந்தால் தங்களுக்குத்தானே அவமானம் என்று பூசி மெழுகி வைப்பார்கள். இது போன்ற ஒரு கேஸ் மையத்திற்கு வந்தது. மனைவி, கணவன் மேல் புகார் சொல்ல, அவனிடம் விசாரித்தபோது, 'சே... சே... அதெல்லாம் ஒன்றுமில்லை!' என்று மறுத்து விட்டான். தனது குடும்ப விஷயம் நான்கு பேருக்குத் தெரிந்து பஞ்சாயத்துக்கு வந்து விட்டதே என்ற மனப்புழுக்கத்தில் இப்போது மனைவியுடன் பிரச்னைகளை அவனே பேசித் தீர்த்து, நல்லபடியாகக் குடும்பம் நடத்துகிறான்.....'' என்று சொல்கிறார்கள் ராஜாமணியும், கோப்பெருந்தேவியும்.

– கௌசல்யா

புதுகை அச்சகத்தில் அச்சிட்டவர் மற்றும் மங்கையர் மலர் கேரளா பாஸ்ட்டோர் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் : ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

BPL



உங்கள் வாழ்க்கையின் இணைப் பிபிஎல் அஜீத்

புகழ் பெற்ற பிபிஎல் குழுத் தயாரித்து வழங்கும் பிபிஎல்-அஜீத்ப்ளாக் & ஒயிட் டிவி, கலர் டிவியைப் போன்ற அழகான தோற்றமுடையது.
51 செ.மீ. மற்றும் 36 செ.மீ. அளவுடைய இந்த டிவிகள் எலெக்ட்ரானிக் மற்றும் டர்ரெட் ட்யூனர்களோடு பல வகையான மாடல்களில் கிடைக்கின்றன.
பிபிஎல் அஜீத் தற்பொழுது SMPS நுணுக்கத்தோடு கிடைப்பதால், ஏற்றதாழ்வான வோல்டேஜ் பற்றிய கவலை இனி வேண்டாம். இடைவிடாத செயல்திறனோடு, முழுமையான பாதுகாப்போடு வருவது பிபிஎல் அஜீத்.
அருகாமையிலுள்ள பிபிஎல் டீலரை அணுகி, பிபிஎல் அஜீத் ப்ளாக் & ஒயிட் டிவியை இன்றே உங்கள் இல்லத்திற்கு உரித்தாக்கச் செய்யுங்கள்.

SMPS

ப்ளாக் & ஒயிட் டிவி

இப்பொழுது
குறைக்கப்பட்ட விலை



மனதிற்கினிய ஒலி
பிபிஎல்-அஜீத்தின்
ஒளி

KAMERAD-NEWS BPL 187/92 TAM R

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

